கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(05.08.2018 - 05 ஆவணி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 08, கதிர் - 189, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018





# ஞான ஒளி

ඥාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05


# மடுக்கோவில் பிரதேசத்தினை புனித பூமியாகப் பிரகடனப்படுத்த அபிவிருத்தி திட்டங்கள்

**மேன்மைத்தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள்**




மடுக்கோவில் நிலப்பிரதேசத்தினை புனிதப் பூமியொன்றாகப் பிரகடனப்படுத்துவதும், அப்பிரதேசங்களை அண்மித்ததாகப் போக்குவரத்து வசதிகள், வீதி வசதிகள், துப்பரவேற்பாட்டு வசதிகள் போன்றவற்றை மேம்படுத்துவதும், அதேபோன்று நீர் வளங்கள் கட்டமைப்பினை புனரமைப்புச் செய்தலும், இப்பிரதேசத்திற்கு வெளிப்பிரதேசங்களிலிருந்து சமூகமளிக்கின்ற மக்களுக்காக தங்குமிட வசதிகள், ஓய்வு மண்டபங்கள் போன்ற விசேட வசதிகளை வழங்குதல் உள்ளடங்கலாக மடுக்கோவில் அண்மித்த நிலப்பிரதேசத்தில் விசேட அபிவிருத்தி கருத்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கும் எதிர்பார்க்கின்றேன்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## வாழ்த்துகின்றோம்

### பெயர் கொண்ட திருநாள்



பதுளை மறைமாவட்ட ஆயர்
**மேதகு வின்சன் பர்னாந்து S.S.S**
ஆண்டகை 02.08.2018 அன்று தனது பெயர் கொண்ட தினத்தை நினைவுகூருகின்றார்.



கண்டி மறைமாவட்ட ஆயர்
**மேதகு ஜோசப் வியான்னி பர்னாந்து**
ஆண்டகை 04.08.2018 அன்று தனது பெயர் கொண்ட தினத்தை நினைவுகூருகின்றார்.

இவர்களை ஞானஒளி இறையாசீருடன் வாழ்த்துகின்றது.

## ஆயர்த்துவ வாழ்வின் பொன்விழாக் கொண்டாட்டம்



கொழும்பு உயர்மறைமாவட்டத்தினால் ஏற்பாடு செய்திருந்த நன்றித் திருப்பலியானது பொரள்ளை, சகல புனிதர்கள் தேவாலயத்தில் நடைபெற்றது. இத்திருப்பலியில் இலங்கையின் அனைத்து மறைமாவட்ட ஆயர்களும் கலந்து சிறப்பித்தனர். அதிமேதகு பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகையுடன் இணைந்து புகைப்படம் எடுத்ததை படத்தில் காணலாம்.

## மேன்மைத்தங்கிய ஜனாதிபதி அவர்கள் மடுத்திருத்தலம் விஜயம்.






மருதமடு திருத்தலத்திற்கு எமது நாட்டின் மேன்மைத்தங்கிய ஜனாதிபதி அவர்களும், அவர் குடும்பத்தினரும், எமது பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையும் சென்று மடுமாதாவிற்கு வணக்கம் செலுத்தி மலர்களைச் சூட்டுவதைப் படத்தில் காணலாம்.

## இறைபதம் அடைந்தனர்.



மாதம்பையில் இயேசு சபையின் உப அருட்தந்தையாக இருந்த நிலான் பிரசங்க பர்னாந்து அவர்கள் ஆடி மாதம் 12ம் திகதி காலமானார். இவரது இறுதிக் கிரிகைகள் ஆடி மாதம் 15ம் திகதி கண்டி லேவெல்லையில் நடைபெற்றது.



சலேசியன் தொன் பொஸ்கோ சபையின் இந்நாட்டு முதல் அருட்தந்தையான அருட்பணி இம்மானுவேல் ஜான்சன் அடிகளார் காலமானார். இவரது இறுதிக் கிரிகைகள் ஆடி மாதம் 26ம் திகதி தங்கொட்டுவையில் அமைந்த தொன் பொஸ்கோ நடுநிலையத்தில் நடைப்பெற்றது.



அனுராதபுர மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. சுனில் குணவர்த்தன அடிகளார் ஆடி 27ம் திகதி இறைபதம் அடைந்தார். இவரது இறுதிக் கிரிகைகள் 30ம் திகதி பி.ப 2.30 மணிக்கு அனுராதபுரம் புனித சூசையப்பர் பேராலயத்தில் திருப்பலியுடன் நடைபெற்றது



**தேவத்தை நோயாளர்கள் தினம் 26.08.2018**

பிற்பகல் 1.30 மணிக்கு செபமாலை தியானத்துடன் ஆரம்பமாகும்.

**திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்காக செபிப்போம்...**

---

**பொருளியலாளர்கள் மற்றும் அரசியல் வாதிகள் எடுக்கும் எந்த நீண்ட காலத் திட்டமும் குடும்பங்களை மானுடத்தின் கருவூலமாகப் பாதுகாக்கும்படியாக...**

## குருத்துவ திருநிலைப்படுத்தலின் 25வது வருட வெள்ளிவிழாவைக் கொண்டாடிய அருட்தந்தையர்கள்.





**ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள் (தி.பா 34)**

# அனைவரின் கவனத்திற்காக!



அண்மைக் காலத்தில் இலங்கையின் ஜனாதிபதி அவர்களால் மற்றும் பாராளுமன்ற அறிக்கையினால் பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட முடிவின் நிமித்தம் சிறைச்சாலைகளில் போதைப்பொருளுக்கும், பாதாள குழுதொடர்புகளுக்கும் சம்பந்தமான தூக்கு தண்டனைக் கைதிகளாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்குவது குறித்த விடயத்தில், நான் தெரிவித்திருந்த கருத்துக்களில் உண்மையான அர்த்தத்தினை தவறாக விளங்கிக் கொண்டு நான் தூக்கு தண்டனை வழங்குவது குறித்து, பொதுப்படையாகவே சார்பாக இருந்து, ஆமோதிப்பதாக எழும்பியுள்ள தவறான கருத்தினைப் பற்றி நான் அறிவேன்.

முதலில் நான் கூற விரும்புவது, எமது வாழ்வை, உயிரை நாம் இன்னொருவருக்கு தானம் செய்வதில்லை. ஆகையால் இன்னொருவரின் உயிரை அவரிடமிருந்து பறிப்பதற்கு எமக்கு உரிமையில்லை. இது பொதுவான தர்மமாகும். கிறிஸ்துவின் தர்மமும் இவ்வாறே குறிப்பிடுகின்றது. எனினும் சமூக ஒருமைப்பாடு மற்றும் வாழ்வாதாரம் சீர்குலையும் விதத்தில் அமைந்த கொடூரமான சீர்கேடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டதனால், மரண தண்டனை நியமிக்கப்பட்ட போதும் சிறைச்சாலைக்குள் இருந்தே பாரிய வன்செயல்களில் ஈடுபடுபவர்களிடமிருந்து இச் சமூகத்தை பாதுகாக்கும் பொறுப்பு உள்ளதென்பதை நாம் அறிவோம். இவ்விடயம் குறித்து எம் ஜனாதிபதி அவர்கள் உள்ளிட்ட அரசாங்கம் எடுத்த முடிவு குறித்து சமூகத்தின் பொதுநலன் கருதி, எடுக்கப்பட்ட தீர்மானம் என்பதை எமக்கு தெளிவாக அறியக்கூடியதாய் உள்ளன. இதனைக் குறித்து கத்தோலிக்க திருச்சபையின் உத்தியோகபூர்வ மறைப்போதகத்தில் குறிப்பிடுவது வாழ்வை பாதுகாத்துக் கொள்ள நாம் கடமைப்பட்டிருப்பினும், சில வன்மையாக, பாரதூரமான விடயங்களின் போது சமூகத்தின் சமாதானம், பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாடு குறித்து இவற்றை பாதுகாத்துக் கொள்ள மரண தண்டனையை அமுல்படுத்துவது சாதாரணமாகும். பிழையான விடயமாகாது. "ஏதாவதொரு வன்செயலின் குற்றம் சாட்டப்பட்டவரின் ஆளடையாளம் மற்றும் அவ் வன்செயலுக்கான பொறுப்பை ஏற்பது உறுதியாக்கப்பட்ட பின்பு, அதற்கான பொருத்தமான தண்டனைக்கு தீர்ப்பிடும் போது மனித உயிரை பாதுகாத்துக் கொள்வதற்காக அப்பாதுகாப்பான சூழ்நிலையை சீர்குலைப்பவர்களை அமைதிப்படுத்துவதற்காக, சீர்குலைப்பவர்களுக்கு இடம் கொடுக்காமல் இருப்பதற்கான ஒரே வழிமுறையாக அமையுமானால் மட்டும் மரண தண்டனையை குறித்த நபருக்கு வழங்கலாம்" (கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி புதிய பதிப்பு 1997. இல 2267)

எவ்வாறாயினும், கடந்த ஆடி மாதம் 12ம் திகதி பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்களின் சந்திப்பின் போது, இது குறித்து நான் கருத்து தெரிவிக்கையில், மரண தண்டனையை பொதுவான கொள்கையாக மீண்டும் நடைமுறைப்படுத்துவது அல்ல, மாறாக மிகவும் கொடூரமான மற்றும் சதித்திட்டத்துடன் சமூகச் சீர்கேடுகளில் சிறைச்சாலையினுள் இருந்தே ஈடுபடுவர்களுக்கு நியமித்துள்ள குறித்த தண்டனையை வழங்குவது குறித்து விமர்சிப்பது அரசின் பொறுப்பாகும் என்பதையே நான் தெரிவித்திருந்தேன். மேலும் இலங்கையில் சில சிறைச்சாலைகளில் மரண தண்டனை வழங்கப்பட்ட கைதிகள் இவ்வாறான வன்செயல்களைச் செய்ய திட்டமிடுவதற்கு சந்தர்ப்பங்கள் எவ்வாறு உருவாகின்றன என்பது குறித்து தேடிப்பார்க்கவும் என்று அரசிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன்.... 15

## அன்பின் வாசகர்களுக்கு!

எமது ஞான ஒளி பத்திரிகை கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் தமிழ் மொழியில் வெளிவரும் முதல் பத்திரிகையும், ஒரே பத்திரிகையுமாக வெளிவருகிறது. இப்பத்திரிகை இன்னும் முன்னோக்கிச் செல்வதற்கு உங்களின் பங்களிப்பை எங்களுக்குத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இதற்கிணங்க இப்பத்திரிகைக்கு உங்களின் விளம்பரங்களைத் தந்து ஊக்கப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். இப்பத்திரிகையின் விளம்பர விலைகளும் அளவுகளும் பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் தரப்படும். அவற்றை பார்த்து எங்களுக்கு உங்களுடைய விளம்பரங்களைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். விளம்பரங்களை எங்களது அலுவலகத்திற்கு கொண்டு வந்தும் கொடுக்கலாம். அல்லது மின்னஞ்சல் வழியாகவும் அனுப்பலாம்.

### ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்

| பின்பக்கம் (கலர்) | உட்பக்கம் (கறுப்பு) |
|---|---|
| ¼ பக்கம் – 9,000/- | ¼ பக்கம் – 8,500/- |
| ½ பக்கம் – 18,000/- | ½ பக்கம் – 17,000/- |
| முழுப் பக்கம் – 36,000/- | முழுப் பக்கம் – 34,000/- |

### வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்

| பின்பக்கம் (கலர்) | உட்பக்கம் (கறுப்பு) |
|---|---|
| ¼ பக்கம் – 16,875/- | ¼ பக்கம் – 12,500/- |
| ½ பக்கம் – 33,750/- | ½ பக்கம் – 25,000/- |
| முழுப் பக்கம் – 67,500/- | முழுப் பக்கம் – 50,000/- |

**விளம்பரங்களை அனுப்ப வேண்டிய முகவரி**
**இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.**
**மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com**

# 25 ஆண்டுகளுக்கு பின்பும் புனித அந்தோனியாரின் பிரசன்னம்

1989 ஆண்டு தெமட்டக்கொடை பங்கில் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆலய முன் தோட்ட பகுதியில் பங்கு குருவானவர் அருட்பணி ஜயசான்த் அடிகளாரால் புனித அந்தோனியாருடைய சுரூபம் இடப்பட்டது. பின்பு 2003ம் ஆண்டு அளவில் அப்பணி யூட் ராஜ் பர்னாந்து அவர்களால் இச்சுருபத்திற்கு ஒரு கபி நிர்மாணிக்கப்பட்டது. பின்பு இச்சுரூபம் முற்சந்தியில்(கார்மேல் மடம் முற்பகுதியில்) இடுவதற்கு சிந்தனை இருந்தாலும் அப்போது இருந்த ஒரு சில அருட்சகோதரிகளுக்கு விருப்பம் இருக்கவில்லை.

பின்பு 2009ஆம் ஆண்டு பங்கு குருவாக அருட்பணி இன்னேசியஸ் வருணகுலசிங்கம் அடிகளாருக்கு இதே சிந்தனை இருந்தாலும் அவருடைய மாற்றத்தினால் எதுவும் நிகழவில்லை.

2017ம் ஆண்டு மீண்டும் இப் பங்கிற்கு பங்கு குருவாக வந்த அருட்பணி இக்னேசியஸ் வருணகுலசிங்கம் அடிகளார் இத்திட்டத்தை ஆரம்பிக்கத் தொடங்கினார். 2018ம் ஆண்டு மாசி மாதம் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் உயர் தலைவி இந்தியாவிலிருந்து தங்களுடைய மடங்கள் தரிசிப்பின்போது தெமட்டக்கொடை பங்கிற்கு வந்தபோது அவரிடம் இத்திட்டம் முன்வைக்கப்பட்டதை அடுத்து அவர்கள் அனுமதி கொடுத்தார்கள். பின்பு பேராயரின் அனுமதியைப் பெற்ற பின்பு கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் ஆனி மாதம் 24ஆம் திகதி நிகழ்ந்த இறுதி திருவிழா திருப்பலிக்குப் பின்பு பங்கு குருவினால் ஆசீர்வதிக்கப்பட்டு இப்போது புனித அந்தோனியாரின் சுரூபம் முற்சந்தியில் இருப்பதால் மருதானையிலிருந்து வரும் மக்களுக்கும், வாகனங்களில் வரும் மக்களுக்கும் இச்சுரூபம் இலகுவாகத் தெரிகின்றது. இன்று கத்தோலிக்கர்கள் மாத்திரம் அல்ல பிற மதத்தினர் கூட இச் சுரூபத்திற்கு



வணக்கம் செலுத்தி, செபம் கூறி செல்வதை யாவருக்கும் காணக்கூடிய காட்சியாக இருக்கின்றது.

தகவல்: F.X.சிசிலியா

# கொழும்பு செக்கடித்தெரு பங்கின் வருடாந்த திருவிழா – 2018









20.07.2018 அன்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஒவ்வொரு நாளும் நவநாளும் திருப்பலியும் இடம்பெற்றது. 28.07.2018 அன்று புனித வியாகுல மாதா ஆலய பங்குத்தந்தை அருட்பணி. அன்ரனி மார்சிலியார் அடிகளாரின் தலைமையில் மாலை ஆராதனை இடம்பெற்றது. 29.07.2018 அன்று வருடாந்த திருவிழா வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது. அன்றைய திருவிழாத் திருப்பலியை முன்னாள் பங்குத்தந்தை அகஸ்ரின் பர்னாந்து அடிகளாரும், அவருடன் இணைந்து அருட்பணி ஜீவா அடிகளார், மற்றும் உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. கிஹான் அடிகளாரும் கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

அன்று மாலை 5.15 மணி திருப்பலியின் பின்னர் திருச்சுரூப பவனி ஆரம்பித்தது. எமது பங்கில் எல்லா வீதிகளும் சென்று, இறுதியில் ஆலய முற்றத்தில்.. 15

ஞான ஒளி
GNANA OLI
ඥාන ඔළි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
05 ஆவணி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# “ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது.”

“ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகைக் கொள்கிறது.” இவ்இறைவார்த்தையின் படி நடந்த நம் அன்னையின் விண்ணேற்பு விழாவை இம்மாதம் 15ம் திகதி கொண்டாடி மகிழ்கின்றோம்.

மரியா விண்ணேற்பு அடைய இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று மரியா சென்ம பாவமில்லாமல் பிறந்தவர். ஆதலால் இவரைத் தீமையோ, பாவமோ ஒரு நாளும் தீண்டமுடியாது. இரண்டாவது காரணம், தன் ஒரே மகனையே உலக மீட்பராக அனுப்பத் திட்டமிட்ட கடவுள், அதற்கான கருவறையாக மரியாவை முன் குறித்து வைத்தார். இதனையே “உருவிலால் உருவாகி உலகின் ஒரு மகன் உதிப்ப கருவிலான் கருவாகி கன்னித்தாய் ஆகினையே” என்று பாடுகிறார் வீரமாமுனிவர்.

இறைவனின் மாசற்ற அன்னையும் என்றும் கன்னியுமான மரியாள் அவளது இவ்வுலக வாழ்க்கைப் பயணம் நிறைவுற்றதும் உடலுடனும் ஆன்மாவுடனும் விண்ணக மாட்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள் என்பது இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட கோட்பாடு. திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் 1950ஆம் ஆண்டு கார்த்திகை 1ஆம் திகதி மரியாளின் விண்ணேற்பை விசுவாச உண்மையாக வெளியிட்டார்.

விண்ணேற்பு என்பது அமலோற்பவ அருட்கொடையால் நான், எனது, என்னுடைய என்ற தன்னல சிறையிலிருந்து விடுதலை பெற்ற மரியாள் கன்னிமை வரத்தால் திறந்த இதயத்தோடு இயேசுவை தன் உடலில், உள்ளத்தில் ஏற்ற மரியாள் முற்றிலும் இயேசுவின் உயிர்ப்பில் பங்கு பெறுகிறாள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஆதியில் ஆண்டவரின் வாக்கை புறக்கணித்ததால் அவரோடு இந்த பேரின்ப பாக்கியத்தை இழந்தாள் ஏவாள். ஆனால் அகில உலகத்தையே அர்த்தமுள்ளதாக்கி அசைபோட வைத்த “ஆகட்டும்” என்ற சொல்லாலே (லூக் 1:38) அவனிக்கு வெளிச்சம் கொடுத்த அன்னை மரியாள், இறைவார்த்தைக்கு கீழ்ப்படிந்ததினால் மீட்பின் பணியில் முழுப்பங்கு ஆற்றியதால் இழந்து போன அந்த பேரின்ப வாழ்வு மீண்டும் மரியாளுக்கு ஏன் மானுடம் அனைத்திற்குமே கிடைத்தது என இயம்புவது விண்ணேற்பு.

தன் மகனைப் போலவே விண்ணகத்தில் விண்ணக ராணியாக வலம் வந்து கொண்டிருக்கிறார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்து, பன்னிரு விண்மீன்களை மணி மகுடமாகச்சூடி (தி.வெ 12:1) விண்ணகத்திலே விண்ணரசி என்ற பெயரைத் தாங்கி, மண்ணக மாந்தருக்காக, அவர்களின் நலனுக்காகத் தன் மகனிடம் பரிந்து பேசுபவராக இருந்து கொண்டு அநேக ஆயிரமாயிரம் புதுமைகளை இன்றும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்டவரின் உடலும், ஆன்மாவும் கல்லறையில் அழிவுற வேண்டும் என்பது நம் கடவுளின் சித்தமும் அல்ல, விருப்பமும் அல்ல. எனவே விண்ணகத்தில் தம் அருகிலேயே உயர்ந்த ஒரு அரியணையைக் கொடுத்திருக்கின்றார். மண்ணக வாழ்வில் மரியாள் இயேசுவோடு கொண்ட தோழமை இன்றும் விண்ணகத்தில் தொடர்கின்றது. இதன் நிமித்தமாக விசுவாசத்தின், வீரநங்கையாம் தாய் மரியாள் விண்ணக மண்ணக அரசியாக விளங்குகின்றார். தன்னையே முழுவதும் அர்ப்பணமாக்கி, இறைத்திட்டமே தனது வாழ்வாக்கி இறையன்பைப் பெற்றுத்தரும் அருட்சுணையாய் அவரை அண்டிவரும் அனைவருக்கும் அக்கறையும், பரிவும் கொண்டு பாசத்தோடு பரிந்துரைக்கின்றார். ஏனெனில் அவர் சொல்ல, அவர் கட்டளையிட அதே இடத்தில் அற்புதம் அரங்கேறும் என்பதை (யோவா1:1-11) கானாவூர் திருமண நிகழ்ச்சியின் வழியாக வேதாகமத்திலே மிகவும் வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.

ஆகவே நாமும் விண்ணகம் செல்ல நமக்கு ஏணிப்படியாக இருப்பவர் மரியாளே. இந்த ஏணி வழியாகவே இயேசு இப்பூமிக்கு வந்தார். மரியாள் வழியாகவே நாம் மோட்சம் செல்ல வேண்டும். அதுவே கடவுளின் விருப்பம்.

**இறையாசீருடன் ஆசிரியர்**

## சிலுவைகள் ஊடான பயணத்தின் முடிவே

# விண்ணேற்பு



## மரியா விண்ணேற்பு அடைந்த நாள் ஆவணி – 15

உயிர்களைப் பிறப்பிக்கும் தாயும், அவளின் தாய்மையும் உலகம் போற்றும் உன்னத நிலைகள் என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை. உலக மக்களின் அன்னை மரியா. அவரது விண்ணேற்பைப் பெருவிழாவாக ஒவ்வொரு ஆண்டும் ஆவணி 15ம் திகதி நம் திருச்சபை கொண்டாடி வருகிறது. அன்றைய தினம் கடன் திருப்பலியாகவும் அறிவுறுத்துகின்றது.

மரியாவின் விண்ணேற்பு நாம் அனைவருமே பெறப்போகும் விண்ணக மகிமையின் முன்னடையாளமாகவும், வெளிப்படையான நம்பிக்கையாகவும் திகழ்கிறது. நம்பிக்கை என்பது இன்றைய உலகில் சிறிது சிறிதாக செத்துக் கொண்டிருக்கிறது. அவநம்பிக்கைகளும், அபாயங்களுமே மனிதனை எங்கும் சூழ்ந்து நிற்கின்றன. இருப்பினும் மரியாவின் விண்ணேற்பு நம்பிக்கையின் அடையாளமாக இருக்கிறது. இயேசுவின் பாதையில் நடந்த மரியா போன்று, நாமும் மீட்புப் பாதையில் நடந்து இறந்தோமென்றால் உறுதியாக விண்ணக மகிமையில் உயிர்ப்போம் என்று சுட்டிக்காட்டுகின்றது. மரியா போன்று விசுவாச வாழ்வில் பங்குபெறும் அனைவருக்குமே இப்பரிசு உண்டு.

வரலாற்றில் விவிலியப் பக்கங்களில் மரியா பற்றிய ஆதாரத் தகவல்கள் மிகச் சொற்பமே. எனினும் மீட்பு வரலாற்றில் அவரின் இடம் நிகரற்றதே! திருச்சபையின் மரபு பதிவு செய்திருக்கும் மரியா பற்றிய செய்திகளும், திருத்தந்தையர்களின் “மரியாவின் விண்ணேற்பு” பற்றிய பிரகடனங்களும் அன்னையின் மகிமையை உலகறியச் செய்துள்ளன. கி.பி 8ம் நூற்றாண்டு முதல், ஆவணி திங்கள் 15ம் நாள் “மரியாவின் விண்ணேற்பு” விழாவாகக் கொண்டாடப்பட்டது. திருத்தந்தை முதலாம் நிக்கோலஸ் (கி.பி 858 - 856) காலம் முதல் என்றும் மறைக்க முடியாத அளவிற்கு திருவழிபாட்டில் வெற்றி விழாவாக விண்ணேற்பு விழா மாறியது. திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1954ம் ஆண்டில் “அன்னை மரியா ஆன்மாவோடும், உடலோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்” என்ற திருச்சபையின் போதனையை விசுவாச சத்தியமாகப் பிரகடனப்படுத்தினார்.

மேலும் மரியா இயேசுவின் முதல் சீடர். இயேசுவின் மற்றச் சீடர்கள் பெறப்போகும் அருள் நிலையை முதலில் பெறும் பாக்கியம் பெற்றவர்.


> **மரியாவின் விண்ணேற்பு வெறும் கோட்பாடு மட்டுமல்ல, அது விண்ணையும், மண்ணையும் இணைத்த ஓர் உண்மை நிகழ்வு.**

மேலும், “உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊருவிப் பாயும்” (லூக் 2:35) என்று சிமியோன் சொன்ன போது கலங்கித் தவித்தார். அடுத்து ஏரோது அரசனிடமிருந்து தன் குழந்தையைக் காப்பாற்றும் பொருட்டு எகிப்துக்குத் தப்பிச் செல்லும்போது (மத் 2:13-15) அவர் அனுபவித்த உடல், மன அளவிலாக துயரங்கள்.. அடுத்து மூன்று நாட்கள் எருசலேம் திருவிழாவின் போது இயேசுவைக் காணாமல் தவித்த தவிப்பு (லூக் 2:46), சிலுவைச் சுமந்து சென்றபோது இயேசுவும், மரியாவும் சந்தித்த நிமிடங்களில் அவர் அடைந்த துயரம், தன் மகன் சிலுவையில் அறையப்பட்ட போதும், உயிர் விட்டபோதும் அவர் துடித்த துடிப்பு, இறந்த இயேசுவின் உடலை தன் மடியில் கிடத்திய போது அந்தத் தாய் அனுபவித்த சொல்லொண்ணா வியாகுலங்கள், இறுதியில் தன் மகனைக் கல்லறையில் அடக்கம் செய்தபோது அவர் சிந்திய கண்ணீர்... ஆகிய இவற்றையெல்லாம் பார்க்கும்போது மரியாவின் விண்ணேற்பு வெறும் கோட்பாடு மட்டுமல்ல, அது விண்ணையும், மண்ணையும் இணைத்த ஓர் உண்மை நிகழ்வு. அது வெறும் புதுமை அல்லது கொண்டாட்டமல்லாத அன்றாட வாழ்வின் சிலுவைகள் ஊடான ஒரு பயணம். அது வெறும் திருவிழாவல்ல. பாவத்தை விலக்கி தூய வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்லும் ஒரே நிகழ்வு.

எனவே, நாமும் மரியாவைப் போல் நம் வாழ்வில் வரும் துன்பங்களையும், துயரங்களையும் துணிவோடும், இறை நம்பிக்கையோடும் தாங்கிக் கொண்டு மேல்நோக்கிய (விண்ணகத்தை எதிர்பார்த்த) எண்ணங்களால் நம் உடலை, ஆன்மாவை தூய்மையாக்கி வாழ்ந்தோமென்றால் அன்னையுடன் சேர்ந்து நாமும் விண்ணேற்பு அடைவோம் என்பது நிச்சயம்.!

## உண்மை உரைக்கும்

கமிலஸ்



# அன்னை மரியாவின் பேராலய நேர்ந்தளிப்பு

# பனிமய அன்னை

உரோமை நகரில் பெயர்போன ஆலயங்களாக விளங்கும் நான்கு ஆலயங்களில் ஒன்றின் நேர்ந்தளிப்பு நாளை நாம் ஆவணி 15ம் திகதி விழாவாகக் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு மறைமாவட்டத்திலும், ஒவ்வொரு பங்கிலும் அங்குள்ள ஆலயத்தின் நேர்ந்தளிப்பு ஆண்டு நாள் கொண்டாடப்படுகிறது. ஆனால், திருச்சபை முழுவதிலும் இந்த நான்கு பேராலயங்களின் நேர்ந்தளிப்பு ஆண்டு நாள்கள் கொண்டாடப்படுகின்றன. இவையாவன: தூய ஜோன் லூத்தரன் பேராலயம், தூய பேதுரு பேராலயம், தூய பவுல் பேராலயம், தூய மேரி மேஜர் பேராலயம். இவை நான்கும் உலகில் உள்ள அனைத்து ஆலயங்களின் தாய்ப் பேராலயங்களாகக் கருதப்படுகின்றன.

## தூய மேரி மேஜர் (Mary Major) பேராலயம் ஏன் முக்கியமானது?

ஆவணி 05ம் திகதி நேர்ந்தளிப்பு நினைவு நாளை நாம் கொண்டாடும் ஆலயம் 'தூய மேரி மேஜர்' (Mary Major) என்று அழைக்கப்படுகின்றது. இரண்டு காரணங்களுக்காக இப்பேராலயம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது:

1) இப்பேராலயம் எபேசு நகர் பொதுச்சங்கத்தின் நினைவுச் சின்னமாக விளங்குகின்றது. இத்திருச்சங்கத்தில் கி.பி 431ஆம் ஆண்டு 'அன்னை மரியா இறைவனின் தாய்' என்ற நம்பிக்கைக் கோட்பாடு பிரகடனப்படுத்தப்பட்டது. இதன்பின் அன்னை மரியாவின் வணக்கம் மக்களிடையே பெருகியது.

2) உலகிலே கட்டப்பட்டுள்ள அன்னை மரியாளின் எல்லா ஆலயங்களுக்கும் முன்பே கட்டப்பட்ட திருத்தலப் பேராலயமாக இது விளங்குகிறது. இப்பேராலயத்திற்கு வரும் பக்தர்கள் கூட்டம், உலகில் உள்ள எல்லா திருத்தல ஆலயங்களிலும் அன்னை மரியாவுக்கு வணக்கம் செலுத்த வந்து குவியும் பக்தர்களுக்கு, ஒரு முன் உதாரணமாக உள்ளது.

இக்காரணங்களினால் இப்பேராலய நேர்ந்தளிப்பு விழா உலகில் உள்ள அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் ஒரு முக்கியமான விழாவாக விளங்குகின்றது.

## பனிமய மாதா விழா

இந்த விழா பனிமய மாதா விழாவென்று அழைக்கப்படுகிறது. தூத்துக்குடி மறைமாவட்டத்தில் பனிமய மாதா ஆலயம் உள்ளது. இது பிரபல்யமான ஒரு திருத்தலம். கும்பகோணம் மறைமாவட்டத்தில் பெரம்பலூர் பங்கு ஆலயமும் பனிமய மாதா என்றழைக்கப்பட்டு ஆவணி 5ம் திகதி விழா கொண்டாடப்படுகிறது. இது போன்று இந்தியாவின் மற்ற பகுதிகளிலும், ஏன், உலகில் பல நாடுகளிலும், எமது நாட்டிலும் பரதகுல மக்கள் இப்பெயரில் விழா கொண்டாடப்படுகிறது. அன்னை மரியாவின் ஆலயத்தின் நேர்ந்தளிப்பு நினைவு நாள் ஏன் பனிமய மாதாவின் விழாவாகக் கொண்டாடப்படுகிறது என்று அறிவது நல்லது.

தூய மேரி (Mary Major) ஆலயம் கொன்ஸ்டன்டைன் காலத்திற்கு உரியது. தொடக்கத்தில் இவ்வாலயம் 'சிசினினி பேராலயம்' (Sicinini Basilica) என்று அழைக்கப்பட்டது. ஏனெனில் இவ்விடத்தில் இதே பெயரில் ஒரு பிரபு குடும்பத்தின் அரண்மனை இருந்துள்ளது.

இது 'பனிமய மாதா ஆலயம்' என்று அழைக்கப்படுவதற்கு ஒரு கதை உண்டு. அருள்பணியாளர்களுடைய பழைய கட்டளை செப புத்தகத்தில் இக்கதை வர்ணிக்கப்பட்டுள்ளது. ஜோன் என்ற பெயருடைய ஒரு பிரபு நிறைய சொத்துக்களை உடையவராக இருந்தார். ஆனால் அவருக்கு குழந்தைகள் இல்லை. அதனால் அவருடைய சொத்துக்கு வாரிசு கிடையாது. எனவே அவரும், அவருடைய மனைவியும் தங்கள் சொத்தை இறைவனின் தாய் அன்னை மரியாளுக்கு அளிப்பதாக பொருத்தனை செய்திருந்தனர். அதனால் கன்னிமரியாவுக்கு என்ன நல்ல காரியம் செய்ய வேண்டுமென அவர்களுக்கு தெரிவிக்க வேண்டி வந்தனர். அவர்களுடைய செபங்களுக்கு செவிமடுத்த அன்னை மரியா, கனவில் அவர்களுக்குத் தோன்றி ஆவணி 5ம் நாள் நீங்கள் எஸ்கலின் (Esquiline) மலைக்குன்றுக்குக் காலையில் சென்று பாருங்கள். அங்கு மலையில் ஒரு பகுதியில் உறைபனி படிந்திருப்பதைக் காண்பீர்கள். அங்கு எனக்கு ஓர் ஆலயம் கட்டுங்கள் என்று சொன்னாராம். அவர்களும் எழுந்து அங்கு சென்று பார்த்தபோது, என்ன விந்தை அது வெய்யில் காலமாக இருந்தும் படிந்திருந்த உறைபனி உருகாமல் அப்படியே இருப்பதைக் கண்டார்கள்.

அப்போது திருத்தந்தையாக இருந்த லிகோரியுவிடம் (352-366) பிரபு ஜோன் சென்று நடந்ததைச் சொன்னார். திருத்தந்தையும் இதே செய்தி தமக்கும் கனவில் சொல்லப்பட்டது என்றார். உடனே அடுத்த நாள் காலையில் அருள்பணியாளர்களுடன் எஸ்கலின் மலைக்குன்றுக்குச் சென்றார். அந்த இடத்தில் மட்டும் உறைபனி உருகாமல் இருப்பதைக் கண்டார். ஆச்சரியம் அடைந்த அவர் அந்த இடத்தைக் கோடிட்டு வரைந்து அங்கு அன்னையின் விருப்பப்படி ஓர் ஆலயம் கட்டப்படும் என்றார்.

அதன்பின் மூன்றாம் சிக்ஸ்டஸ் (432-440) காலத்தில் இவ்வாலயம் கட்டப்பட்டது. அதே சமயம் எபேசு பொதுச்சங்கத்தில் 'அன்னை மரியா இறைவனின் தாய்' என்ற நம்பிக்கைக் கோட்பாடு அறிவிக்கப்பட்டது. இந்த சூழலில் கி.பி 439ஆம் ஆண்டு இப்பேராலயம் திருநிலைப்படுத்தப்பட்டது.

இப்பேராலயத்தில் உள்ள கூரையில் கிறிஸ்துவின் வரலாற்றையும் அன்னை மரியின் வரலாற்றையும் பிரதிபலிக்கும் வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

இந்த பேராலயத்தின் உட்புற கூரை மரத்திலானது. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கூரை, காஸ்தில்லா அரசி எலிசபெத் வழங்கிய தங்கத்தினால் அழகுபடுத்தப்பட்டது என வரலாறு கூறுகிறது. மேலும், இங்கு தலைமைப் பலிபீடத்துக்குக் கீழ் இயேசு பிறந்த மாட்டுத் தொட்டிலின் சில மரத்துண்டுகள் வைக்கப்பட்டுள்ளன. மரியா பாவமின்றித் தாயின் கருவில் உருவானார் என்று 1854ஆம் ஆண்டு மார்கழி 8ஆம் திகதி அறிக்கையிட்ட திருத்தந்தை 9ஆம் பியுஸ், இந்தச் சிறு புனித மரக்கட்டைகள் வைக்கப்பட்டிருக்கும் இந்த இடத்தைப் புதுப்பிக்குமாறு கட்டளையிட்டார். எனவே இது 'மாட்டுத் தொட்டிலில் புனித மரியா பேராலயம்' என்று முன்னர் அழைக்கப்பட்டது. இந்தப் புனித மரக்கட்டைகள் 642ஆம் ஆண்டில் திருத்தந்தை முதலாம் தெயோதோர் காலத்தில் உரோமைக்குக் கொண்டுவரப்பட்டன. பளிங்குக் கற்களால் அழகாகக் காட்சியளிக்கும் இந்த இடமும் மொத்த பேராலயமும் பக்தர்களைக் கவர்ந்திழுத்துக்கொண்டிருக்கின்றன. அன்னை மரியாவின் சிறப்பை அறிவித்துக்கொண்டிருக்கின்றன. (ஆதாரம் வத்திக்கான் வானொலி, தை 2013).

இது லிபேரியஸ் என்ற திருத்தந்தை காலத்திலிருந்து வருவதால் 'லிபேரியஸ் பேராலயம்' என்றும் அழைக்கப்படுகிறது. உரோமை நகரில் இருக்கும் ஆலயங்களுக்கெல்லாம் பெரிதாக இருப்பதால் இது 'மேரி மேஜர்' என்றும் அழைக்கப்படுகின்றது. மேலே குறிப்பிட்ட காரணத்தால் மேரி மேஜர் ஆலயம் நேர்ந்தளிக்கப்பட்ட நாள் பனிமய மாதா விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

## இவ்விழா நமக்கு உணர்த்தும் பாடம்

ஆலயம் எழுப்புவது இறைவனின் புகழுக்காகவும், அதனால் நம்மோடு இறைவன் நெருக்கமாக உடனிருக்க செய்யவும் ஆகும். "எனக்குப் பெயருமில்லை, ஊருமில்லை, நீ இடும் பெயர் என் பெயர், நீ காட்டும் இடம் என் இடம்" என்ற மரபுமொழிக்கு ஏற்ப நாம் ஓர் இடத்தில் இறைவனைச் சந்திக்கவும், உறவுகொள்ளவும், வழிபடவும் விரும்பி அந்த இடத்தில் நான்கு சுவர்கள் கட்டிடத்தை எழுப்பி அதைத் திருநிலைப்படுத்தும்போது, இறைவன் நம்முடன் இருக்கிறார். நமக்காக நம் தேவைகளை நிவர்த்தி செய்ய அங்கு வந்து குடிகொள்கிறார். இத்தகைய சிந்தனை நாம் வாழுமிடத்தில் ஆலயம் கட்ட உதவி செய்ய நம்மைத் தூண்ட வேண்டும்.

மேலும் ஒரு குறிப்பிட்ட மறைபொருளையோ நம்பிக்கைக் கோட்பாட்டையோ நினைவுபடுத்தவும் ஆலயம் கட்டப்படலாம். இவ்வாறு எழுப்பப்பட்டதுதான் இன்று நாம் நினைவுகூரும் அன்னை மரியாவின் ஆலயம். இவ்விழா இந்த நம்பிக்கைக் கோட்பாட்டை சிந்தித்து ஏற்றுக்கொள்ள, நமது நம்பிக்கையை ஆழப்படுத்த உதவுவதாக.

இறுதியாக ஓர் ஆலயத்தின் திருநிலைப்பாட்டு விழா நாமும் இறைவனுக்கு உகந்த ஆலயமாக இருக்கிறோம் என்பதை நமக்கு உணர்த்துகிறது. எனவே நமது உடலையும் உள்ளத்தையும் எப்பொழுதும் தூய்மையானதாக வைத்திருக்கும்போது இறைவன் நம்முள் வசிக்கிறார். திருமூலர் சொல்வது போல நாம் அனைவரும் 'நடமாடும் ஆலயம்' ஆகிறோம். இந்த உண்மையை நம்மிடம் கேள்வி கேட்பதன் மூலம் உணர்த்துகிறார் திருத்தூதர் பவுல்.



தூய ஜோன் லூத்தரன் பேராலயம்



தூய பேதுரு பேராலயம்



தூய பவுல் பேராலயம்



தூய மேரி மேஜர் பேராலயம்


**"நீங்கள் கடவுளுடைய கோவில் என்றும், கடவுளின் ஆவி உங்களுள் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா?; [1கொரி. 3:16].**

**"உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோவிலென்று தெரியதா?" [1கொரி. 6:19]**

மாந்தர் அனைவருமே இறைவனின் ஆலயமாவர். எனவே இவர்களை, சிறப்பாக ஏழைகள், சமூகத்தில் விளிம்பு நிலையில் இருப்பவர்கள் போன்றவர்களைக் கொடுமைப்படுத்துவதும், துன்புறுத்துவதும் இறைவனுக்காக கட்டப்பட்ட ஆலயத்தைச் சிதைப்பதற்குச் சமமாகும்.

ஆகவே, கன்னி மரியாவின் பேராலய நேர்ந்தளிப்பு நாளை நினைவுகூரும் நாம் அனைவரும் இறைவனுக்குகந்த ஆலயமாகிட முயற்சி செய்வோமாக.

# வியான்னி புனிதரே!
# நீரே குருத்துவ மகிமையின் சாட்சி



ஆவணி 4ம் திகதி குருவானவர்களின் பாதுகாவலரான புனித ஜோன் மேரி வியான்னியின் நினைவு நாளாக சிறப்பிக்கின்றோம். இந்நன்நாளில் குரு, குருத்துவம் அதன் மகத்துவம் தனித்தன்மைப்பற்றிப் பார்ப்போம்.

குருவானவர் என்பவர் யார்? குருத்துவத்தின் தனித்தன்மை என்ன? என்ற கேள்விகளுக்கு திருச்சபை பதில் தருகிறது.

குருக்கள் கையெடுத்துக் கும்பிடப்படும் சாமிகளாகப் பார்க்கப்பட்ட காலம் மலையேறிப்போய், இவரெல்லாம் ஒரு சாமியாரா? என்று விசுவாசிகள் கேட்கும் அளவுக்கு குருக்களின் செப வாழ்வும், பணிவாழ்வும், ஒழுக்க வாழ்வும் சிதைந்து வருகிறது. இவ்வேளையில் "குருவானவர் என்பவர் யார்?", "குருத்துவத்தின் தனித்தன்மை என்ன?" என்பன போன்ற கேள்விகளை ஆராய்வதும், அறிவதும் குருக்கள் மற்றும் பொதுநிலை விசுவாசிகளின் வாழ்வு மிளரவும் ஒளிரவும் வழிவகுக்கும். குருத்துவம் பற்றி திருச்சபை தரும் புரிதல்கள், தெளிவுகள் குருத்துவத்தின் மகத்துவம் பற்றி அறிய நமக்குப் பேருதவியாக உள்ளன.

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு, திருச்சபை எண் 10 "ஒரு குரு மறு கிறிஸ்துவாகச் செயல்படுகிறார். பணியாற்றும் குரு, தான் பெற்ற புனித ஆணையுரிமையால் குருகுல மக்களை உருவாக்குகின்றார், ஆள்கிறார். மறு கிறிஸ்துவாக நின்று நற்கருணைப் பலியை நிறைவேற்றுகிறார்" என்கிறது. மேலும் திருச்சபை எண் 11ல் "விசுவாசிகளுள் குருத்துவ நிலையைக கொண்டிருப்பவர்கள் இறைவனின் வார்த்தையாலும், அருளாலும் திருச்சபைக்கு மேய்ப்பர்களாய் நின்று பணிபுரிய கிறிஸ்துவின் பெயரால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்" என்று கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு "குருக்களின் பணியும் வாழ்வும்" எண் 2ல், "குருக்கள் கிறிஸ்துவின் ஆளுமையில் செயற்படுகின்றனர்" என்று கூறப்பட்டுள்ளது. அதாவது, குருப்பட்டம் பெற்ற ஒரு குரு மறு கிறிஸ்துவாக இருக்கிறார். கிறிஸ்துவின் பெயரால் நியமிக்கப்படுகிறார். கிறிஸ்துவின் ஆளுமையில் செயற்படுகிறார் என்பதே ஒரு குருவின் தனித்தன்மை. இதே கருத்தை புனித இரண்டாம் ஜோன்போல் வெளியிட்ட "மேய்ப்பர்களை உங்களுக்குத் தருவேன்" (Pastores Dabovobis) என்ற திருமடலில் குரு, குருத்துவம் பற்றிய செழுமையான கருத்தை அழகாக தெளிவாக காண முடிகிறது. "ஒரு குருவானவர் கிறிஸ்துவின் ஆளுமையில் செயற்படுகிறார்" (A priest acts in the person of Christ) என்று கூறும் திருத்தந்தை, "குறிப்பாக நற்கருணைப் பலியை ஒப்புக்கொடுக்கும்போதும், ஒப்புரவு அருளடையாளத்தில் பாவ மன்னிப்பு வழங்கும்போதும் குரு கிறிஸ்துவின் ஆளுமையில் செயல்படுகிறார்" என்று கூறியுள்ளார்.

"இது என் உடல், இது என் இரத்தம்" என்று நற்கருணைப் பலியின் போது குரு உச்சரிக்கின்ற வசீகர வார்த்தைகளும், "நானும் பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயரால் உம் பாவங்களிலிருந்து உம்மை விடுவிக்கின்றேன்" என்று பாவமன்னிப்பின்போது குரு உச்சரிக்கிற வார்த்தையும் கிறிஸ்துவின் பெயரால், மறு கிறிஸ்துவாக கிறிஸ்துவின் ஆளுமையில் உச்சரிக்கப்படும் வார்த்தைகளாகும்.

### குருவானவர் கிறிஸ்துவின் உயிருள்ள உருவம்

திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் போல், "மேய்ப்பர்களை உங்களுக்குத் தருவேன்" என்ற தனது திருத்தூது மடல் எண் 12ல், ஒரு குருவானவர் குருவாகிய கிறிஸ்துவின் உயிருள்ள, தெளிவான உருவம் (The priest is a living and transparent image of Christ the Hihg priest) என்று கூறியுள்ளார். அதே திருத்தூது மடல் எண் 15ல் "குருக்கள் திருச்சபையிலும், திருச்சபைக்காகவும் தலைவரும் ஆயருமாகிய கிறிஸ்துவின் அருளடையாள ரீதியிலான மறுதோற்றம் போன்று உள்ளனர்" (In the Church and on behalf of the Church, priests are a Sacramental representation of Jesus Christ - the head and Shepherd) என்று கூறியுள்ளார்.

மேலும், எண் 21இல் "குரு அருடையாள அர்ப்பணத்தின் அருட்பொழிவின் வழியாக திருச்சபையின் தலைவரும், ஆயருமாகிய இயேசு கிறிஸ்துவின் உருவத்தைப் பெறுகின்றார்" (By sacramental consecratition the priest is configures to Jesus Christ as head and shepherd of the Church) என்று திருத்தந்தை கூறுகிறார். அதே சுற்றுமடல் எண் 15ல் "ஒரே வார்த்தையில், குருக்கள் இருப்பதும், செயல்படுவதும் தலைவரும் ஆயருமாகிய கிறிஸ்துவின் பெயராலும், ஆளுமையிலும் உலகிற்கு நற்செய்தி அறிவிக்கவும், திருச்சபையைக் கட்டி எழுப்பவுமே" என்று குருவின் தனித்தன்மையையும், பணியும், தனது தலத்திருச்சபையின் தலைமை ஆயருக்கு பணிந்து விசுவாசிகளுக்கு நற்செய்திப் பணிவிடை புரிவதே என்பது விளக்கப்படுகிறது. ஆகவே குருக்களை மதிப்போம். அவர்களுக்காக செபிப்போம். அவர்களின் நலன்களில் அக்கறை கொண்டு அவர்கள் ஆற்றும் பணிகளுக்கு ஒத்துழைப்பு கொடுப்போம்.

---

# கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் ஐந்து அருட்தந்தையர்கள் தமது குருத்துவ வாழ்வில் 25வருட நிறைவைக் கொண்டாடினர். 29.07.2018

**1. அருட்பணி. ரஞ்ஜித் அந்ராதி**

**பங்கு** : பயாகல

**குருத்துவப் பணிகள்** :
- நீர்கொழும்பு பெரிய தெரு, தெஹிவளை (உதவிப்பங்குத்தந்தை)
- மருதானை, புனித ஜோசப் கிளை கல்லூரி (பாலர் பிரிவின் அதிபர், உப அதிபர் - கனிஸ்ட பிரிவு)
- புனித ஜோசப் கல்லூரி - வத்தளை கிளை, அதிபர்,
- லொயலா கல்லூரி, நீர்கொழும்பு.
- புனித ஜோசப் கல்லூரி, நீர்கொழும்பு கிளை
- புனித செபஸ்தியார் கல்லூரி, மொறட்டுவை

**2. அருட்பணி. ஜுட் சமன்த்த பர்னாந்துபுள்ளே**

**பங்கு** : தோப்பு

**குருத்துவப் பணிகள்** :
- களனி, நாயக்கந்தை, வத்தளை, பலங்கத்துரை (உதவிப்பங்குத்தந்தை)
- கட்டுவ, கிபுலாபிட்டிய, கட்டுநாயக்க, (பங்குத்தந்தை)
- பம்பலப்பிட்டி புனித பீட்டர் வித்தியாலயம், ஆசிரியகுழாம் உறுப்பினர்.

**3. அருட்பணி. எரின்டன் சில்வா**

**பங்கு** : களனி

**குருத்துவப் பணிகள்** :
- ஹங்வெல்ல, நீர்கொழும்பு பெரியதெரு, (உதவிப்பங்குத்தந்தை)
- களுத்துரை, ஹொரனை, கடற்கரைத் தெரு, போபிட்டிய, தெஹியகாத (பங்குத்தந்தை)

**4. அருட்பணி. பெர்னாட் நிஷான் விலத்கமுவ**

**பங்கு** : தலங்கம

**குருத்துவப் பணிகள்** :
- மொறட்டுவை, றாகம, பிடிப்பனை (உதவிப்பங்குத்தந்தை)
- ரத்மலானை, கனுவன, பமுனுகம, படகம, தெஹியகாத, ரத்தொளுகம, கெப்புங்கொட (பங்குத்தந்தை)

**5. அருட்பணி. பெர்னாட் அலோசியஸ் ரேஹாட்**

**பங்கு** : நிட்டம்புவ

**குருத்துவப் பணிகள்** :
- தோப்பு, கொட்டாஞ்சேனை, றாகமை (உதவிப்பங்குத்தந்தை)
- மாதம்பொல, வேருபெல, புனித அந்திரேய ஆலயம், முகத்துவாரம், பொல்லாத்தா (பங்குத்தந்தை)
- ஆன்மீகக் குரு - இத்தாலி

---

**இன்னும்**

# அதிகமாக...

**இறைவா!**
**தாராள மனதை எனக்குத் தந்தருளும்**
**உமக்கு உகந்த விதத்தில்**
**அன்பு காட்டவும், பணிபுரியவும்,**
**கணக்கிடாமல் கொடுக்கவும்,**
**காயத்தைக் கவனியாமல் போரிடவும்,**
**ஓய்வைத் தேடாமல் உழைக்கவும்,**
**கைம்மாறு கருதாமல் பணியாற்றவும்,**
**உமது திருவுளத்தை நிறைவேற்றுகிறேன் என்பதில்**
**மட்டும் நிறைவு காணவும் எனக்கு வரம் தாரும்!.**

- புனித இஞ்ஞாசியார்.

# திருமண வாழ்வு சிறக்க மனமுதிர்ச்சி தேவை



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு 158

எமது வாழ்வில் நிம்மதியாக, சந்தோசமாக இருக்கவே ஆசைப்படுகிறோம். அதற்காகவே பணம் சம்பாதிக்கிறோம். பணத்தைக் கொடுத்துக் கட்டில் மெத்தையை வாங்குகிறோம். ஆனால் நிம்மதியைத், தூக்கத்தை வாங்க முடியுமா? வாழ்க்கையை வாழப் பழகவேண்டும். எமது வாழ்க்கை எமது கையிலேதான் உண்டு. எப்படியும் வாழலாம் என்பதை விடுத்து இப்படித்தான் வாழப் போகிறேன் என்ற குறிக்கோள் தேவை. வாழ்வில் உயர்ந்த குறிக்கோளுடன் வாழவேண்டும்.

ஒருவர் நல்ல சரீர ஆரோக்கியத்துடன் வாழவேண்டும். ஆண் அழகனாக வாழவேண்டும் என்று ஒவ்வொரு நாளும் நல்ல உணவை உண்கிறார். உடற்பயிற்சியெடுக்கிறார். இளைப்பாறுகிறார். போதை, புகை பாவிப்பதில்லை. அவர் ஒரு திடகாத்திரமான ஆணழகனாக இருக்கக்கூடும். ஆனால் அவருக்கு அறிவு, புத்தி வளர்ச்சியில்லை. படிக்கவில்லை.

இன்னுமொருவர் தனது சரீரத்தையும் கவனித்துக்கொண்டு நன்றாகப் படிக்கிறார். அவர் பல்கலைக்கழகப் பட்டம் பெற்று விட்டார். சரீர, அறிவு வளர்ச்சி பெற்றுவிட்டார். ஆனால் மன, ஆன்மீக வளர்ச்சி பெறவில்லை. ஒரு மனிதனுக்கு சரீர, அறிவு, மன, ஆன்மீக வளர்ச்சி முக்கியம். இந்த நான்கிலும் வளர வேண்டும் என்ற குறிக்கோளில் வாழவேண்டும்.



### மன முதிர்ச்சியடைந்த ஒருவரில் பின்வரும் குணங்களை காணமுடியும்.

1. யதார்த்தத்தை ஏற்கக்கூடிய மனநிலை அவருக்கு இருக்கும். தான் கறுப்பா, சிவப்பா, கட்டையா, உயரமா இருக்கும் நிலையில் தன்னை ஏற்றுக்கொண்டு அன்பு செய்யக்கூடியவராக இருப்பார். தனது உயரம் ஐந்து அடியானால் ஏழு அடியென்று கூறத்தேவையில்லை. குடும்பத்தில் பிள்ளைகள் எல்லோரும் ஆண்களாக இருந்தால் எனக்குப் பெண் பிள்ளைகள் இல்லையே என்று எந்த நாளும் கவலைப்படாது யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வர்.
2. மற்றவரில் மாற்றமுடியாத பழக்கங்கள் இருக்கலாம். மனமுதிர்ச்சியடைந்த ஒருவராலேயே அவருக்கு உதவமுடியும். தன்னை மாற்றினால் மற்றவர் மாறுவார் என்று மனமுதிர்ச்சியடைந்தவர் கூறுவார். மற்றவரால் வரும் கலக்கத்தைத் தாங்கிக்கொள்வார். மனமுதிர்ச்சி பெற்றவர் மற்றவர் இருக்கும் நிலையில் அவரை ஏற்றுக்கொள்வார். மற்றவர் மாறிக்கொண்டுவரும் பொழுது அவரைப் பாராட்டி, அவரால் ஏற்படும் வேதனையைச் சகித்துக் கொள்வார்.
3. மனமுதிர்ச்சி பெற்றவரிடம் பாதுகாப்புணர்வுண்டு. எந்த நேரமும் பயந்துகொண்டிருக்க மாட்டார்.
4. தன்னை நம்பக்கூடியவராக இருப்பார். மற்றவர்களையும் நம்புவார். இந்த உலகிலே ஒருவரையுமே நம்ப மாட்டேன் என்று கூறுவது மனமுதிர்ச்சிக்குறைவைக் காட்டுகிறது. சந்தேகப்படக்கூடிய விதத்தில் நடமாடினால் சந்தேகப்படுவது இயற்கை. ஆனால் எந்த நேரமும் எல்லோரையும் சந்தேகப்படுவது மனமுதிர்ச்சிக் குறைவைக் காட்டுகிறது.
5. அன்பு செய்யவும் அன்பு செய்யப்படவும் கூடியவராக மன முதிர்ச்சியடைந்தவர் இருப்பார். அன்பு செய்பவரை அடிமைப்படுத்தி அவருக்குச் சுதந்திரம் கொடுக்காது செயற்படுவது மனமுதிர்ச்சிக்குறைவே. ஒருவரிடம் உதவியைப் பெற்றதற்காக அவருக்கு அடிமையாக வாழ்வதோ அல்லது ஒருவருக்கு உதவி செய்து அவரை அடிமைப்படுத்துவதோ அல்ல. மற்றவரை ஒரு பொருளாகப் பாவிக்கமாட்டார்.
6. மனமுதிர்ச்சி பெற்றவர் உடலுறவில் திருப்தியைக் கொடுக்கவும், பெறவும் ஆயத்தமாக இருப்பார். தனது திருப்தியை மட்டும் கவனத்தில் கொள்ள மாட்டார்.
7. தனது உணர்வுகளை அடக்கிவைக்காது உரிய விதத்தில் வெளிப்படுத்தக்கூடியவராக இருப்பார். சிறிய நிகழ்ச்சியிலும், பெரிய நிகழ்ச்சியிலும் ஒரே விதத்தில் செயற்படாது நிகழ்ச்சிக்கேற்ப வெளிப்படுத்தக்கூடியவராக இருப்பார். தனது பொருள் தொலைந்து விட்டது என்பதற்கு அழுகிறார். அதே விதத்தில் அம்மா இறந்ததற்கும் அழுகிறார். இது நிகழ்ச்சிக்கேற்ற விதத்தில் உணர்வை வெளிப்படுத்தத் தெரியாமையை வெளிக்காட்டுகிறது.
8. எனது உறுதிப்பாடு இதுதான். மற்றவரது உறவு உடைந்து விடுமே என்று பயப்படாது தனது கருத்தை வெளிப்படுத்தக்கூடியவராக மன முதிர்ச்சியுள்ளவர் இருப்பார்.
9. மன முதிர்ச்சியுள்ளவர் தன்னம்பிக்கையுள்ளவராக இருப்பார். பிரச்சினையைச் சவாலாக எடுத்து முகம் கொடுக்கக்கூடியவராக இருப்பார்.
10. பொறுப்பைப் பாரமெடுக்கக் கூடியவராக இருப்பார். பொறுப்பைப் பாரமெடுப்பது என்பது என்ன? வெற்றியையும் தோல்வியையும் மனமுதிர்ச்சியடைந்தவர் பாரமெடுப்பார். மகன் பரீட்சையில் சித்தியடைந்தால் "என்ரை மகன்" என்பதும், பரீட்சையில் சித்தியடையவில்லை என்றால் "உன்ரை மகன்" என்று மனைவிக்குக் கூறுவதும் மனமுதிர்ச்சிக் குறைவைக் காட்டுகிறது. மகன் சித்தியடையாததற்கு நானும் காரணம். "எனது நேரத்தைப் பிள்ளைக்குக் கொடுக்கவில்லை. கொடுத்திருந்தால் சித்தியெய்திருப்பான்" என்று தோல்வியையும் ஒப்புக் கொள்வது மனமுதிர்ச்சியாகும். இல்லையேல் தோல்விக்கான காரணத்தை மற்றவரில் சுமத்தி விடுவார்.
11. மற்றவர்கள் நம்பும் விதத்தில் மனமுதிர்ச்சி பெற்றவர் நடமாடுவார்.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**

# கல்வி ஒளி ஞான ஒளி






கலங்கரை விளக்கம்
– கல்வி.
கலங்கிய கருத்தையும்
விளக்கும் – கல்வி.
இருளில் தடம்
மாறியதை,
ஒளியில் தடம் பதிப்பது
கல்வி.

வினாவுக்கு விடை
தேடி,
நல்லதை நாடி,
அல்லதை அகற்ற,
அறிவு தருவது கல்வி.
ஒட்டு மொத்த
உயர்வுக்கு உரமிடுவது
கல்வி.

ஏட்டுக்கல்வி –
அனுபவக்கல்வி,
வாழ்வுக்கு
ஏற்றம் தரும்
ஏணிப்படிகள்.
நாணயத்தின் இரு
பக்கங்கள்.

அன்று ஏட்டுச்சுருள் –
ஓலைச்சுருளில் கல்வி.
இன்று கணனிக்கல்வி
– காணொளிக்கல்வி.

காய்த்த கிளை,
கனிந்த கிளை,
தாழ்ந்து நிற்கும்.
கதிர் வந்த பயிர்
தலை சாய்ந்து நிற்கும்.

கனிவுடன், பணிவுடன்
வாழ்வது
கற்ற கல்விக்கு அழகு
பெற்ற கல்விக்கு
பெருமை.

தலைக்கனத்துடன்
தலை – கால்
தெரியாது வாழ்வது,
கற்ற கல்விக்கு –
இழுக்கு. பெற்ற
கல்விக்கு – பேரவலம்.

கற்ற கல்வியை
வணிகமாக்குவது
கல்விக்கு இழுக்கு.

கற்ற கல்வியால்
வணிகத்தை வளர்ப்பது
கல்விக்கு அழகு.

தெரியாததைத்
தெரிந்தோரிடம்
தேடிக்கற்பது –
கல்விக்கு அழகு.

தெரிந்ததை –
தெரியாதோருக்கு
தெரிவிப்பதும்.
கல்விக்கு அழகு.

தெரியாததை
தெரியாது –
எனத்தெரிவிப்பது –
தன்மானம்.


தெரியாததையும்
தெரியும்
எனத்தெரிவிப்பது –
அவமானம்.

பெற்ற கல்வியின்
பொருள் தெரிவது
பண்பட்ட வாழ்வு.
அ:்து இன்றேல்
அது புண் பட்ட தாழ்வு.

கல்வியே சிறந்த ஒளி.
வாழ்வுக்கு சிறந்த வழி.
அதுவே – ஞான ஒளி.

✿✿✿✿✿✿✿✿

**பென்ஜமின் சோமநாதர்.**
**தெஹிவளை.**



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**பொதுக்காலத்தின் 18வது ஞாயிறு (05.08.2018)**

**பேதுரு**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 18வது வாரத்தில் கால்பதிக்கும் அன்பின் இறைமக்களே! கடவுள் நம்முடன் இருக்கின்றார். அவர் ஒருவரே கடவுள் என்பதை இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. மனிதனின் மனம் பாவ வாழ்க்கையில் கரையலாம். ஆனால் கடவுளின் மனம் அன்பில் கரையும். அதனால்தான் நாம் என்றும் வாழ்வைக் காண கடவுள் கிறிஸ்துவை நமக்குத் தந்தார். கிறிஸ்து நம் அனைவருக்கும் வாழ்வின் நெறிமுறைகளை கற்றுத்தந்தார். தனது வாழ்க்கையின் மூலம் நம் அனைவரையும் முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் சென்றுள்ளார். இதைத்தான் இன்றைய இரண்டாம் வாசகமும் நற்செய்தியும் கோடிட்டுக் காட்டுகின்றன. "நானே வானிலிருந்து இறங்கிவந்த உணவு" என்கிறார் இயேசு. தனது பிறப்பு முதல் இறப்பு வரை ஏன் இறந்தபின்னும் தன்னை வாழ்வு தரும் உணவாக வெளிப்படுத்துகின்றார். அப்பங்களை வயிறார உண்ட மக்கள் இயேசுவைத் தேடியதுபோல் நாமும் நமது தேவைகளுக்காக கடவுளைத் தேடுகின்றோமா? அல்லது நமது அன்றாட அப்பமான இயேசுவை தேடுகின்றோமா? சிந்திப்போம். செயல்படுவோம்.

**முதல் வாசகம் : வி.ப 16:2-4, 12:15**
நான் உங்களுக்காக வானத்திலிருந்து அப்பத்தைப் பொழியப் போகிறேன்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவர் அவர்களுக்கு வானத்து உணவை வழங்கினார்.

**இரண்டாம் வாசகம் : எபேசி 14:17,20-24**
கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா! மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாக கடவுளின் வாய்ச் சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர் அல்லேலுயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 6:24-35**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கடவுள் அன்பின் வெளிப்பாடாகத் திகழும் திருஅவையையும் அதன் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், இறைமக்கள் என அனைவர் மீதும் உமது அன்பைப் பொழிந்து அருள் வரங்களால் நிரப்பி என்றும் அன்பின் சாட்சிகளாக விளங்கிடத் தேவையான அருட்கொடைகளை இவர்கள் மீது பொழிந்தருள வேண்டுமென்று...

இன்றைய சூழலில் அன்பின்மையால் நாட்டு மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் விலகவும், எல்லா மக்களும் அன்பிலும் நட்பிலும் உண்மையிலும் உறுதியுடன் வாழவும் கடவுளை அன்பு செய்வது போல் அயலானை அன்பு செய்யவும் வேண்டிய வழிகாட்டலை அரசியல் சமூக சமயத் தலைவர்கள் வழங்கிடத் தேவையான அருட்கொடைகளை எல்லோர் மீதும் பொழிந்தருள வேண்டுமென்று...

கிறிஸ்தவ மக்களாகிய நாம் ஒரே கடவுள் மீது விசுவாசம் கொள்ளவும், தீமைகள் தலைவிரித்தாடும் பொருளாசையை அகற்றவும், மிகுதியான செல்வத்தையும் உரிமைகளையும் கொண்டிருப்பதால் மட்டும் நமக்கு வாழ்வு வந்துவிடாது என்பதை உணரவும், கடவுளை என்றுமே நாம் தொழுது ஆராதிக்கவும் விசுவாசமுடன் அவரது அன்பின் திருவிருந்தைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டிய அருட்கொடைகளை எம்மீது பொழிந்தருள வேண்டுமென்று...

**பொதுக்காலத்தின் 19வது ஞாயிறு (12.08.2018)**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 19வது ஞாயிறு தினமான இன்றைய நாளிலே இறைவனுக்கு நன்றிப்பலி செலுத்த ஒன்றுகூடி வந்துள்ள அன்பு நெஞ்சங்களே இறைமக்களே! இன்றைய நற்செய்தியில் இயேசு "விண்ணிலிருந்து இறங்கி வந்த உயிருள்ள உணவு நானே" என்று கூறிய போது யூதர்கள் அவருக்கு எதிராக முணுமுணுக்க தொடங்குகின்றனர். ஏனெனில் அவர்கள் வானத்தில் இருந்து இறங்கி வந்த உணவு மன்னா என்று நம்பியிருந்தனர். அவர்களுடைய நம்பிக்கை தவறானது என்றும், மோயீசனை விடத் தான் பெரியவர் என்றும் விளக்குகின்றார். இயேசுவே விண்ணகத்துக்குரியவர் ஒளியாக, வழியாக, உண்மையாக இருக்கின்றார். விண்ணிலிருந்து இறங்கி வந்த உணவு நானே என்று இயேசு கூறியதும் அதை ஏற்க மறுத்தவர்கள் அவருக்கு எதிராக முணுமுணுக்கின்றார்கள். இந்நிலையில் நாமும் நமது வாழ்க்கையில் உண்மையானவை, சரியானவை எங்கிருந்து எவரிடமிருந்து வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாகவும் உண்மைக்குப் புறம்பானவற்றை புறக்கணிக்கக் கூடிய துணிச்சல் உள்ளவர்களாகவும் செயல்பட வேண்டும். இதற்கு வேண்டிய மனவலிமையைக் கேட்க பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : 1அர 19:4-8**
அவ்வுணவினால் வலிமையடைந்த எலியா நாற்பது பகலும், நாற்பது இரவும் நடந்து ஒரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தார்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்.

**இரண்டாம் வாசகம் : எபே 4:30-5:2**
கிறிஸ்து உங்களிடம் அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பு கொண்டு வாழுங்கள்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த வாழ்வுதரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவா 6:41-51**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

"விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே" என்ற இயேசுவின் வார்த்தையை வாழ்வாக்கி நற்கருணைப்பலி விருந்தை அருட்சாதனமாக வழங்கி-வரும் திருஅவையின் தலைவரான திருத்தந்தை, ஆயர், குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரையும் ஆசீர்வதித்து அவர்களுக்குத் தேவையான உடல் உள ஆன்ம பலத்தை தந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டிற்குத் தேவையான உணவையும் ஏனைய பொருட்களையும் நானே உற்பத்தி செய்து தன்னிறைவு அடையவும் இலாப நோக்கையும் சுயநலன்களையும் அகற்றி பொதுநல மனநிலையை உருவாக்கி அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவும், பேதங்களற்ற சமச்சீரான பகிர்வை மேற்கொள்ளவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

இயேசுவின் உண்மையான உணவாகிய நற்கருணையை எமது விண்ணக வாழ்விற்கான ஒளியாக வழியாக உண்மையாக ஏற்றுக்கொள்ளும் நாம் அதனால் ஊட்டம் பெற்று எம் மத்தியில் வாழும் ஏழை எளியவர் நோயாளர் போன்றவர்களுக்காக எம்மால் இயன்ற சேவைகளை செய்து வாழ வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# நில்! கவனி! செபம் செய்



வாழ்வு தரும் இறைவார்த்தை, நம்வாழ்வு, நம் பாதைக்கு ஒளியும் அதுவே. இது நமக்கு பழைய ஏற்பாடு - புதிய ஏற்பாடு என கொடுக்கப்பட்டிருக்கிறது. "ஏற்பாடு" என்றால் கடவுளுக்கும் நமக்கும் ஏற்பட்ட ஓர் ஒப்பந்தம். ஆண்டவரிடம் பேச முடியுமா? ஆண்டவரிடம் கேட்க முடியுமா? முடியும். எப்படி? செபத்தின் மூலமாக. நாம் கேட்பது உண்மையானதும் விசுவாசத்தின் அடிப்படையானதும் இருக்குமேயானால், இரட்டிப்பான நன்மைகளை கடவுள் நமக்குத் தருவார். செபத்தைப் போல ஊடுருவும் ஆயுதம் எதுவுமில்லை. சாத்தானின் கோட்டையைத் தகர்க்கும் சக்தி இதற்கு மட்டுமே உண்டு.

இயேசு கிறிஸ்து கற்றுத் தந்த செபத்தில் வரும் வார்த்தைகள் "உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல, பூலோகத்திலும் செய்யப்படுவதாக." இதன் பொருள், நாம் விரும்புவதை இறைவன் நமக்குச் செய்ய வேண்டும் என்பதன்று, மாறாக இறைவன் விரும்புவது நம்மால், நம்மில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே! செபமும், விசுவாசமும் நாணயத்தின் இரு பக்கங்கள். என்றால் மிகையாகாது. தளராத விசுவாசத்தால்தான் பல ஆண்டுகளாக குழந்தை இல்லாத நிலையிலும் அன்னா செபத்தில் இருந்து பின்வாங்கவில்லை. கடவுள் குழந்தையை கொடுக்கும் வரை தொடர்ந்து மனமுருகி வேண்டுகின்றார். முட்டி காலூன்றி கைகளை விரித்து அதீத நம்பிக்கையுடன் செபம் செய்யும்போது நமது வேண்டுதல்கள் கனிவாய் கேட்கப்பட்டு மகிழ்வோடு பதில் கிடைக்கும்.

செபத்தில் இறைவனை முதன்மைப்படுத்-தும்போது விண்ணப்பங்கள் விரைவில் அங்கீகரிக்கப்ப-டுகின்றன. நமது விண்ணப்பங்கள் உடனுக்குடன் அங்கீகரிக்கப்படவில்லையெனில் கடவுள் நம்மை கைவிட்டுவிட்டார் என புலம்புகிறோம். தாமதம் என்பது நிராகரிக்கப்பட அல்ல, நமது விசுவாசத்திற்கான சோதனை என்பதை உணர்வோம்.

"சோர்ந்து போகாமல் எப்பொழுதும் செபம் செய்யவேண்டும்" (லூக் 18:1) "என் செபத்தை கடவுள் கேட்டிருக்கிறார். அவர் சகலத்தையும் என் வாழ்வில் நன்மைக்கேதுமாய் செய்து கொண்டும் இருக்கின்றார்" (உரோ 8:28)

செபம் அணு ஆயுதத்தைவிட மிகவும் வல்லமை வாய்ந்தது. உலகத்தில் உள்ள எல்லா சேனைகளையும்விட சக்தி வாய்ந்தது என்பதை திடமாக நினைத்து சோதனைகள், தோல்விகள், தேவைகள் அனைத்தும் செபத்தின் மூலமாக இறைவனிடம் விட்டுவிட்டு அன்பினில் பிறந்த இறைகு-லமாக செபத்தில் ஜெயம் பெறுவோம்.

# அன்னையின் விண்ணேற்பு



அன்னை மரியாள்
தவம் செய்தாள்.
அரும் பரன் தனையும்
நோக்கி நிதம்
தம்மை, தமது
கன்னிமையை
தக்க விதமாய்
காத்திடவே!

விண்ணில் இருந்தே
வந்தவராம்
வியத்தகு தூதர்
தோன்றி அவர்
கண்ணில் தெரியக்
கூறியது
கடவுள் உம்மிடம்
பிறப்பாரே!

நானோ கன்னி
என்றாலும்
நன்றே ஏற்பேன்
கட்டளையை
வீணாய் பழிகள்
வந்தாலும்
தேவன் துணையால்
நீங்கிடுமே!

என்றே மரியாள்
கீழ்ப்படிந்தார்
இவ்வாறெல்லாம்
நிறைவாகி

நன்றே ஒருநாள்
மரித்தாலும்
நாநிலம் புகழ
நடந்ததென்ன?

இறந்த மரியாள்
உயிருடலாய்
விண்ணேற்படைந்தார்
இறையருளால்
நன்றே நம்மைக்
காக்கின்றார்
நாளும் அவர் புகழ்
போற்றிடுவோம்!

# அதிமேதகு. ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை

## ஆயர்த்துவ வாழ்வின் 50வது வருட யூபிலி விழா நிகழ்வுகள்



















படங்கள் :

# கையின்
## ர்.



திரு. மைக்கல் பர்னாந்துபுள்ளே










# அறிந்து கொள்வோம்



## *காலம்*

- **நேரத்தைத்** தள்ளிப் போடாதே, தாமதங்கள் அபாயமான முடிவைக் கொண்டுள்ளன.

  **– ஷேக்ஸ்பியர்.**
- **கடந்துபோன** நேரம் ஒருபோதும் திரும்பி வருவதில்லை. **– ஆகே**
- **நேரம்,** இருக்கும்பொழுது சரியாகப் பயன்படுத்திக்கொள். ஏனென்றால், நேரம் கடந்துவிட்டால் திரும்பப் பெறலாகாது.
- **காலத்தின்** மதிப்பை அறிந்துகொள். அதைப்பிடி, கைப்பற்று. அதன் ஒவ்வொரு வினாடியையும் அனுபவி. சோம்பலே வேண்டாம். தள்ளிப்போட வேண்டாம். இன்றைக்குச் செய்ய வேண்டியதை நாளைக்கென்று ஒத்திப்போட வேண்டாம்.

  **– செஸ்ட்டர்ஃபீல்டு பிரபு.**
- **காலம்** புத்தியுள்ள அறிவுரையாளர்.

  **– பெரிக்ளிஸ்.**
- **நேரத்தை** வீணாக்காதே. வாழ்க்கை உண்டாக்கப்பட்டதே அதனால் தான்.

  **– பிராங்க்லின்.**
- **நாளைய** தினத்தைக் குறைவாக நம்பு, இன்றைய தினத்தை அனுபவி.

  **– ஹோரேஸ்.**
- **ஆயுளே** நமக்குக் குறைவு. காலத்தை வீணாக்குவதால் உன்னுடைய ஆயுளை இன்னும் கொஞ்சம் குறைத்துக் கொள்கிறாய்.

  **– விக்டர் ஹ்யூகோ.**
- **பகலுக்குக்** கண்கள் உண்டு. இரவுக்குச் செவிகள் உண்டு.
- **பன்னிரண்டு** ஆண்டுகள் சென்றால் குப்பைமேடும் செழிப்பாகிவிடும்.

## *சோம்பேறித்தனம்*



- **சோம்பலாயிருப்பது** முட்டாள்கள் எடுத்துக்கொள்ளும் விடுமுறையாகும்.

  **– செஸ்ட்டர் ஃபீல்டு.**
- **சோம்பியிருக்கும்** மூளை சாத்தானின் பணி மனை.
- **சோம்பியிருக்கும்** மனம் சாத்தானின் பணி மனை.
- **சோம்பேறித்தனம்** பலவீனமுள்ளவர்களின் ஒரே புகலிடம்.

  **– செஸ்ட்டர் ஃபீல்டு**
- **சோம்பேறித்தனத்தைவிட** துக்கத்திற்குக் காரணம் வேறெதுவும் அதிகமிருக்க முடியாது.

  **– பர்ட்டன்.**
- **மனச்** சுத்தமும் சோம்பேறித்தனமும் பொருந்தாத விஷயங்கள்.

  **– காந்தி.**
- **ஒன்றுமில்லாமலிருப்பதற்கு** வழி ஒன்றும் செய்யாமல் இருப்பதே.

  **– நத்தானியல் ஹோாவே.**
- **சோம்பலின்** விளைவு தரித்திரம். முயற்சியின் விளைவு முன்னேற்றம்.
- **சோம்பேறித்தனம்** மிகப் பெரிய ஊதாரித்தனம்.
- **சாவி** பூட்டில் திரும்புகிறது. சோம்பேறி படுக்கையில் திரும்புகிறார்.

# 4. தனிச் செபப் பழக்கம்

## 16. இறை அன்னையிடம் கேளுங்கள் (புனித பேர்னாட்)

**அன்பான அம்மா!**

நீர் நிறைந்த இரக்கம் உள்ளவராக இருக்கிறீர். உம் பாதுகாப்பையும் பராமரிப்பையும் தேடி நான் உம்மிடம் ஓடி வருகிறேன். உம்மிடம் உதவிகேட்டு வருவோருக்கு நீர் ஏராளமான கொடைகளைத் தருகிறீர். உம் கொடைகளை எனக்கு தரவேண்டும் என்று உம்மை இரந்து கேட்கிறேன். உம்மிடம் உதவிகேட்டு வந்தோரை வெறுங்கையராய் அனுப்பினீர் என்று இந்நாள் வரை பதிவு இல்லை. கன்னியரின் அரசியே! இரக்கமுள்ள அம்மா! நான் உறுதியான நம்பிக்கையோடு உம் புனிதப் பாதங்களை நாடி வந்திருக்கிறேன். பெரும் சுமைகளால் வருந்தி, பெருமூச்சோடு அழுது புலம்புகிறேன். நான் பாவியாக இருந்தாலும் உம் இரக்கத்தைப் பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு நிறைவாக இருக்கிறது. கடவுள் மனிதனாவதற்கு துணைநின்ற தாயே! என் தாழ்மையான வேண்டுதல்களை இரக்கத்தோடு கேளும் அம்மா. ஆமென்.

**குறிப்பு:**

புனித பேர்னாட் அன்னை மரியாவிடம் அதிகம் அன்பு கொண்டிருந்தார். இவர் அன்னை மரியாவிடம் மன்றாடிய இச்செபம் இவரின் காலத்தின்பின் திருச்சபையில் அன்னையிடம் மன்றாடும் மிகவும் முக்கிய செபங்களில் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. இச்செபத்தால் நன்மையடைந்தவர் பலர், இச்செபத்தை தொடர்ந்து செபிக்குமாறு மேலும் பலரைத் தூண்டியுள்ளார்கள். இச்செபத்தை நீர் ஒவ்வொரு நாளும் திருச்செபமாலையின் பின் செபித்துவாரும்.

## 17. திருச்செபமாலைத் தியானம் செய்யும்

திருச்செபமாலைத் தியானம் கத்தோலிக்க திருச்சபையின் பழைமையான பாரம்பரியச் செபச் சொத்து. இது கிறிஸ்துவின் மறைநிகழ்வுகளைச் சிந்தித்து, மரியாவுடன் சேர்ந்து மன்றாடும் முறை. இதில் மகிழ்ச்சி, ஒளி, துயரம், மகிமை என்ற நான்கு தொகுப்புகள் உள்ளன. ஒவ்வொரு தொகுப்பும் ஐந்து மறைநிகழ்ச்சிகளையும் கொண்டுள்ளது. இவ்வாறு இயேசுவின் இருபது மறைநிகழ்வுகள் ஒன்றாகக் கோர்க்கப்பட்டு, ஒரு முழுச்செபமாலையாக நாம் தியானிக்கிறோம்.

மகிழ்ச்சியின் மறைநிகழ்வுகளில் இயேசுவின் பாலப்பருவ நிகழ்வுகளையும், ஒளியின் மறைநிகழ்வுகளில் அவரின் பகிரங்க வாழ்வின் நிகழ்வுகளையும், துயர மறைநிகழ்வுகளில் அவரின் பாடுகளையும், மரணத்தையும், மகிமையின் மறைநிகழ்வுகளில் அவரும் அவரின் தாயும் நிலைவாழ்வில் மகிமை பெறுவதையும் தியானிக்கிறோம்.

ஒவ்வொரு மறைநிகழ்வுத் தியானமும் இயேசு கற்றுத் தந்த இறைவேண்டலையும், பத்து மங்கள வார்த்தை இறை வேண்டல்களையும் மூவொரு இறைவனின் புகழையும், ஓ என் இயேசுவே என்ற பாத்திமா நகரில் அன்னை மரியா தந்த வேண்டலையும் உள்ளடக்கியுள்ளன. இந்த இருபது மறை நிகழ்வுகளையும் தொடர்ச்சியாக செபிப்பதே சிறந்தது. முழுவதையும் ஒன்றாகச் செபிக்க அதிக நேரமாகும் என்பதால், ஒரு நாளுக்கு ஒரு தொகுப்பு மறைநிகழ்வுகளைத் தியானித்தாலே போதும் என்ற நிலை இப்போது உருவாகியுள்ளது. இதனோடு அன்னையின் புகழ்மாலையையும் சேர்த்துச் செபிப்பது நன்மை தரும்.

**குறிப்பு:**

நீர் திருச்செபமாலையை செபிப்பதற்கு இலகுவாக ஒவ்வொரு காரணிக்கத்திலும் உள்ள பத்து அருள்நிறை மரியே என்று செபத்துக்கும் ஒவ்வொரு சிந்தனையாக பத்துத் தியானங்களைத் தந்துள்ளோம். நீர் ஒவ்வொரு தியானத்தின் பின்னும் அருள்நிறை மரியே என்ற செபத்தை மன்றாடும்போது, பராக்குகள் இல்லாமல் செபிக்க இவை துணை நிற்பதைக் காண்பீர்.

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**

# கட்டுப்பாடு

**வா**ல் பட்டமும் கிரீடப் பட்டமும்
வானில் பறக்க ஆரம்பித்தன.
கீழே இரு சிறுவர்கள் ஒய்யாரமாக
அவற்றின் நூல் நுனியை இயக்கிக்
கொண்டிருந்தனர்.

இரு பட்டங்களையும் காற்று நண்பன்
உசுப்பேற்றி விட...
உயரப் பறக்கப் பார்த்தன.

ஆனால்... நூல் நண்பன் அவர்களை
விடவில்லை.
பூமியை நோக்கி 'வெக்கு வெக்கு' என
இழுத்துவிட்டுக் கொண்டிருந்தான்.

**கடுப்பானது வால் பட்டம்:**

'இந்தக் காற்று நண்பன் மேலே கூட்டிச் சென்று
என்னை முன்னேற்ற முயற்சி செய்கிறான்.
ஆனால் இந்த நூல் நண்பனோ...
என்னைப் பூமியை நோக்கிக்
கீழே இழுத்துக் கொண்டிருக்கிறானே..!
இவனெல்லாம் ஒரு நண்பனா?'


**முடிவுக்கு வந்தது:**

'இந்த நூல் நண்பனின் உறவு
எனக்கு வேண்டாம்...
அறுத்துக் கொள்ளப் போகிறேன்...!'

**எச்சரித்தது கிரீடப் பட்டம்:**

'ஐயோ அப்படியெல்லாம் செய்து விடாதே...!
நீ இப்படி உயரப் பறக்கக் காரணமே
அந்த நூல் நண்பன் தான். உன்னைக்
கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும்
அவன் தான். அதுவே அவனது பணி.
அவனது உறவும் நட்பும் நமக்கு
மிக மிக அவசியம். மறந்துவிடாதே...!'

கேட்காத வால்பட்டம்... சொல்லச் சொல்ல
நூல் நண்பனின் உறவைத்
துண்டித்துக் கொண்டது.




**உயர உயரப் பறக்க ஆரம்பித்தது:**

'ஆஹா... என்னே கட்டுப்பாடற்ற
வாழ்க்கை.
இனி வானம் தொட்டுவிடும் தூரம் தான்...!'
கொஞ்ச நேரத்தில் காற்று வேகமாக வீசியது.
தாக்குப் பிடிக்காத சுதந்திரப் பட்டம்
தாறுமாறாய்ப் பறக்க ஆரம்பித்தது.

அந்த வால்பட்டத்தின் வால் காணாமல் போனது.
கொஞ்ச நேரத்தில் தன் உறுப்புகள்
ஒவ்வொன்றையும் தவணை முறையில் இழந்தது.

**இறுதியில்...**

முள் மரத்தில் மாட்டிக் கொண்டு
பரிதாபமாகச் செத்தே போனது.
செத்துக் கிடந்த வால்பட்டத்தைப் பார்த்து
கட்டுப்பாடோடு பறந்த கிரீடப்பட்டம் சொன்னது:
**'நூலற்ற காற்றாடி நொந்து நூலாகும்'**
**கட்டுப்படுத்தும் நண்பனே கரை சேர்ப்பான்.**



# இறைவன் உன்னை அழைக்கின்றார்

உனது வாழ்வு ஒரு பயணம். குழந்தைப் பருவத்தைக் கடந்து, குமரப் பருவத்தையும் தாண்டி, நீ இளமைப் பருவத்தில் அடியெடுத்து வைத்துள்ளாய்.

இப்போது நீ ஓர் இளைஞன், இளம் பெண்!. உன் உடலில் எவ்வளவு மாற்றம்! எத்துணை வளர்ச்சி! உடலில் மட்டுமல்ல, உன் உள்ளத்திலும் பல மாற்றங்கள் நிகழ்வதை நீ உணரலாம். ஆம் நீ வளர்ந்து வருகிறாய், முதிர்ச்சியின் பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறாய்.

ஒவ்வொரு நாளும் நீ வாழும் சமுதாயத்தை ஊடுருவிப் பார்க்கிறாய். அங்கு நிகழ்பவை உன் கண்களுக்கு வெட்ட வெளிச்சமாகின்றன. இப்போது நீ எல்லாவற்றையும் நோக்கும் விதமே வித்தியாசமாக உள்ளது, உனது கண்ணோட்டம் மாறுபட்டு வருகிறது. குடும்பத்தில், தெருவில், பாடசாலையில், பங்கில், ஊரில் நடக்கும் நிகழ்ச்சிகளை நீ அப்படியே ஏற்றுக்கொள்வதில்லை. எல்லாவற்றிற்கும் “ஆம்” என்று சொல்வதில்லை. ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளைக் கேட்கிறாய். ஏனெனில், நீ சிந்திக்கத் தொடங்கிவிட்டாய்!

சிந்திக்கத் தொடங்கிவிட்ட உன்போன்ற இளைஞர்களின் வாழ்க்கை அனுபவங்களையும், அவர்களில் ஏற்பட்ட சமுதாயத் தாக்கங்களையும், அதனால் எழுகின்ற வினாக்களையும் கேட்க உனக்கு விருப்பமா? இதோ, அவர்களே பேசுகிறார்கள்:



“சூசையும் நானும் ஒரே வகுப்பில் படிக்கிறோம். சூசை தேர்வில் கொப்பி அடித்தான். நிறைய மதிப்பெண்கள் பெற்றான். நான் நன்றாகப் படித்து நேர்மையோடு தேர்வு எழுதினேன். எனக்கோ குறைவான மதிப்பெண்கள்! குறுக்கு வழியில் மதிப்பெண்கள் பெற்ற அவனுக்குப் பாராட்டு, எனது நேர்மைக்குக் கிடைத்த பரிசோ ஆசிரியரின் திட்டு. இது என்ன சமுதாயம்?”

**– அமலன்**

“என் அத்தையும் மாமாவும் என்னை அவர்களுடைய ஊர்த் திருவிழாவிற்கு அழைத்துச் சென்றார்கள். திருவிழாவின்போது நற்கருணை பவனி எங்கள் தெருவிற்கு வரவில்லை. நான் என் மாமாவை ‘ஏன்’ என்று கேட்டேன். “நாமெல்லாம் கீழ் சாதியாம். அதனால் நற்கருணை பவனி இங்க வராது” என்றார். கிறிஸ்தவர்களுக்குள் சாதி வேறுபாடு பார்ப்பது சரியா?




**– ராபர்ட்.**



“என் அண்ணன் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அவருக்கு இதுவரை வேலை கிடைக்கவில்லை. அவரைவிட குறைவாக மதிப்பெண்கள் பெற்ற மூர்த்திக்கு உடனே வேலை கிடைத்துவிட்டது. காரணம், மூர்த்தி ஓர் அரசியல்வாதிக்கு லஞ்சம் கொடுத்தாராம். இந்த நாட்டில் தகுதிக்கு இடம் இல்லையா!?”

**– பிரிட்டோ.**

“என் அம்மா வாரம் தவறாமல் நற்செய்திக் கூட்டத்திற்குச் செல்வார். ஆனால் பக்கத்து வீட்டு பாக்கியாவுடன் நான் பேசக்கூடாது என்று தடை உத்தரவு. ஏன் தெரியுமா? பாக்கியாவின் அம்மாவும் என் அம்மாவும் சண்டை போட்டுக் கொண்டார்கள். கடந்த ஆறு மாதங்களாக பேச்சு வார்த்தையே கிடையாது. அப்படியானால் நற்செய்திக் கூட்டத்திற்குப் போவதால் என்ன பயன்?”



**– ஸ்டெல்லா**

இவை போன்ற இன்னும் பல அநீதிகளை நீ வாழும் சூழ்நிலையில் காணலாம். இவையே உன்னுடைய அனுபவங்களாகவும் இருக்கலாம். நீயும் இத்தகைய கேள்விகளைக் கேட்கலாம்.

- “இப்படி வாழ்ந்தால்தான் பிழைக்க முடியும். எனவே ஊரோடு ஒத்துப்போவது நல்லது”
- “யார் எப்படிப் போனால் எனக்கென்ன? நான் மட்டும் நன்றாக இருந்தால் போதும்” என்கின்றனர் வேறு சிலர்.
- “நமக்கேன் இந்த வம்பு? இவற்றைக் கண்டுகொள்ளவே கூடாது” - இப்படியும் பலர்.

ஆனால் இறைவன் என்ன கூறுகிறார் என உனக்குத் தெரியுமா? அவரே பேசுகிறார், கவனமுடன் கேள்.

“இதோ புதிய வானத்தையும் புதிய பூமியையும் நாம் படைக்கிறோம், முன்னையவை நினைவில் இருக்கமாட்டா, எண்ணத்திலும் தோன்றமாட்டா. நாம் படைக்கப்போவதைக் குறித்து நீங்கள் என்றென்றும் மகிழ்ந்து அக்களிப்பீர்கள்” (எசா.65:17-18)

அக்காலத்தில் இஸ்ரயேல் மக்களிடையேயும் பல சமூக அநீதிகள் மலிந்து கிடந்தன. லஞ்சம், ஊழல், கொத்தடிமை, ஏழைகளையும், விதவைகளையும், கொடுமைப்படுத்துதல், போலி வழிபாடு, அன்னிய தெய்வங்களை வழிபடுதல் போன்ற பல தீமைகள் நிறைந்திருந்தன. இதனால் மக்கள் இறைவனோடும் அயலாரோடும் உறவு கொள்ள முடியாமல் வாழ்ந்தனர்.

இந்நிலையை மாற்றி, விசுவாசம், அன்பு, உண்மை, நேர்மை, பகிர்வு, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற இறையரசின் மதிப்பீடுகளின்படி வாழ்கின்ற புதிய சமுதாயத்தை உருவாக்க இறைவன் விரும்பினார்.

அதற்காக இறைவாக்கினர்களை அழைத்தார். தம் ஒரே மகன் இயேசுவையும் இவ்வுலகிற்கு அனுப்பினார். அவர் தந்தையின் திருவுளப்படி கட்டியெழுப்ப, தம்மீது விசுவாசம் கொண்ட அனைவரையும் அழைக்கின்றார். அவர் உன்னையும் அழைக்கின்றார்.


## மாணவர் ஒலி



“என் நண்பன் வில்லியம் ஞாயிற்றுக் கிழமையானால் வெகுநேரம் தூங்குவான். டி.வி பார்ப்பான். திருப்பலிக்கோ, மறைக்கல்வி வகுப்பிற்கோ செல்வது இல்லை. அவனுடைய பெற்றோரும் அதைக் கண்டுகொள்வது இல்லை. ‘ஏண்டா நீ கோயிலுக்கு வர்றதில்லே?’ என்று நான் கேட்டால் அதெல்லாம் எனக்குத் தேவையில்லை’ என்கிறான். இது சரியா?”



**–லியோ**



“ரவி தன் அபிமான நடிகர் நடித்த படம் வெளிவந்த முதல்நாளே பார்த்துவிடுவான். ஐந்து ரூபாய் டிக்கெட்டை ஐம்பது ரூபாய் கொடுத்தாவது வாங்கி விடுவான். “நம்ம தலைவர் படம்” என்பான் ஒரு திரைப்பட நடிகர் எனக்குத் தலைவன் ஆக முடியுமா?”

**–ஜான்சன்**



“பாவம் நிர்மலாவின் அக்கா! அவளுடைய கணவர் அவளை வீட்டைவிட்டு துரத்திவிட்டார். ஏற்கனே கொடுத்த வரதட்சணை போதவில்லையாம். இன்னும் ஐம்பதாயிரம் ரூபாய் வேண்டுமாம். என்ன கொடுமை?’

**– லீமா**

## நீ உருவாக்கும் சமுதாயத்தில்

| | | |
|---|---|---|
| பொய்மைக்குப் பதிலாக | - | வாய்மை |
| பகைமைக்குப் பதிலாக | - | அன்பு |
| பிளவுக்குப் பதிலாக | - | ஒற்றுமை |
| பதுக்கலுக்குப் பதிலாக | - | பகிர்வு |
| வன்முறைக்குப் பதிலாக | - | மனித நேயம் |
| சாதிக் கொடுமைக்குப் பதிலாக | - | மனித மாண்பு |
| அடக்குமுறைக்குப் பதிலாக | - | சுதந்திரமான சிந்தனை |

போன்றவை அடித்தளமாக அமையவேண்டும்.

- இதை எப்படிச் செய்ய முடியும் என நீ தயங்குகின்றாயா? தயங்காதே! இறைவன் உன்னோடு இருக்கிறார். தூய ஆவி உன்னை வழிநடத்துகிறார். அவரே உனக்கு ஆற்றலைத் தருகிறார். அதற்காகத்தான் நீ உறுதிப்பூசுதல் பெற்றிருக்கிறாய்.
- ‘இதற்காக என்னை எப்படித் தயாரிக்க முடியும்’ எனத் தயங்குகிறாயா?

தயங்காதே! தூய ஆவியே உன்னைத் தயாரிக்கிறார். அவரே உன்னை பக்குவப்படுத்துகிறார். திறந்த உள்ளத்தோடு நீ உன்னை அவருக்கு அர்ப்பணித்தால் போதும்.

# விடுமுறை வருகிறது ஜோலிதான்



“விட்டாச்சு லீவு! வாங்க ரிலெக்ஸ் பண்ணுவோம்,” என்று வரவேற்பதுதான் இம்மாத விடுமுறை. விடுமுறை எல்லா தரப்பினருக்குமுரிய வயது வரம்பற்றது. டென்ஷனைக் குறைத்து, மீண்டும் புத்துணர்வோடு சந்தோஷமாக ஜாலியாக விளையாடலாம் என ஏங்கும் குழந்தைகள் பலர்.

குளத்துக்குள் தினம் வாழ்நாளை முடித்தாலும், தாமரையின் அழகு அறியாதது தவளை என்போம். ஆசிரியர் அன்றாட பாடநூல்களை இயல்பாக வாழ்வோடு, எடுத்து இயம்பினாலும், அநுபவ அறிவே சிறந்ததாக கருதுவது நாமறிந்த உண்மை. விடுமுறை நாட்கள், மாணவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பயனுள்ளதாக மாற வேண்டும்.

“உணர்வுகள் வாழ்வை தீர்மானிப்பதில்லை. நமது வாழ்வின் சூழல்கள், தான் மனித உணர்வுகளைத் தீர்மானிக்கின்றன என்கிறார் மார்க்கஸ். மாணவச் சமுதாயம், விடுமுறை நாட்களின் உண்மையான நோக்கத்தை புரிந்துகொண்டு எழுத்துப் பயிற்சி பெறுவதும், பிழையின்றி எழுதுவதும், வர்ணம் தீட்டுதல், ஓவியம் வரைதல், நுண்கலை வகுப்புகளில் கலந்து கொண்டு சிந்தனை திறனை வளர்த்தல், பொது அறிவை வளர்த்துக் கொள்ள நல்ல புத்தகங்களை வாசித்தல், ஆடல், பாடல், இசை என பல கலைகளைக் கற்றுக் கொள்ளுதல். அயல் மொழிகளைக் கற்றல், கணனியை இயக்கக் கற்றல், தங்களின் திறமைக்கு ஏற்றாற்போல் நம்மையே வடிவமைத்துக் கொள்ளுதலுக்கான ஓர் உன்னதமான, மகத்தான, நேரம் தான் இவ்விடுமுறைக் காலம். அறிவியல் வளர்ச்சிக் கால சூழலில், நமது உறவுகளை வளர்த்துக் கொள்ளவும், ஒதுக்கப்பட்ட தருணத்தைக் கொண்டாடி மகிழ்வதே விடுமுறை.

ஆகவே மாணவர்களே அதிக நேரம் தொலைக்காட்சியில் செலவிடுவதைவிட, கணனியில் விளையாடி, நேரத்தை வெறுமனவே வீணடிக்கும் நேரத்தை மறந்து உலகின் மாற்றத்திற்கேற்ப வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக உதவும் வகையில் விடுமுறையை குதூகலமாக கொண்டாடி வாழ்வின் வளத்தைப் பெருக்கிடுவோம்.



# “நமதன்னையின் அணிகள்” கூட்டத்திற்கு திருத்தந்தை செய்தி



பாத்திமாவில், கிறிஸ்தவத் தம்பதியர்க்கென நடத்தப்பட்ட பன்னாட்டு கருத்தரங்கில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு திருத்தந்தை செய்தி அனுப்பியுள்ளார்.

திருஅவை, உண்மையைக் கூறவேண்டியிருப்பதால், பாவத்தைக் கண்டிக்கிறது, அதேநேரம், பாவி என தன்னை ஏற்பவரை அரவணைத்துக்கொள்கிறது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருமணமான கிறிஸ்தவத் தம்பதியர் பங்குபெறும் ஒரு பன்னாட்டு கருத்தரங்கிற்குச் தனது செய்தி மூலம் கூறினார்.

போர்த்துக்கல் நாட்டின் பாத்திமாவில் “நமதன்னையின் அணிகள்” எனப்படும், ஒரு பொதுநிலை இயக்கத்தினர் நடத்திய கருத்தரங்கிற்குச் செய்தி அனுப்பிய திருத்தந்தை, தந்தையிடம் திரும்பிவந்த காணாமல்போன மகனின் செயலை மையப்படுத்தி இக்கருத்தரங்கு நடைபெற்றதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

காணாமல்போய், பின்னர் திரும்பிவந்த மகனை அணைப்பதில் ஒருபோதும் தளராமல் இருந்த, மற்றும் தன் அன்பை மீண்டும் உறுதி செய்த தந்தை போன்று, திருஅவை பாவிகளிடம் நடந்துகொண்டு, இறைவனின் இரக்கத்தை வழங்குகின்றது என்று, தன் செய்தியில் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆடி 16, தொடங்கிய “நமதன்னையின் அணிகளின்” 12வது பன்னாட்டு கருத்தரங்கு, ஆடி 21, நிறைவடைந்தது.

“நமதன்னையின் அணிகள்” இயக்கம், திருமணமான தம்பதியரின் ஆன்மீகத்தை மையப்படுத்தி, 1938ம் ஆண்டில், சில தம்பதியர் மற்றும், அருள்பணி Henry Caffarel அவர்களால் பிரான்ஸ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1947ம் ஆண்டு மார்கழியில் புத்துயிர் பெற்ற இந்த இயக்கத்தில், தற்போது ஐந்து கண்டங்களில், 95 நாடுகளைச் சேர்ந்த 13,500க்கும் மேற்பட்ட அணிகள் உள்ளன. திருமணம் எனும் அருளடையாளத்தை ஆழமாகப் புரிந்துகொள்ளவும், இன்றைய சமுதாயத்தில் தம்பதியரையும், குடும்பங்களையும் ஒன்றிணைக்கவுமென, இந்த அணிகள் ஒவ்வொரு மாதமும் கூடுகின்றன.

# “வந்து பாருங்கள்”

## பன்னாட்டு இளையோர் மாநாடு

லெபனானில் சிரியாக் கத்தோலிக்க இளையோர், “வந்து பாருங்கள்” என்ற தலைப்பில் மாநாடு நடைபெற்றது. “வந்து பாருங்கள் (யோவா.1,39)” என்பது, இயேசு கிறிஸ்து, எல்லாக் காலங்களிலும், தம் பக்கம் மனிதர்களை ஈர்ப்பதற்குப் பயன்படுத்திய முறை என்று, லெபனானில் நடைபெற்ற கல்தேய வழிபாட்டுமுறை கத்தோலிக்க இளையோரின் பன்னாட்டு மாநாட்டில் கூறப்பட்டது.

லெபனான் நாட்டின், Faytrunol, ஒளியின் நமதன்னை துறவு இல்லத்திற்கருகில், 18 வயதுக்கும், 35 வயதுக்கும் உட்பட்ட இளையோருக்கு, ஆடி 17ம் திகதி முதல், வந்து பாருங்கள் என்ற தலைப்பில், பன்னாட்டு மாநாடு நடைபெற்றது. 18 நாடுகளிலிருந்து இளையோர் பங்கு பங்குபற்றிய இம்மாநாடு, ஆடி 22, நிறைவடைந்தது.

இம்மாநாடு பற்றிப் பேசியுள்ள, கல்தேய வழிபாட்டுமுறை முதுபெரும்தந்தை Ignace Youssif Younan அவர்கள், உலகெங்கும் வாழ்கின்ற கல்தேய வழிபாட்டுமுறை கத்தோலிக்க இளையோர், தூய ஆவியாரில் தங்களைப் புதுப்பித்துக்கொள்வதற்கு வாய்ப்பாக அமைகின்றது என்று கூறினார்.

மத்திய கிழக்கிலிருந்து வெளியேறியுள்ள கிறிஸ்தவர்கள், குறிப்பாக, இளம் கிறிஸ்தவ தலைமுறையினர் மீதுள்ள அக்கறையினால் இம்மாநாடு நடத்தப்படுகின்றது என்று பீதேஸ் செய்தி கூறுகின்றது.

மேலும், வருகிற ஐப்பசி 3ம் திகதியிலிருந்து 28ம் தேதி வரை வத்திக்கானில், இளையோர் பற்றிய 15வது உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெறவுள்ளது.

16,2018. இளையோரை மையப்படுத்தி வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்களின் 15வது மாமன்றத்தை வழிநடத்த, நான்கு கர்தினால்களை, தலைமைப் பிரதிநிதிகளாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆடி 14ம் நியமனம் செய்தார்.



கல்தேய வழிபாட்டுமுறை முதுபெரும் தந்தை, கர்தினால் லூயிஸ் இரபேல் சாக்கோ, மடகாஸ்கர் கர்தினால் Désiré Tsarahazana, மியான்மார் கர்தினால் சார்ல்ஸ் மாங் போ, மற்றும் பாப்புவா நியூ கினி கர்தினால், ஜோன் ரிபாட் (John Ribat) ஆகியோரை திருத்தந்தை நியமித்துள்ளார்.

தலைமைப் பிரதிநிதிகளாக (presidents-delegate) திருத்தந்தை நியமித்துள்ள இவர்கள், திருத்தந்தையின் சார்பாக, மாமன்ற அமர்வுகளை வழிநடத்துவதோடு, ஒவ்வொரு அமர்விலும் எடுக்கப்படும் முடிவுகளை ஏற்று, கையெழுத்திடுவதும் இவர்களின் பொறுப்பு.

அதேவண்ணம், உலக ஆயர்கள் மாமன்றத்தின் இறுதியில் உருவாக்கப்படும் ஏட்டினில், தலைமைப் பிரதிநிதிகளும், மாமன்ற பொதுச் செயலரும் கையெழுத்திடவேண்டும்.

வருகிற ஐப்பசி மாதம் 3ம் திகதி முதல் 28ம் திகதி வரை, “இளையோர், நம்பிக்கையும், இறையழைத்தலைத் தேர்ந்து தெளிதலும்” என்ற மையக்கருத்துடன், உலக ஆயர்களின் 15வது மாமன்றம், வத்திக்கானில் நடைபெறவுள்ளது.

# இந்தியாவின் இளம் நூல் ஆசிரியர்

மிகச் சிறிய வயதில் நூல் எழுதி இந்தியாவின் இளம் நூல் ஆசிரியராக மும்பையைச் சேர்ந்த ஒன்பது வயது சிறுவன் சாதனைப் படைத்துள்ளான் கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான் செய்திகள்

மகாராஷ்டிரா மாநிலம் மும்பையைச் சேர்ந்த அயான் கபாடியா என்ற ஒன்பது வயது சிறுவன் நான்காம் வகுப்பு படித்து வருகிறான். சிறு வயது முதலே அவனுக்கு கதை எழுத வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. இதனால் சிறு கதைகள் எழுதத் தொடங்கினான். அவன் எழுதிய கதைகளை அவனின் பெற்றோர் நூலாக வெளியிட்டனர். இது மிகுந்த வரவேற்பை பெற்றது. இந்நிலையில், இந்திய சாதனையாளர்கள் புத்தகத்தில் அயானின் பெயர் இடம்பெற்றுள்ளது. மிகச்சிறு வயதில் நூல் எழுதிய மாணவர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார். மேலும், மிகக்குறுகிய காலத்தில் எழுதப்பட்ட நூல் என்ற பட்டமும் வழங்கப்பட்டுள்ளது. இந்த கற்பனை கதை நூலை மூன்று நாட்களில் எழுதியுள்ளார்.



அயானுக்கு இந்தியாவின் இளம் நூல் ஆசிரியர் என்பதற்கான சான்றிதழ் அளிக்கப்பட்டது.

அதேவேளை, 11 வயது ஆன இலட்சி பிரஜாபதி என்ற மாணவி, தனது ஒன்பது வயதிலேயே 'sit a while with me' என்ற புத்தகத்தை எழுதி, இளம் இலக்கியவாதி என்ற பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் ஜெய்ப்பூரை சேர்ந்தவர்.




# அக்டோபர் 14, ஏழு அருளாளர்கள், புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவர்



உலக ஆயர்கள் மாமன்ற நிகழ்வுகளில் ஒன்றாக, ஏழு அருளாளர்கள் புனிதர்களாக உயர்த்தப்படும் திருப்பலி, ஐப்பசி 14 ஞாயிறன்று, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் நடைபெறும்.

இவ்வாண்டு ஐப்பசி 14, ஞாயிறன்று, அருளாளர்களான திருத்தந்தை 6ம் போல், பேராயர் ஆஸ்கர் ரொமேரோ உட்பட, ஏழு அருளாளர்கள், புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவர் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அறிவித்தார்.

ஆடி 19, காலை, திருப்பீடத்தில் நிகழ்ந்த கர்தினால்கள் கூட்டத்தில் திருத்தந்தை அறிவித்த ஏழு அருளாளர்களில் ஒருவரான, 19 வயது நிறைந்த இளம் தொழிலாளி நுன்சியோ சுல்ப்ரீசியோ (Nunzio Sulprizio) அவர்கள், 1963ம் ஆண்டு மார்கழி 1ம் தேதி, 2ம் வத்திக்கான் பொதுச் சங்கத்திற்கென கூடியிருந்த ஆயர்கள் முன்னிலையில், அருளாளர் திருத்தந்தை 6ம் போல் அவர்களால், அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர்.

இளையோரை மையப்படுத்தி, இவ்வாண்டு ஐப்பசி 3ம் தேதி முதல் 28ம் தேதி முடிய வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றத்தின் ஒரு பகுதியாக நடைபெறும் இந்த புனிதர் பட்ட விழாவில், 19 வயது நிறைந்த தொழிலாளி சுல்ப்ரீசியோ அவர்கள், புனிதராக உயர்த்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

மேலும், மறைமாவட்ட அருள்பணியாளரும் திருநற்கருணை ஆராதனை சபையை நிறுவியவருமான பிரான்செஸ்கோ ஸ்பிநெல்லி, மறைமாவட்ட அருள்பணியாளர் வின்சென்சோ ரொமானோ, இயேசு கிறிஸ்துவின் எளிய பணியாளர்கள் சபையை நிறுவிய மரிய கத்தெரீனா காஸ்பெர், திருஅவையின் மறைபரப்புப் பணியாளர்கள் சபையை நிறுவிய அருள் சகோதரி நசாரியா இஞ்ஞாசியா ஆகிய நால்வரும் அருளாளர் நிலையிலிருந்து, புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவர்.




புலம்பெயர்வோரின் படகுகள் கவிழ்ந்து உயிரிழப்புகள் ஏற்படுவது குறித்து திருத்தந்தை ஆழ்ந்த கவலை தெரிவித்தார்.

கடந்த மாதம் 17ம் திகதி, 153 பேரை, ஆப்ரிக்காவிலிருந்து ஏற்றி வந்த படகு, கடலில் கவிழ்ந்ததில் ஒரு பெண்ணும், குழந்தையும் தண்ணீரில் மூழ்கி இறந்ததையும், இரண்டு நாட்களுக்குப் பின்னர், சிரியாவின் புலம்பெயர்ந்த மக்கள் ஏறத்தாழ 150 பேரை ஏற்றிவந்த படகு ஒன்று சைப்ரஸ் அருகே கவிழ்ந்ததில், 19 பேர் உயிரிழந்ததையும், 25 பேர் காணாமல் போனதையும் குறித்து மூவேளை செப உரையில் தன் கவலையை வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அனைத்து மக்களின் உரிமைகளையும், மாண்பையும், மனதில் கொண்டு, புலம்பெயர்வோரின் வாழ்வைப் பாதுகாக்க, அனைத்துலக சமூகம் முன்வரவேண்டும் என விண்ணப்பித்தார்.

அண்மையில், மத்தியதரைக் கடல் பகுதியில் இடம்பெற்ற விபத்துக்களால் உயிரிழந்தவர்கள் குறித்து தான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகவும், உயிரிழந்தவர்கள், மற்றும், அவர்களின் குடும்பங்களுக்காக, தான் செபிப்பதாகவும் கூறினார் திருத்தந்தை.



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்

[மத் 6:9]

பகுதி – 1

"செபம் அல்லது இறைவேண்டல்" என்பது கிறிஸ்தவ அருள் வாழ்வின் அடித்தளமாகும். இறைவேண்டல் செய்யாத ஒருவரை நம்பிக்கையாளர் எனச் சொல்ல முடியாது. எனவே தான் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலில் இறைவேண்டல் இறை நம்பிக்கையின் நான்கு தூண்களுள் ஒன்றாக்கப்பட்டியலிடுகிறது. (நம்பிக்கை அறிக்கை, வழிபாடு, அறநெறி வாழ்வு என்பவை)

இன்று நம்மிடையே இறைவார்த்தையிலும், இறைவேண்டலிலும் மக்களுக்கு ஆர்வம் இருந்தாலும், இறைவேண்டல் பற்றி அதிகம் அறியாத மக்களே உள்ளார்கள். ஆகவே இறைவேண்டல் என்பது பல படிவங்களில் பயணம் செய்வதாகும். இறைவேண்டல் என்பது நம் ஆன்மீக முதிர்ச்சியை நோக்கிய பயணமாக அமையவேண்டும். ஆகவே, இறைவேண்டலைப்பற்றி அறிய பல படிமுறைகளை நாம் காணபோம். இடைவிடாது வேண்டுங்கள் என்றும் இறைவாக்கின்படி நாம் வாழ்வே ஓர் இடைவிடா இறைவேண்டலாக அமைவதாக.

## 1. ஒருங்கிணைந்த இறைவேண்டல்

இறைவேண்டல் என்பது சொல் வடிவம் கொண்டது என்றே பலரும் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், உண்மையில் வேண்டல் என்பது பன்முகத் தன்மையும், பன்முகத் தளங்களும் கொண்டது. அனைத்துக் கோணங்களிலும் இருந்து அணுகினால்தான், இறைவேண்டல் நிறைவானதாக இருக்கும். சில தளங்கள், சில கூறுகள் குறைந்துவிட்டால், நம் இறைவேண்டல் முழுமையற்றதாகப் போய்விடும்.

## இறைவேண்டலின் ஐந்து கூறுகள்

**1. இறைத் தொழுகை அல்லது வழிபடுதல்**

ஆராதனை என்னும் வடமொழிச் சொல்லையே நல்ல தமிழில் தொழுதல் அல்லது வழிபாடு என்று அழைக்கின்றோம். இதுவே இறைவேண்டலின் முதல் கூறு. இறைவனை மட்டுமே முதன்மையானவராக, நம் வாழ்வின் தலைவராக மனதாலும், வாழ்வாலும் ஏற்று அதனை அறிக்கையிடுவதே இறைத் தொழுகை. இதனை சொல் வடிவத்தைவிட, செயல் வடிவத்தில் வெளிப்படுத்துவதே சிறந்தது. இறைவன் பெறவேண்டிய முதன்மைத்துவத்தை வேறொர் ஆளோ, பொருளோ, செல்வமோ பெறும்பொழுது, அதனை சிலை வழிபாடு அல்லது விக்கரக ஆராதனை என்று அழைக்க வேண்டும்.

**2. இறைப் புகழ்ச்சி அல்லது நன்றி.**

வேண்டலின் இரண்டாவது கூறு மிக எளியதும், இனியதுமான ஒன்று, இறைவனின் மாண்பையும், வல்ல செயல்களையும் அறிக்கையிட்டுப் போற்றி, அவற்றுக்காக நன்றி செலுத்துவது.

**3. மன்னிப்பு :**

நமது பாவங்களுக்காகவும், கடமையில் தவறியதற்காகவும் இறைவனிடமும், பிற மனிதர்களிடமும் மன்னிப்புக் கோர வேண்டியது நம் கடமை. சில வேளைகளில் பிறருக்கு மன்னிப்பு வழங்கவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

**4. மன்றாட்டு அல்லது வேண்டல் :**

நமது தேவைகளுக்காகவும், பிறருடைய தேவைகளுக்காகவும் இறைவனை நோக்கி மன்றாடுவது. இதுவும் எளிமையானதே. நமது மன்றாட்டுக்களின் மூலம் இறைவனுடைய நன்மைத்தனத்தையும், பேரிரக்கத்தையும் நாம் அறிக்கையிடுகின்றோம் என்பது நினைவிற் கொள்ளத்தக்கது.

**5. ஒப்புக்கொடுத்தல் அல்லது கையளித்தல் :**

அர்ப்பணம் என்னும் வடமொழிச் சொல்லையே தமிழில் இவ்வாறு மொழிபெயர்க்கின்றோம். இந்தக் கூறுதான் ஐந்திலும், மிகவும் கடினமானது, காரணம் இதுவும் சொல் அளவில் வெளிப்படாமல், நமது செயலில், வாழ்வில் வெளிப்பட வேண்டும்.

நிறைவான இறைவேண்டல் என்பது மேற்கண்ட ஐந்து கூறுகளையும் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். வழிபாடுகளிலே மேன்மை மிக்கத் திருப்பலியில் இந்த ஐந்து கூறுகளும் அடங்கியிருக்கின்றன என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

## இறைவேண்டலின் மூன்று தளங்கள்.

அடுத்ததாக இறைவேண்டலை மூன்று தளங்களில் நாம் செயல்படுத்த அழைக்கப்படுகின்றோம்.

**1. தனி வேண்டல் :** நம்மைப் படைத்த இறைவனிடம் ஒவ்வொருவரும் தனியாக உறவாடக் கடமைப்பட்டிருக்கின்றோம். நாள்தோறும் சிறிது நேரம் ஒதுக்கி இறைவனைப் போற்றவும், மன்றாடவும், மன்னிப்புக் கோரவும் செய்தல் அவசியம். இயேசு தமது பணிகளுக்கு நடுவிலும் அதிகாலை வேளையிலும், சில நாள்களில் இரவு நேரங்களிலும் தனித்திருந்து வேண்டினார் என்பதைச் சீடர்கள் கவனித்தனர். நற்செய்தி நூல்களில் பதிவு செய்துள்ளனர்.

**2. குழு வேண்டல்:** தனியாக இறைவேண்டல் செய்வதோடு, குடும்பமாக அல்லது குழுவாகவும் இறைவேண்டல் செய்வது அவசியமாகிறது. குழு வேண்டலின் நன்மைகளைப் பற்றி பின்னர் விரிவாகக் காணலாம்.

**3. சமூக வேண்டல் :** கிறிஸ்தவர்கள் தனியாள்கள் மட்டுமல்ல, குழுக்கள் மட்டுமல்ல, அவர்கள் ஒரு சமூகம் என்பதை நினைவூட்டவே சமூக வேண்டுதல்கள் நிகழ்கின்றன. கிறிஸ்தவர்கள், "இறைமக்கள் சமூதாயத்தின் உடன் குடிமக்கள், கடவுளின் குடும்பம், கிறிஸ்து இயேசுவையே மூலைக்கல்லாகக் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடம்" (எபே 2:20) என்கிறார் பவுலடியார். நாம் இறைச் சமூகமாக கோவிலில் ஒன்றுகூடி இறைவனை வழிபடுதலும் அவசியமே.

## இறைவேண்டலின் ஐந்து வெளிப்பாடுகள்

இறைவேண்டல் செய்வது என்பது பின்வரும் வழிகளில் வெளிப்படுத்தப்படுகிறது.

**1. மனதால் :** நம் வாயிலிருந்து சொற்கள் பிறக்கும் முன்பே, அவை மனதில் எண்ணங்களாக இருக்கின்றன. எனவே, இறைவேண்டல் அடிப்படையில் மனநிலை மற்றும் எண்ணங்கள் சார்ந்ததாக இருக்கிறது. எனவே, நல்ல எண்ணங்கள் நல்ல மனநிலைகளை நாம் கொண்டிருக்க வேண்டும். இல்லையேல், இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர். அவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகு தொலைவில் இருக்கிறது. (மத் 15:8) என்னும் எசாயா இறைவாக்கு நம்மில் நிறைவேறிவிடும்.

**2. சொல்லால் :** நல்ல மனதிலிருந்து தோன்றும் சொற்களே நல்ல வேண்டுதல்களை உண்டாக்கும். பெரும்பாலான நம் வேண்டல்கள் சொல் வடிவத்திலேயே அமைந்திருக்கின்றன. எல்லாரும் வாய் திறந்து இறைவனைப் போற்ற கடமைப்பட்டிருக்கின்றோம். என் தலைவரே, என் இதழ்களைத் திறந்தருளும். அப்பொழுது என் வாய் உமக்குப் புகழ் சாற்றிடும். (திபா 51:15) என்னும் வரிகளுக்கேற்ப வாய் திறந்து நாம் இறைவேண்டல் செய்வதுவும் அவசியமே.

**3. செயலால் :** செயலற்ற நம்பிக்கை பயனற்றது (யாக் 2:20) என்னும் இறைவாக்கையொட்டி, செயலற்ற இறைவேண்டலும், முழுமையற்றதே என நாம் கொள்ளலாம். என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர் (மத் 7:21) என்னும் இயேசுவின் அருள்வாக்கு இச்செய்தி வலிமையைத் தருகிறது.

**4. உடலால் :** மனிதர்கள் மனம், ஆன்மா, உடல் என்னும் முத்தளங்களில் செயல்படுபவர்கள். அவரே நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வரும்போது உங்களுடைய உள்ளம், ஆன்மா, உடல் அனைத்தையும் குற்றமின்றி முழுமையாக காப்பாராக (1தெச 5:23) என்னும் இறைவாக்கு இதனை விளக்குகின்றது. எனவே நாம் உடலாலும் இறைவேண்டல் செய்ய வேண்டும்.

**5. வாழ்வால் :** அனைத்திற்கும் மேலாக, நம் வேண்டல் நம் வாழ்வில் வெளிப்பட வேண்டும். நமது இறைவேண்டலுக்கும், நம் வாழ்வுக்கும் முரண்பாடு இல்லாமல் இருந்தால், அதுவே சிறந்த இறைவேண்டல்.

மேற்கண்ட அனைத்தும் இணையும் போதுதான், நிறைவான இறைவேண்டல் பிறக்கிறது. இந்த விழிப்புணர்வுடன் இனி வரும் படிகளில் பயணம் செய்வோம். நம் இறைவேண்டல் பயணத்தை நிறைவாக்குவோம்.

தொடரும்...

## காணிக்கைப் பவனி

திருவிழா திருப்பலி. சிறார்கள் சிறப்பித்தனர். காணிக்கைப் பவனி நேரம் சுறுசுறுப்பாக எறும்புகள் போல வரிசையாக காணிக்கைப் பொருட்களைக் கொண்டு வந்தனர் சிறார்கள். சிறுமியொருத்தி காணிக்கைப் பொருட்களை என் கையில் தந்த பிறகும் தன் இடத்திற்குச் செல்லாமல் என் அருகிலேயே நின்று கொண்டிருந்தாள். அவளது விழிகள் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. சிறிது நேரம் கழித்து இன்னொரு சிறுமி காணிக்கைப் பொருளைக் கொண்டு வந்து என் கையில் தந்தாள். அவளைக் கண்டதும் காத்துக் கொண்டிருந்த சிறுமியின் கண்களில் வெளிச்சம். இருவரும் சேர்ந்து தோளில் கைபோட்டுக் கொண்டே தங்கள் இடத்திற்கு திரும்பினர்.

**தூய உள்ளம் நாடுவது உண்மையான உறவையே.**



## இம்மாத புனிதர்

# செபமாலை வீரர்

# தொமினிக் (சுவாமிநாதர்)

ஆவணி 08



**“உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன் – இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என்குரலுக்குச் செவிசாய்க்கின்றனர் ” (யோவான் 18:37)**

ஸ்பெயின் நாட்டில் கலரோகா என்ற ஒரு பழைய கோட்டையில் தோன் பெலிக்ஸ் தஸ்மானுக்கும் கண்காணிப்பாளராக இருந்த ஆஸா நகர் ஜோனுக்கும் மகனாக தொமினிக் 1170ஆம் ஆண்டு பிறந்தார். இவர்கள் செல்வச் செழிப்பில் வாழ்ந்தாலும் செல்வச் செருக்கின்றி இறைப்பற்று மிகுந்து காணப்பட்டனர். இவரது அன்னை ஆஸா நகர் ஜோனும் மூத்த சகோதரனான மனேசும் வணக்கத்துக்குரிய பட்டம் பெற்றவர்கள். தொமினிக் தே குஸ்மேன் (Dominic De Guzman) என்ற பெயர் இவருக்கு இடப்பட்டது.

இவர் பிறப்பதற்கு முன் இவரது தாய் ஒரு கனவு கண்டார். தனக்கு ஒரு நாய் பிறந்ததாகவும், அந்நாய் ஒளியை ஏற்றி, இருளை நீக்கியதாகவும் அக்கனவு இருந்தது. இதை அடிப்படையாக வைத்துதான் மகாகவி தாந்தே (Dante) என்பவர் தொமினிக் என்ற சுவாமிநாதரை “இறைவனின் காவல் நாய்” (Dominic Canis) என அழைக்கிறார். சிறுவயதில் அவரது அன்னையே ஆசிரியையாக இருந்து கற்பித்தார்.

தொமினிக் ஏழு வயது சிறுவனாக இருந்தபொழுது தமியேல் நகர் ஆயரான இவரது மாமனார் இவருக்கு ஞானக் கல்லியை ஊட்டினார். பதினான்கு வயதிலே தொமினிக் பாலன்சியா (Palencia) வில் உள்ள பல்கலைக்கழகத்தில் சேர்ந்து குருவாகும் படிப்பைத் தொடங்கினார். தூய அகுஸ்தின் சபையைச் சேர்ந்த குருக்களின் குழுவில் வாழ்ந்து வந்தார்.

ஒஸ்மா நகர பேராலயத்தில் தொமினிக் பணியமர்த்தப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றி வந்தார். இவரது ஏழைகளுக்கு உதவும் உள்ளம் இவரது துணிகரமான செயல்களில் வெளிப்பட்டது. இவர் படித்துக் கொண்டிருந்த நாட்களில் கடும் பஞ்சம் ஏற்படவே தொமினிக் தன் உடைமைகளை விற்று இல்லாதோருக்கு வழங்கியதுடன், தேவை அதிகமான போது பிறருக்கு உதவுவதற்காக தன் புத்தகங்களை விற்கவும் தயங்கவில்லை. இவரது நண்பர்கள் புத்தகங்களை விற்றபோது “இது சரியல்ல” என்றனர். இவரோ, “உயிருள்ள மனிதர் உணவின்றி இறந்திடும் பொழுது உயிரற்ற புத்தகங்களை வைத்திருப்பதால் பயன் என்ன?” எனக் கேட்டார். இது பலரின் மனதைத் தொடவே அவர்களும் உதவி செய்யலாயினர்.

1195ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்றபின் தியாக்கோ - டி - ஆஸ்தேவா (Diego d' Azevedo) ஒஸ்மா நகரின் ஆயர் என்று அழைக்கப் பெற்றவர், இவரது முப்பத்தி ஒன்றாவது வயதில் அவரது வழித்தோன்றலாகத் தேர்ந்து கொண்டார்.

1204ஆம் ஆண்டு ஆயர் தியாக்கோ ஒரு பணிக்காக கேஸில் நகர அரசனால் டென்மார்க் அனுப்பப்பட்டபோது தொமினிக்கையும் உடன் அழைத்துச் சென்றார். அந்தப் பயணம் அவரது வாழ்க்கைப் பாதையின் திசை திருப்பமாக அமைந்தது. இந்த பயணத்தின்போது ஆல்பிஜென்ஸ் என்ற பதிதம் (தப்பறைக் கொள்கை) வளர்ந்து வந்தது. “உலகில் நன்மைக்கு ஒரு காரண கர்த்தா உண்டு. ஜடப்பொருள் (Matter) என்பது அனைத்தும் தீயவனுக்குரியது” என்பது அந்தத் தவறான கொள்கை. இந்த அடிப்படையில் கிறிஸ்துவின் மனிதவதாரத்தையும் அருட்சாதனங்களையும் அவர்கள் மறுத்தனர். மனித இன உற்பத்தியும் கூடாதென அவர்கள் வாதாடினர்.

தொமினிக் இந்த நச்சுத் தன்மையான பிதற்றலை எதிர்த்தார். திருச்சபை போதித்தது அப்போது மக்களால் ஏன் ஏற்கப்படவில்லை என்பதையும் இவர் ஆழ்ந்து சிந்தித்தார். கத்தோலிக்க மறை போதகர்கள் குதிரைச் சவாரியன்றி வேறெதையும் விரும்பவில்லை. அதனால் அவர்களால் இயேசுவின் எளிமை, தாழ்ச்சி, இவற்றைப் பற்றிப் போதிக்க முடியவில்லை என்பதை இவர் உணர்ந்தார்.

இவர் மறைபரப்பும் பணிக்காக ரஷ்யா செல்ல விரும்பினாலும் திருத்தந்தை மூன்றாம் இன்னசென்ட் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து தப்பறையை ஒழிக்கச் சென்றார். அப்போது அவருக்கு வயது முப்பத்தைந்து. கி.பி. 1206ல் பெண்களுக்கென்று துறவற மடம் நிறுவப்பட்டது. ஆல்பிஜென்சிலிருந்து மனந்திரும்பிய பெண்களே இதில் துறவிகளாகச் சேர்ந்தனர்.

தொமினிக் 3 சிஸ்டேர்ஷியம் துறவிகளை உடன் அழைத்துக் கொண்டு கால்நடையாகவே தெருக்கள் தோறும் சென்று சேர்ந்து போதித்தார். 10 ஆண்டுகள் இவ்வாறு பெரும் முயற்சிகள் எடுத்ததற்கு சிறந்த பயன்கள் கிட்டின. இதை வலுப்படுத்த கி.பி 1215ல் டுலூஸ் (Toulouse) நகரில் ஒரு துறவற சபையை நிறுவினார். அதுவே போதகர் சபை (O.P) என்று இன்றும் அழைக்கப்படுகிறது. இந்தச் சபையினரின் இறைவார்த்தையைக் கொண்டு மக்களுக்குப் போதித்தல் என்பன போன்றவை தொமினிக் தம் சபையினருக்குத் தந்த குறிக்கோள். இவர்களது கொள்கை:

'Contemplate trdere" - “தியானித்தவற்றையே பகிர்ந்தளிப்பது” அல்லது “கடவுளைப்பற்றி அல்லது கடவுளோடு பேசுவது” (To speak only god or with God). பொது உரையாடல், மறை உரை, பொதுக்கூட்டங்கள், தியானம், திறந்தவெளிக் கூட்டங்கள் என்ற முறைகளை அந்த நாட்களிலேயே தொமினிக் கையாண்டு மக்களிடையே மாற்றத்தைக் கொண்டுவர துணையாக இருந்த தியாக்கோ ஆண்டகை தன் மறைமாவட்டம் திரும்பியதால் இவர் தனியாகத் தொண்டு செய்ய வேண்டியதாயிற்று. பாவிகள் மனந்திரும்ப செபித்தார், தவம் செய்தார். தன்னையே தண்டித்தார், எதிர்பார்த்த அளவு பயன் கிடைக்காத நிலையில் தேவதாயின் உதவியை நாடினார். அன்னை இவருக்குத் தோன்றி, “எனது செபமாலையைப் பற்றி எங்கும் பிரசங்கம் செய். தப்பறையான கொள்கைகளை அழிக்க செபமாலை சிறந்த கருவி, புண்ணியத்தில் வளரவும் அது பேருதவியாக இருக்கும். கடவுளது கோபத்தை தணித்து, தேவ இரக்கத்தை அது மக்களுக்குப் பெற்றுத்தரும். கடவுளது திருச்சபைக்கு இது பெருத்த சிறந்த பாதுகாப்பாய் இருக்கும்” என்றாள். செபமாலைப் பக்தியினால் அநேகரை இவர் மனம்திருப்பினார். அதனால் ‘செபமாலை வீரர்’ எனும் சிறப்புப் பெயர் பெற்றார்.

சிறுவர்களின் கல்விப் பயிற்சிக்காக கன்னியர் சபை ஒன்றையும், மக்களுக்குப் போதிக்க ஆண்களுக்கு என்று துறவற சபை ஒன்றையும் ஏற்படுத்தி 1216ல் திருத்தந்தையின் அனுமதியும் பெற்றார். 1218ஆம் ஆண்டு திருத்தந்தை மூன்றாம் இன்னசென்ட் இச்சபைக்கு நிரந்தரமான அங்கீகாரம் அளித்தார். “உண்மை” என்பதே இச்சபையின் விருதுவாக்கு.

தூய பிரான்சிஸ் அசிசியாரும் தொமினிக்கும் ஒரே காலத்தவர். ஒருநாள் தூய பேதுரு தேவாலயத்தில் செபம்செய்து கொண்டிருந்த பொழுது தொமினிக் ஒரு காட்சியினைக் கண்டார். “மனிதரின் பாவத்திற்காக இயேசு சிலுவையில் பெரும் துயர் அடைகின்றார். அந்த சமயம் தேவதாய் தன் இரு மக்களை, தன் திருமகனுக்கு அளித்தார். ஒருவர் தொமினிக், இன்னொருவர் கந்தையணிந்த துறவி.” இதுதான் காட்சி. தூய பேதுரு ஆலயத்தை விட்டு வெளியே வந்த தொமினிக் காட்சியில் கண்ட மற்றொரு துறவி எதிரில் வந்து கொண்டிருந்தார். இருவரும் ஆனந்தக் கண்ணீருடன் ஒருவரை ஒருவர் தழுவினர். “நீரே என் நண்பர் எவ்வேளையிலும் ஒன்றாகவே இருப்போம். நம்மை எத்தீங்கும் தொடாது” என்று தொமினிக் மற்ற துறவியிடம் உரைத்தார். இவ்வாறு கூறிய துறவி தான் தூய பிரான்சிஸ் அசிசியார். அன்றுமுதல் இன்றுரை இருவரும் ஆருயிர் நண்பராயினர். தனது சபையும் பிரான்சிஸ் சபையும் இணைந்து விட்டால் என்ன? என்று கூட தொமினிக் விரும்பியதுண்டு. ஆனால் பிரான்சிஸ் அசிசீயார் உடன்படவில்லை. தொமினிக்கன் சபையார் தூய பிரான்சிஸ்கன் சபையார் தொமினிக்கை எங்கள் தந்தை தொமினிக் என்றும் திருவாழ்த்துப்பா பாடுகின்றனர்.

தூய பிரான்சிஸ் அசிசியார் உலகிற்களித்த நன்மைகளில் இருவரின் சந்திப்பும் இரண்டு சபைகளிலும் இரு திருவிழாக்களின்போதும் 7 நூற்றாண்டுகளாக நினைவுகூரப்படுகிறது. ஒன்று கிறிஸ்மஸ் குடில், தூய தொமினிக் நமக்களித்த பெரிய கொடை செபமாலை. தொமினிக்கன் சபையின் ஆழ்ந்த தியான முறையும், தொடரும் செயற்பாட்டு முறையும், டிரக் டிரைவர் சுமித், இறையியல் வல்லுநர் அக்குவினாஸ் போன்றோரைக் கவர்ந்திழுத்தது. எந்த மனித வாழ்வும் முழுமைபெற இறைபிரசன்னத்திலருந்து தியானம் செய்வது மிகவும் அவசியமான ஒன்று, அதுவே கிறிஸ்தவ வாழ்வின் அருளின் ஊற்று.

தொமினிக்கன் செப ஆற்றலாலும் எளிய வாழ்வாலும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்களை மனமாற்றியிருப்பார் என்று நம்பப்படுகிறது. தொமினிக் இறுதிமுறை உரோமிற்கு சென்றிருந்தபோது ஓர் புதுமை நடந்ததாகச் சொல்லுவர். ஒரு கர்தினாலின் சகோதரரின் மகன் நெப்போலியன் குதிரையிலிருந்து வீசி எறியப்பட்டு இறந்து போனான். தொமினிக் அவனை அறையினுள் கொண்டுவரச்செய்து திருப்பலி நிறைவேற்றினார். காயங்களைக் கட்டிய பிறகு முழந்தாட்படியிட்டு செபிக்க ஆரம்பித்தார். செபத்தை நிறைவு செய்தபின் உடலின் மீது சிலுவை அடையாளம் வரைந்துவிட்டு, நெப்போலியன், இயேசுவின் பெயரால் உனக்குச் சொல்லுகிறேன் எழுந்திரு என்றார். அந்த நிமிடமே எல்லார் முன்னிலையிலும் அவன் காயங்களின் அடையாளமே இல்லாமல் நின்றான்.

தொமினிக் பெரிய போதகர் மட்டுமல்ல புதுமை செய்யும் ஆற்றல் பெற்றிருந்தார். உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் உங்களால் முடியாத ஒன்றும் இராது என்று அவர் நம்பினார். நாம் நம்பத் தயாரா?

தனது நண்பரும் சபையின் ஆதரவாளருமான கர்தினால் யுகோ லினோவைப் பார்த்திட வெனிஸ் பல்கலைக்கழகம் சென்றார். தன் நண்பரிடம் 1221ஆம் ஆண்டு பிரியாவிடை பெறும்பொழுது, “என்னை நீங்கள் உடல்நலத்துடன் காண்கிறீர்கள். ஆயினும் அடுத்த ஆண்டு தேவதாயின் ஆரோபணத் திருநாளன்று நான் இறைவனிடம் இருப்பேன்” என மொழிந்தார். வெனிஸிலிருந்து கால்நடையாக ஆவணி 6ஆம் நாள் மிலான் பட்டணம் வந்தார். அங்குள்ள சாந்தா மரியா தேயிமான்றி என்ற மடத்தின் தலைவருடன் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார். நள்ளிரவை செபத்தில் செலவிட்டார். திடீரென காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். இறக்குமுன் “அழாதீர்கள் என் அன்புப் பிள்ளைகளே! நான் இங்கிருப்பதைவிட நான் செல்லுமிடத்திலிருந்து உங்களுக்கு அதிக பலன் விளைவிப்பேன்” என்றார். அவருக்கென்று தனியறையில்லாத நிலையில் தன் சகோதர குருவின் அறைக்கு கொண்டு செல்லப்பட்டு, பாவ அறிக்கை செய்தபின் சங்கீதம் பாட கரங்கனை விண்ணகம் நோக்கி உயர்த்திய வண்ணம் 1221ஆம் ஆண்டு ஆவணி மாதம் 6ஆம் நாள் தனது 51வது வயதில் இத்தாலியிலுள்ள போலக்னோவில் இறைவனடி சேர்ந்தார். இவரது திருவிழா ஆவணி 8ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. திருத்தந்தை ஒன்பதாம் கிரகோரியரால் இவருக்கு 1234ஆம் ஆண்டு புனிதர் பட்டம் அளிக்கப்பட்டது. இவர் போதகர்களுக்கும், வானவியலாளருக்கும் பாதுகாவலர்.

**சிந்தனைக்கு:**

**“தன் உடலின் இச்சையை அடக்கி ஆளத் தெரிந்தவன் உலகை வென்றுவிட முடியும்”**

**– புனித தொமினிக்**

## 01 மடுக்கோவில்...

**சிபாரிசு :**

மேற்குறித்த நிலைமையின் கீழ்

i. மடுக்கோவிலை அண்மித்த பிரதேசத்தினை சரியான முறையில் அடையாளங் கண்டு நில அளவை வரைபடத்தினைத் தயாரித்து பௌதிக திட்டமிடல் திணைக்களத்தின் மூலமாக மேற்குறித்த பிரதேசத்தினை புனிதப் பூமியாகப் பிரகடனப்படுத்துவதற்கும்,

ii. அப்பிரதேசத்தை இணைந்ததாக ஒன்றிணைந்த அணுகுமுறையினைக் கொண்ட கருத்திட்ட திட்டமிட-லொன்றுக்கமைவாக அடையாளங் காணப்பட்ட உட்கட்-டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும்.

iii. அத்திட்டத்தின் மூலமாக உரிய ஒவ்வொரு அமைச்சின் கீழும் வருகின்ற பணிகளை அமைச்சுகளுக்கு இந்த ஆண்டிலே ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் அளவிற்கமைய மேற்கொள்ளுவதற்கும்

iv. மேற்குறித்த திட்டத்தின்கீழ், ஒவ்வொரு அமைச்சின் மீதும் குறித்தொதுக்கப்படுகின்ற பணிகளுக்காக மேலும் தேவைப்படுகின்ற ஒதுக்கீடுகளை உரிய அமைச்சின் 2019ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவு மதிப்பீட்டிற்குள் உள்ளடக்கி ஒதுக்கீட்டினை வேறாக்கிக் கொள்வ-தற்கும்,

v. 2020ஆம் ஆண்டு நிறைவடையும் போது முழுமையான கருத்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்வதற்கும்.

vi. இவ் ஒட்டுமொத்தத் திட்டத்தினை ஜனாதிபதியின் செயலாளரது தலைமையின் கீழும் மற்றும் உரிய ஒவ்வொரு அமைச்சினதும் செயலாளர்களை உள்ளட-க்கிய மேற்பார்வைச் சபையொன்றின் மூலம் மேற்பார்வை செய்வதற்கும்,

vii. மடுக்கோவிலை அண்மித்த பிரதேசத்தினைப் புனித பூமியொன்றாக வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் பிரகடனப்படுத்துவதற்கும் மற்றும் மேற்குறிப்பிட்டவாறு அபிவிருத்தியினை மேற்கொண்டு மேம்படுத்துவதற்கும் சிபாரிசு செய்கின்றேன்.

**2018 ஆடி மாதம் 30ம் திகதி**

## 01 குருத்துவ திருநிலை...

கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் ஐந்து குருவானவர்கள் ஆடி மாதம் 29ம் திகதியில் அவர்களது குருத்துவ திருநிலைப்படுத்தலின் வெள்ளிவிழாவைக் கொண்டாடினர். (வலமிருந்து) அருட்பணி. னைஜித் அந்ராதி, அருட்பணி. ஜூட் சமந்த பர்னாந்துபுள்ளே, அருட்பணி. எரின்டன் த சில்வா, அருட்பணி. நிஷாந்த விலத்கமுவ, அருட்பணி. பெர்னாட் ரேஹாட் ஆகியோர்-களை இப்புகைப்படத்தில் காணலாம்.
இவ்வருட்தந்தையர்களை ஞான ஒளி வாழ்த்துகின்றது.

**தகவல் மற்றும் படங்கள் : டீ. சுனில் பர்னாந்து. ரொஷான் பிரதீப்**

## அமைதி காண உன்னையே நீ கண்டுகொள்

ஒரு முனிவரிடம் ஒருவர் சென்று அமைதி காண என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார். அதற்கு அந்த முனிவர் மூன்று மலைகளைத் தாண்டி மலை உச்சியில் ஒரு கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலில் ஒரு புத்தகம் இருக்கிறது. அப்புத்தகத்தைப் படித்தால் அமைதியின் வழி தெரியும் என்றார். அவரும் மூன்று மலைகளைத் தாண்டி மலை உச்சியிலிருந்த கோவிலுக்குச் சென்று, அங்கிருந்த புத்தகத்தையும் கண்டுபிடித்தார். புத்தகத்தைத் திறந்து பார்த்தால் எல்லா பக்கங்களும் முகம் பார்க்கும் கண்ணாடி. அதில் அவரின் முகம்தான் தெரிந்தது. கோபத்துடன் முனிவரிடம் திரும்பி வந்தார். என்ன முகம் பார்க்கும் கண்ணாடிகள் உள்ள புத்தகத்தை பார்க்கவா அனுப்பி வைத்தீர்கள்? என்றான். உன்னையே நீ அறிந்துகொண்டால் அமைதியைக் காண்பாய் என்பதுதான் உன் பயணத்தின் பொருள் என்றார் முனிவர்.

**ஒருவர் உரைக்கும் உண்மை என்றும் நிலைக்கும். பொய்யுரையின் வாழ்வோ இமைப்பொழுதே [நீ.மொ 12:19]**

## 02 அனைவரின்...

அண்மைக்காலத்தில் நீதிமன்றத்தினால் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக சிறைக்கைதியாக்கப்பட்ட ஒருவரை சிறைக்கைதிகள் அவர்களது தோளில் தாங்கிக் கொண்டு சென்று குதூகலித்தமையை நாம் அறியப்பெற்றோம். இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது யாருடைய அனுமதியுடன் எனும் வினாவை நான் எழுப்புகின்றேன்.

இந்நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்க உள்ள இளைஞர் யுவதிகளின் வாழ்க்கை சீரழியும் விதத்தில் எவராவது சதித்திட்டத்துடன் செயற்படுவதை பார்த்துக் கொண்டு எம்மால் அமைதியாக இருக்க-முடியாது. போதைப்பொருளுக்கு அடிமையாகி சீரழிந்த குடும்பங்கள் பல உள்ளன. வாழ்வை இழந்தவர்களோ பலர் உள்ளனர். தம் பிள்ளைகளின் வாழ்க்கை வீணாகி போயுள்ளமையைப் பார்க்கும் தாய்மார்களின் கண்களில் கண்ணீர் வருமல்லவா? இதற்கு பொறுப்பு கூறவேண்டியவர்கள் யார்? வீதியில் மற்றும் பொது இடங்களில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்வதன் மூலமும், பாதாள நடவடிக்கைகளை பரவச் செய்வதன் மூலமும் எமது சமூகத்துள் கிளர்ந்துள்ள சீர்கேடான நிலவரத்தினை இல்லாதொழிப்பது அரசின் பொறுப்பாகும். சிறைச்சாலைகளில் மரண தண்டனைக்கு நியமிக்கப்பட்ட சிறைக்கைதிகளை அல்லது போதைப்பொருள் கடத்தற்-காரர்களை தூக்கிலிட்டு கொல்லவும் என நான் எவ்விதத்திலும் கருத்து தெரிவிக்கவில்லை. நான் கேட்டக்கொண்ட விடயமோ, போதைப் பொருள் வியாபாரம் மற்றும் பாதாள நடவடிக்கைகளில் சிறைச்சாலையினுள் இருந்தே ஈடுபடுபவர்களுக்கு பொருத்தமான தண்ட-னையை வழங்குவதே நீதியான செயலாகும் என்பத-னையே ஆகும். எனவே மரண தண்டனையை மீண்டும் இலங்கையில் நடைமுறைப்படுத்துவதையோ, அறிமுகப்படுத்துவதையோ குறித்து நான் வேண்டுகோள் விடுக்கவில்லை என்பதை நான் கூறிக்கொள்கின்றேன்.

மரண தண்டனையை நான் அனுமதிப்பதில்லை என்பது எனது (சொந்தக்) கருத்தாகும். எனினும் கிளர்ந்துள்ள பயங்கரமாக இந்நிலை குறித்து கனம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் எடுத்த இம் முடிவானது காலத்தின் தேவைக்கேற்ற விதத்தில் அமைகிறது என்பதையே நான் குறிப்பிட்டிருந்தேன். இது சமூக ஒற்றுமை மற்றும் பாதுகாப்பு, எதிர்கால சந்ததியினரின் பாதுகாப்புக்காக எம்மால் செயற்படுத்த வேண்டிய விடயமாகும்.

**அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர்.**

## 06 திருமண வாழ்வு...

12. தனது வாழ்வின் சுக்கானை மனமுதிர்ச்சி பெற்றவர் மற்றவர்களிடம் கொடுக்க மாட்டார். சிறு சிறு விடயங்களுக்கும் கலவரப்படுவதில்லை.
13. அன்றாடம் வாழ்வின் செயல்களில் சமநிலை இருக்கும். உணவு, உறக்கம் இவற்றில் சமநிலை இருக்கும்.
14. தன்னைப் பற்றிய சுய அறிவு உள்ளவராக இருப்பார். தனது பெலவீனம், திறமைகள் போன்றவற்றை நன்கு அறிந்திருப்பார்.
15. தனக்காக மட்டும் வாழாது மற்றவர்களுக்காகவும், வாழ்வார்.
16. வாழ்க்கை பெறுமதி வாய்ந்தது. வாழும் அளவுக்கு அதன் பெறுமதி கூடுகிறது. மனமுதிர்ச்சி பெற்றவர் வாழ்க்கையை வாழ விரும்புவார். ஆகவே சரீர, அறிவு, மன, ஆன்மீக முதிர்ச்சி பெற்று வாழ்வோம்.

## XX அப்போஸ்தலரான...

இன்றும் உலக நாடுகளில் குருத்துவ கல்வி பயிலும் மாணவர்களின் தேவைகளுக்கு இச்சங்கமானது உதவி நல்கி வருகின்றது.

✦ துறவற மாணவர்கள் ஆயிரக்கணக்கானோர் இச்சங்கத்தின் உதவிப்பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. நீங்களும் இச்சங்கத்தில் சேர விரும்புகின்றீர்களா? குருத்துவ பயிற்சிப்பெற இளைஞர்கள் அல்லது துறவற வாழ்வில் தங்களை அர்ப்பணிக்க விரும்பும் இளைஞர் - இளம் பெண்களுக்காக உங்களது செபத்தாலும், நன்கொடை வழியாகவும் குருத்துவ கல்வி பயிலும் மாணவர்களுக்கு உங்கள் உதவிகளை வழங்கிட முன்வாருங்கள். நீங்கள் உதவாவிட்டால் அவர்களுக்கு வேறு யார் உதவுவார்கள்.

## 02 கொழும்பு...

திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும், அதன்பின் புனித அன்னம்மாளின் ஆசீரும், வழங்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி. ஆனந்தன் பர்னாந்துபுள்ளே அடிகளார் ஆசீர் வழங்குவதையும், புதுநன்மை பெற்ற பிள்ளைகளும் ஆசிரியர்களையும், அன்னையின் ரதத்தையும் படத்தில் காணலாம்.

**தகவல் மற்றும் படங்கள் : டிக்சன் பர்னாந்து.**

## XX தூய வாழ்வினூடாக...

தகுதியுள்ளவர்களாக அவர்களை மாற்றினார். இதுவே சீடத்துவத்திற்கான திருநிலைப்படுத்தலும், தூய்மைத்துவத்தின் அடையாளமாகும். இன்று கிறிஸ்துவை பின்பற்ற அவரின் சீடராக வாழ அழைக்கப்பட்ட ஒவ்வொரு குருக்களினதும், துறவிகளினதும் வாழ்வின் எதிர்நோக்கு என்னவென்றால், கிறிஸ்துவின் திருமுழுக்-கினால் தூயவராக்கப்பட்டு அவர் பணியை ஏற்று செயற்படும் அனைவரும் அவராக மாற வேண்டும் என்பதேயாகும். இதுவே சீடத்துவ வாழ்விற்கான அழைப்பு என்று கூறினால் மிகையாகாது.

புனித பவுலின் கருத்தின் படி "வாழ்வது நான் அல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கின்றார்" என்கின்றார். இதன்படி அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் மறு கிறிஸ்து என்பதை உணர வேண்டும். அந்த கிறிஸ்துவை அணிந்து கொள்வதன் மூலம் மட்டுமே தூயவராவோம். கிறிஸ்து தன்னை வெறுமையாக்கி., தாழ்த்தி சீடத்துவ வாழ்விற்கான மகிமையை வெறும் வார்த்தையினால் மட்டும் கூறாமல், சீடரின் பணி வாழ்வு எவ்வாறு இருக்க வேண்டும் என்ற எடுத்துக்காட்டான வாழ்வினை எமக்கு வாழ்ந்து காட்டியுள்ளார். இன்று அவர் வழியை பின் பற்றி அவர் காட்டிய பணியினை மேற்கொள்ளும் போதே அவரின் உண்மையான சீடர்களாக திகழ முடியும். இதுவே தூய வாழ்வின் எடுத்துக்காட்டாகவுள்ளது. சீடராக அழைக்கப்பட்ட ஒவ்வொருவரின் நற்செய்தி அறிவிப்பும், அறிவுரை கூறலும் வெறும் வார்த்தையாக மட்டுமன்றி, அவர்களது அன்றாட வாழ்வின் நடைமுறை-யாக வரும் போதே சீடத்துவ வாழ்வின் தூய தன்மை வெளிக்காட்டப்படுகின்றது.

"தன்னை மறந்து தன் சிலுவையை சுமந்து கொண்டு வருபவனே என் சீடர்" என்கின்ற வார்த்தைக்கு அமைய அழைப்பு பெற்றவர்கள் தங்கள் வாழ்வில் வரும் இன்னல்கள், துன்பங்கள், சவால்கள் அனைத்தினையும் எதிர் கொண்டு அவை அனைத்தும் பணி வாழ்விற்கான படிக்கற்கள் என்ற மனப்பான்மையுடன் தன் சிலுவையை ஏற்றுக்கொண்டு பணியை தொடர்கின்ற போதே அவர்களின் சீடத்துவ வாழ்விற்கான சரியான அர்த்தத்தினை புரிந்து கொள்ள முடியும். சிலுவை பயணத்தினை நோக்கிய வாழ்வே தூயவாழ்வின் ஒரு அடிப்படையாகும் என்று கூறுவதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

சீடத்துவத்தின் மெய்யான செயற்பாடு வெளிப்படுவது, தனக்கென வாழ்வதை விட பிறருக்காக தன்னை அர்ப்பணிக்க வேணடும். இந்த அர்ப்பண வாழ்வு உண்மை அன்பின் உருவாக்கமே, இதுவே கிறிஸ்துவின் உண்மையான வடிவம். அவரால் அழைக்கப்பட்டவர்களும் அந்த அன்பில் இணைக்கப்பட வேண்டும், அந்த அன்பில் மறைப் பணியை கட்டி எழுப்பவேண்டும், அழுபவர்களுடன் சேர்ந்து நாம் அழவேண்டும், மகிழ்வாருடன் சேர்ந்து நாம் மகிழவேண்டும். இதுவே சீடத்துவ வாழ்விற்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு, அதே பொறுப்பினை ஏற்று செயற்படுத்துகின்ற போதே இறைவனின் திட்டத்தினை நாம் நிறைவேற்ற முனைகின்றோம் அவர் திட்டத்தினை நிறைவேற்றுவதே சீடத்துவ வாழ்விற்கான தூய தன்மையும், மேன்மையுமாகவுள்ளது.

## XX இம்முறை பாப்பிறை...

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இம்மாநா-ட்டில் கலந்துக்கொண்ட பாப்பிறை மறைப்பரப்பு திருப்பால-த்துவ சபையின் இலங்கைக்கான தேசிய இயக்குனர் அருட்பணி பெசில் ரொகான் பர்னாந்து அவர்களால் "இலங்கை நாட்டில் குருத்துவ பயிற்சி" எனும் தலைப்பில் அவர் ஆற்றிய உரையானது அனைவரது பாராட்டையும் பெற்றது. இவ்வருட மாநாட்டில் **"திருமுழுக்களித்து அனுப்பப்படுதல்" (Baptized and Sent)** பிரதான கருப்பொருளாக அமைந்திருந்ததோடு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் வருகிற ஆண்டு (2019) ஐப்பசி மாதமானது விஷேடமாக "மறைப்பகிர்தல்" மாதமாக பிரகனப்படுத்தவிருப்பதினால் அதனை அர்த்தமுள்ளதாக செயற்படுத்த வேண்டும் என இம்மாநாட்டில் எடுத்துக்கூறப்பட்டதோடு மேலும் அதனை உலகளாவிய அளவில் எவ்வாறு செயற்படுத்தலாம் என மேலும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை தேசிய இயக்குனர் அருட்பணி பெசில் ரொகான் பர்னாந்து அவர்கள் திருத்தந்தையை சந்தித்த போது, சர்வதேச திருப்பாலத்துவ சபையின் **"175 வது ஜூபிலி ஆண்டு"** நிறைவுக்காக விஷேடமாக நிர்மாணிக்கப்பட்ட தலைக்கவசம் ஒன்றினை திருத்த-ந்தைக்கு கையளித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இறுதியாக அதிமேதகு தலைவர் ஆண்டகையின் நிறைவு-ரையின் பின்னர் இவ்வருட தேசிய இயக்குனர்களுக்கான மாநாடு இனிதே நிறைவுற்றது.

**பாப்பிறை மறைபரப்புச் சபை தேசிய செயலகம்.**
**தமிழ்ப் பிரிவு** **அனுமதியளிக்கின்றேன்.**

**அருட்பணி. பெசில் ரொகான் பர்னாந்து**
**தேசிய இயக்குனர்**




# உடல் நலம் காக்கும் ஒரு வார உணவு



## ஞாயிறு

**காலை 6 மணி** – டீ (சர்க்கரை போடாதது)
**காலை 8 மணி** – ஒரு வாழைப்பழம் அல்லது பப்பாளி
**காலை 9 மணி** – இட்லி - 3, சாம்பார் மற்றும் சட்னி, வடை - 1
**காலை 11 மணி** – சர்க்கரையில்லாத டீ
**மதியம் 1.30 மணி** – மதிய உணவு.
**சப்பாத்தி** (கோதுமை மாவு. சோயாமாவு மற்றும் ஓட்ஸ் கலந்து செய்யப்பட்டது - 1) எண்ணெய் இல்லாமல் - 2.
**சிக்கன் பிரியாணி** 1 கப், பச்சை காய்கறி - வெங்காயம், தக்காளி, வெள்ளரிப்பிஞ்சு.
**சிக்கன் குழம்பு.**
**மாலை 5 மணி** – சர்க்கரையில்லாத டீ.
**இரவு 7 மணி** – மாதுளை, ஆப்பிள், ஆரஞ்சு, முளை கட்டிய பச்சைப்பயிறு, காரட், முள்ளங்கி, பீட்ரூட் சேர்ந்த சாலட்.
**இரவு 9 மணி** – ஆவியில் வேக வைத்த காய்கறிகள், பிஞ்சு மக்காச்சோள கதிர், காலிபிளவர், பச்சை பீன்ஸ், 5 முந்திரி பருப்பு.
வேகவைத்த கொண்டைக் கடலை - 50 கிராம்
200 மி.லி அளவுக்கு டம்ளரில் எட்டு முறை தண்ணீர்.

## திங்கள்

**காலை 6 மணி** – டீ (சர்க்கரை போடாதது)
**காலை 8 மணி** – ஒரு வாழைப்பழம் அல்லது பப்பாளி
**காலை 9 மணி** – தோசை - 3, சாம்பார் மற்றும் சட்னி
**காலை 11 மணி** – சர்க்கரையில்லாத டீ
**மதியம் 1.30 மணி** – கைக்குத்தல் அரிசி சாதம், கீரை, தட்டைப்பயிறு, பொரியல், சாம்பார், ரசம், சட்னி, தயிர்.
வெள்ளரிப்பிஞ்சு, பெரிய வெங்காயம், காரட் மற்றும் தக்காளி சாலட்.
**மாலை 4 மணி** – இளநீர் - 1
**மாலை 5 மணி** – சர்க்கரையில்லாத டீ.
**இரவு 7 மணி** – மாதுளை, ஆப்பிள், ஆரஞ்சு, முளை கட்டிய பச்சைப்பயிறு, காரட், முள்ளங்கி, பீட்ரூட் சேர்ந்த சாலட்.
**இரவு 9 மணி** – ஆவியில் வேக வைத்த காய்கறிகள், பிஞ்சு மக்காச்சோள கதிர், காலிபிளவர், பச்சை பீன்ஸ், 5 முந்திரி பருப்பு.
வேகவைத்த கொண்டைக் கடலை - 50 கிராம்
200 மி.லி அளவுக்கு டம்ளரில் எட்டு முறை தண்ணீர்.

## செவ்வாய்

**காலை 6 மணி** – டீ (சர்க்கரை போடாதது)
**காலை 8 மணி** – ஓர் ஆப்பிள் மற்றும் ஓர் ஆரஞ்சு
**காலை 9 மணி** – தோசை - 3, சாம்பார் மற்றும் சட்னி
**காலை 11 மணி** – சர்க்கரையில்லாத டீ
**மதியம் 1.30 மணி** – கைக்குத்தல் அரிசி சாதம், கீரை, வெண்டைக்காய் பொரியல், சாம்பார், ரசம், சட்னி, தயிர்.
வெள்ளரிப்பிஞ்சு, பெரிய வெங்காயம், காரட் மற்றும் தக்காளி சாலட்.
**மாலை 4 மணி** – இளநீர் - 1
**மாலை 5 மணி** – சர்க்கரையில்லாத டீ.
**இரவு 7 மணி** – மாதுளை, ஆப்பிள், ஆரஞ்சு, முளை கட்டிய பச்சைப்பயிறு, காரட், முள்ளங்கி, பீட்ரூட் சேர்ந்த சாலட்.
**இரவு 9 மணி** – ஆவியில் வேக வைத்த காய்கறிகள், பிஞ்சு மக்காச்சோள கதிர், காலிபிளவர், பச்சை பீன்ஸ், 5 முந்திரி பருப்பு.
வேகவைத்த சக்கரைவள்ளிக் கிழங்கு.
200 மி.லி அளவுக்கு டம்ளரில் எட்டு முறை தண்ணீர்.

## புதன்

**காலை 6 மணி** – டீ (சர்க்கரை போடாதது)
**காலை 8 மணி** – ஓர் ஆப்பிள் மற்றும் ஓர் ஆரஞ்சு
**காலை 9 மணி** – கார்ன் பிளாக்ஸ், 1 கப் பால்.
**காலை 11 மணி** – சர்க்கரையில்லாத டீ
**மதியம் 1.30 மணி** – கைக்குத்தல் அரிசி சாதம், மீன் குழப்பு, உருளைக்கிழங்கு பொரியல், காலிபிளவர் பொரியல், மோர்.
வெள்ளரிப்பிஞ்சு, பெரிய வெங்காயம், காரட் மற்றும் தக்காளி சாலட்.
**மாலை 4 மணி** – இளநீர் - 1
**மாலை 5 மணி** – சர்க்கரையில்லாத டீ.
**இரவு 7 மணி** – மாதுளை, ஆப்பிள், ஆரஞ்சு, முளை கட்டிய பச்சைப்பயிறு, காரட், முள்ளங்கி, பீட்ரூட் சேர்ந்த சாலட்.
**இரவு 9 மணி** – ஆவியில் வேக வைத்த காய்கறிகள், பிஞ்சு மக்காச்சோள கதிர், காலிபிளவர், பச்சை பீன்ஸ், 5 முந்திரிப் பருப்பு.
வேகவைத்த தட்டைப் பயறு - 50 கிராம்
200 மி.லி அளவுக்கு டம்ளரில் எட்டு முறை தண்ணீர்.

## வியாழன்

**காலை 6 மணி** – டீ (சர்க்கரை போடாதது)
**காலை 8 மணி** – ஓர் ஆப்பிள் மற்றும் ஓர் ஆரஞ்சு
**காலை 9 மணி** – முழு கோதுமை பிரட், வெள்ளைக் கருவில் செய்த ஆம்லெட் மற்றும் ஜாம் (பட்டர் இல்லாதது)
**காலை 11 மணி** – சர்க்கரையில்லாத டீ
**மதியம் 1.30 மணி** – கைக்குத்தல் அரிசி சாதம், சாம்பார், ரசம், மோர், கீரைப் பொரியல், காரட் மற்றும் பீன்ஸ் பொரியல்
வெள்ளரிப்பிஞ்சு, பெரிய வெங்காயம், காரட் மற்றும் தக்காளி சாலட்.
**மாலை 4 மணி** – இளநீர் - 1
**மாலை 5 மணி** – சர்க்கரையில்லாத டீ.
**இரவு 7 மணி** – மாதுளை, ஆப்பிள், ஆரஞ்சு, முளை கட்டிய பச்சைப்பயிறு, காரட், முள்ளங்கி, பீட்ரூட் சேர்ந்த சாலட்.
**இரவு 9 மணி** – ஆவியில் வேக வைத்த காய்கறிகள், பிஞ்சு மக்காச்சோள கதிர், காலிபிளவர், பச்சை பீன்ஸ், 5 முந்திரிப் பருப்பு.
வேகவைத்த வேர்க் கடலை - 50 கிராம்
200 மி.லி அளவுக்கு டம்ளரில் எட்டு முறை தண்ணீர்.

## வெள்ளி

**காலை 6 மணி** – டீ (சர்க்கரை போடாதது)
**காலை 8 மணி** – ஒரு கொய்யாப்பழம் மற்றும் ஒரு பப்பாளி
**காலை 9 மணி** – பொங்கல் -1 சிறிய கப், வடை -1, சாம்பார், சட்னி
**காலை 11 மணி** – சர்க்கரையில்லாத டீ
**மதியம் 1.30 மணி** – கைக்குத்தல் அரிசி சாதம் - சாம்பார், ரசம், மோர், கீரைப் பொரியல், கொத்தவரங்காய்பொரியல் மற்றும் பாயாசம்.
வெள்ளரிப்பிஞ்சு, பெரிய வெங்காயம், காரட் மற்றும் தக்காளி சாலட்.
**மாலை 4 மணி** – இளநீர் - 1
**மாலை 5 மணி** – சர்க்கரையில்லாத டீ.
**இரவு 7 மணி** – மாதுளை, ஆப்பிள், ஆரஞ்சு, முளை கட்டிய பச்சைப்பயிறு, காரட், முள்ளங்கி, பீட்ரூட் சேர்ந்த சாலட்.
**இரவு 9 மணி** – ஆவியில் வேக வைத்த காய்கறிகள், பிஞ்சு மக்காச்சோள கதிர், காலிபிளவர், பச்சை பீன்ஸ், 5 முந்திரிப் பருப்பு.
வேகவைத்த கண்டல் - 50 கிராம்
200 மி.லி அளவுக்கு டம்ளரில் எட்டு முறை தண்ணீர்.

## சனி

**காலை 6 மணி** – டீ (சர்க்கரை போடாதது)
**காலை 8 மணி** – ஒரு மாதுளை ஜுஸ், வாழைப்பழம் -1
**காலை 9 மணி** – பூரி - 3, உருளைக்கிழங்கு மசாலா
**காலை 11 மணி** – சர்க்கரையில்லாத டீ
**மதியம் 1.30 மணி** – கைக்குத்தல் அரிசி சாதம் - சாம்பார், ரசம், மோர், கீரைப் பொரியல், பாவற்காய் பொரியல், பீட்ரூட் பொரியல்.
வெள்ளரிப்பிஞ்சு, பெரிய வெங்காயம், காரட் மற்றும் தக்காளி சாலட்.
**மாலை 4 மணி** – இளநீர் - 1
**மாலை 5 மணி** – சர்க்கரையில்லாத டீ.
**இரவு 7 மணி** – மாதுளை, ஆப்பிள், ஆரஞ்சு, முளை கட்டிய பச்சைப்பயிறு, காரட், முள்ளங்கி, பீட்ரூட் சேர்ந்த சாலட்.
**இரவு 9 மணி** – ஆவியில் வேகவைத்த காய்கறிகள், பிஞ்சு மக்காச்சோள கதிர், காலிபிளவர், பச்சை பீன்ஸ், 5 முந்திரிப் பருப்பு.
வேகவைத்த கண்டல் - 50 கிராம்
200 மி.லி அளவுக்கு டம்ளரில் எட்டு முறை தண்ணீர்.

## குறிப்பு

1) டீ குடிக்கும் பழக்கம் எனக்கு உண்டு. நீங்கள் அதைத் தவிர்ப்பது நலம்.
2) சர்க்கரையில்லாத டீ குடிப்பது சிரமம் என்றால் சர்க்கரையின் அளவைக் குறைத்து விடுங்கள்.
3) நான் அசைவம்தான், ஆனால் நீங்கள் சைவமாக இருப்பின் அப்படியே தொடருங்கள். சைவம்தான் சிறந்தது என்று பல ஆராய்ச்சிகள் உறுதி செய்கின்றன.
4) அசைவம் என்றால் மீனும் கோழியும் நல்லது. இவற்றில் கொலஸ்ட்ரால் என்கிற தீய கொழுப்பு குறைவு. ஆனால், மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சியில் கொலஸ்ட்ரால் அதிகம் இருப்பதால் இவற்றைத் தவிர்த்து விடவேண்டும்.
5) நான் இரவில் டிபன் சாப்பிடுவதில்லை. அதற்குப் பதிலாக சுமார் 8 மணிக்கு பழங்கள் மற்றும் முளைத்த பாசிப்பயறையும், சுமார் 9 மணிக்கு நீராவியில் வேகவைத்த காய்கறிகளையும், சுண்டலையும் உண்கிறேன். இந்த உணவு சற்று வித்தியாசமாக உங்களுக்குத் தெரிந்தாலும் இது இயற்கை வாசனையும் சுவையும் அடங்கிய ஓர் உயர்ந்த உணவாகும். நீங்களும் உண்டுப் பழகினால் இதற்கு அடிமையாகி விடுவீர்கள். இவ்வுணவை நீங்கள் கடைப்பிடிக்கலாம்.
6) மாமிசம் மற்றும் மீன் ஆகியவை குறைந்த அளவே உண்ண வேண்டும்.
7) பச்சைக் காய்கறிகள் (சாலட்), கீரைப் பொரியல், பீன்ஸ் பொரியல் ஆகியவற்றை வயிறு நிரம்பச் சாப்பிடலாம். இதனால் உடல் எடை ஏறுவதில்லை. ஏனென்றால் இவற்றில் 90 சதவீதமும் சுத்தமான தண்ணீரே இருக்கிறது. இவற்றில் கலோரிகளின் அளவு மிகக் குறைவு.

பல வருடங்களாக நான் பின்பற்றி வரும் ஒரு வார கால உணவுப் பழக்கம் இதுதான். இந்த உணவு எனது உடலுக்கு நல்ல நலத்தையும், உறுதியையும், தாங்கும் சக்தியையும், நோய் தடுப்பு திறனையும் தருகிறது. நான் தொடர்ந்து 73 கிலோ என்ற வகையில் உடலைப் பராமரிப்பதற்கான முக்கியக் காரணமும் இந்த உணவுப் பழக்கம்தான். இதே உணவுப் பழக்கத்தை 30 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் கடைப்பிடிக்கலாம். விளையாட்டு வீரர்களுக்கும், வளரும் குழந்தைகளுக்கும் அதிக உணவுத் தேவைப்படும். அவர்கள் அதிகம் உண்பதில் தவறில்லை. **நன்றி இணையத்தளம்.**

# “மனித வாழ்வு” என்ற திருமடல் வெளியானதன் பொன்விழா



ஆடி 25, 2018. 'Humanae Vitae' திருமடல் வெளியான பொன்விழாவையொட்டி, உலகின் பல்வேறு ஆயர் பேரவைகள் தங்கள் பாராட்டுக்களையும், நன்றி உணர்வுகளையும் வெளியிட்டுள்ளன.

50 ஆண்டுகளுக்கு முன், 1968ம் ஆண்டு ஆடி 25ம் திகதி திருத்தந்தை அருளாளர் 6ம் பவுல் அவர்களால் கையொப்பமிடப்பட்டு, அவ்வாண்டு, ஆடி 29ம் திகதி வெளியிடப்பட்ட 'Humanae Vitae' அதாவது, “மனித வாழ்வு” என்ற திருமடலைப் பற்றிய கட்டுரையொன்று, வத்திக்கான் நாளிதழ் L'Osservatore Romanoவில் வெளியாகியுள்ளது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இத்திருமடல் வெளியான வேளையில், மனித வாழ்வின் மேன்மையை வலியுறுத்தி திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள் துணிவுடன் வெளியிட்டிருந்த கருத்துக்கள், சக்திமிகுந்த விவாதங்களை உருவாக்கின என்று இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. 1960களில் நிலவிய பாலினப் புரட்சி, மற்றும், கருகலைத்தலை ஆதரித்து வளர்ந்துவந்த எண்ணங்கள் ஆகியவற்றிற்கு சவால்கள் விடும் வண்ணம், திருத்தந்தை 6ம் போல் அவர்கள், மனித உயிரின் மேன்மையை, இத்திருமடல் வழியே நிலைநாட்டினார் என்று இக்கட்டுரை கூறுகிறது.

மக்கள் தொகை கட்டுக்கடங்காமல் வளர்ந்து-விடும் என்ற எண்ணத்துடன், கருகலைத்தலையும், குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களையும் அமல்படுத்திய பல உலக அரசுகள், இன்று தங்கள் முயற்சிகளிலிருந்து விலகி, மாற்று வழிகளைக் கூறிவருவதைக் காணும்போது, “மனித வாழ்வு” என்ற திருமடல், 50 ஆண்டுகளுக்கு முன் கூறிய பல உண்மைகள் உறுதியாகியுள்ளன என்று இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

# அருள்பணி அருப்பேயை அருளாளராக உயர்த்தும் பணிகள் ஆரம்பம்

இயேசு சபையின் உலகத் தலைவரும் இறைவனின் ஊழியருமான அருள்பணி பேத்ரோ அருப்பே அவர்களை அருளாளராக உயர்த்தும் பணிகள் ஆரம்பம்

இயேசு சபையின் 28வது உலகத் தலைவராகப் பணியாற்றிய, இறைவனின் ஊழியர் அருள்பணி பேத்ரோ அருப்பே அவர்களை, அருளாளராக உயர்த்தும் பணிகளைத் தொடங்குவதற்கு, உரோம் மறைமாவட்டம் அனுமதி வழங்கியுள்ளது என்று, இயேசு சபையின் தற்போதைய உலகத் தலைவர், அருள்பணி அர்த்தூரோ சோசா அவர்கள் கூறியுள்ளார்.

இயேசு சபையின் பல்கலைக்கழகங்களில் பணிபுரிவோரின் உலக மாநாடு அண்மையில் ஸ்பெயின் நாட்டின் பில்பாவோ நகரில் நடைபெற்ற வேளையில், அருள்பணி அர்த்தூரோ சோசா அவர்கள் இதனை அறிவித்தார்.

திருத்தந்தையின் சார்பில் உரோம் மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றும் கர்தினால் ஆஞ்செலோ தே தொனாத்திஸ் அவர்கள் வழங்கிய ஒப்புதலைத் தொடர்ந்து, இந்தப் பணி ஆரம்பமாகியுள்ளது என்று அருள்பணி சோசா அவர்கள் கூறினார்.

1907ம் ஆண்டு நவம்பர் 7ம் திகதி, ஸ்பெயின் நாட்டின் பில்பாவோ நகரில் பிறந்த பேத்ரோ அருப்பே அவர்கள், 1945ம் ஆண்டு, ஜப்பானின் ஹிரோஷிமா நகரம் அணுகுண்டு தாக்குதலுக்கு உள்ளானபோது,



அந்நகரின் அருகே அமைந்திருந்த இயேசு சபை நவத்துறவியர் இல்லத்தில், நவத்துறவியரின் பயிற்சியாளராகப் பணியாற்றினார்.

1968ம் ஆண்டு, இயேசு சபையின் 28வது உலகத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட அருள்பணி அருப்பே அவர்கள், 1983ம் ஆண்டு, பக்கவாத நோயினால் தாக்கப்படும் வரை, சபையின் தலைவராக, தலைசிறந்த பணியாற்றினார்.

1991ம் ஆண்டு பிப்ரவரி 5ம் திகதி தன் 83வது வயதில் இறையடி சேர்ந்த அருள்பணி அருப்பே அவர்கள் தொடக்கிய பல்வேறு முயற்சிகளில், புலம்பெயர்ந்தோர் பணிக்கென உருவாக்கிய இயேசு சபையின் பணிக்குழு மிக முக்கிய முயற்சி என்று கருதப்படுகிறது.

# பேரிடர் மீட்புப்பணிகளை ஆற்றுவோர்க்கு ஊக்கம் – திருத்தந்தை



கிரீஸ், லாவோசில் இயற்கைப் பேரிடர்களில் பலியானவர்கள், காயமடைந்தவர்கள், மற்றும் அவர்களின் குடும்பங்களுக்காகத் திருத்தந்தை செபம்

லாவோஸ் நாட்டின் தென்கிழக்கில், மின்சாரம் தயாரிக்கப் பயன்படும் நீர்த்தேக்கம் உடைந்ததையொட்டி ஏற்பட்டுள்ள பெருவெள்ளத்தில் இறந்தவர்கள் மற்றும் காயமுற்றோருக்கு, தன் ஆழ்ந்த அனுதாபங்களையும், செபங்களையும், ஒருமைப்பாட்டுணர்வையும் தெரிவித்து-ள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

லாவோசில் 1.6 கிலோ மீட்டர் அகலமும், 770 மீட்டர் நீளமும், 16 மீட்டர் உயரமும் உடைய "Saddle Dam D" நீர்த்தேக்கம் உடைந்ததில், நூற்றுக்கும் மேற்பட்டோர் காணாமல்போயுள்ளனர் மற்றும் 6,600க்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளனர். கிரேக்கத்தில் ஏற்பட்ட காட்டுத் தீயில் குறைந்தது 60 பேர் இறந்துள்ளனர்.

இப்பேரிடரில் காணாமல்போயுள்ளவர்களைத் தேடுவதிலும், காயமுற்றோருக்கு உதவுவதிலும் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்குத் திருத்தந்தை, தன் செபங்களையும், ஆதரவையும் தெரிவித்துள்ளார்.

மேலும், கிரேக்க நாட்டில் அண்மையில் இடம்பெற்ற காட்டுத் தீ பேரிடர் அறிந்து தான் மிகவும் வருந்துவதாகவும், இப்பேரிடரில் பாதிக்கப்பட்ட எல்லாருடனும் ஒருமைப்பாட்டுணர்வு கொள்வதாகவும் தெரிவித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இதில் இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தனது ஆறுதலையும், தொடர்ந்து மீட்புப்பணியாற்றுவோருக்கு தனது ஊக்கத்தையும் தெரவித்துள்ளார், திருத்தந்தை.

திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், லாவோஸ் மற்றும் கிரேக்க நாடுகளின் திருஅவைகள் மற்றும் அரசுகளின் அதிகாரிகளுக்கு, திருத்தந்தையின் பெயரில், அனுப்பியுள்ள தந்திச் செய்திகளில், திருத்தந்தையின் செபங்களும், ஆறுதலும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# இராணுவத்தால் அருள்பணியாளர் சுட்டுக் கொலை



காமரூன் நாட்டில் ஒரே வாரத்தில் இரு அருள்பணியாளர்கள் கொலைச் செய்யப்பட்டுள்ளனர் கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான் செய்திகள் காமரூன் நாட்டின் Buea மறைமாவட்ட கத்தோலிக்க கல்வித்துறை செயலரும், Bomaka பங்குதள அருள்பணியாளருமான Alexander Sob Nougi என்பவர் கடந்த வெள்ளியன்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

காமரூன் நாட்டின் Muyuka எனுமிடத்தில் தன் உறவினர்களைப் பார்க்கச் சென்ற இந்த அருள்பணியாளரின் மீது, இராணுவத்தின் குண்டுகள் தவறுதலாக பாய்ந்தன என ஒரு சாராரும், இவரின் வண்டியை சோதனைச் செய்து அதிலிருந்து எதை-யோ எதிர்பார்த்து ஏமாந்த இராணுவத்தால் இவர் வேண்டுமென்றே சுடப்பட்டார் என ஒரு சாராரும் கூறி வருகின்றனர்.

கடந்த ஒரு வார காலத்தில் மட்டும் இராணுவ துருப்புக்களால் கொலைச் செய்யப்பட்டுள்ள இரண்டாவது அருள்பணியாளர் இவர் ஆவார்.

ஆடி 14ம் திகதி காமரூன் நாட்டின் வட மேற்கு பகுதியில் உள்ள Batibo என்ற நகருக்கு வந்த கானா நாட்டைச் சேர்ந்த அருள்பணியாளர் ஒருவர் இராணுவத்தால் கொல்லப்பட்டார்.

# திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...





“தினமும் நற்செய்தியை குறைந்தது ஐந்து நிமிடங்களாவது வாசிக்க முயலுங்கள். உங்கள் வாழ்வை அது எவ்வளவு தூரம் மாற்றியமைக்கிறது என்பதை பார்ப்பீர்கள்”

“தங்களுக்கு வாழ்வை வழங்கியவரின் கைகளில் தங்களை முழுமையாக ஒப்படைக்கும் குழந்தைகளுக்குரிய நம்பிக்கையோடு தன்னை நோக்கி, “அப்பா“ என நாம் அழைப்பதை இறைவன் விரும்புகிறார்”

“நாம் வாழும் ஒவ்வொருநாள் சூழலிலும், அனைவரோடும் இணைந்து அன்பு கலாச்சாரத்தைக் கட்டியெழுப்ப இயேசு நம்மை அழைக்கிறார்”

“கார்மேல் அன்னையும் அரசியுமான கன்னி மரியா, இறைவனின் மலையை நோக்கி நீங்கள் மேற்கொள்ளும் உங்கள் தினசரி பயணத்தில் உங்களோடு உடன்வருவாராக”

“குடும்பத்தில் தாத்தாவும், பாட்டியும் கருவூலங்கள். தயவுசெய்து அவர்களை பராமரியுங்கள், அவர்கள் மீது அன்புக்கொள்ளுங்கள், அவர்களை உங்கள் குழந்தைகளிடம் பேசுவதற்கு அனுமதியுங்கள்”



# Humanae Vitae வாழ்வின் உண்மைகளை உறுதி செய்கிறது

அருள்பணியாளர்கள் நாளில், அருளாளர் திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களின் மனித வாழ்வின் புனிதம் பற்றிய திருமடல் குறித்து மும்பை பேராயர் அவர்களின் கருத்து.

மனித வாழ்வு எனப்படும் Humanae Vitae திருமடல், திருஅவைக்கு மாபெரும் கொடை எனவும், இது, வாழ்வு, திருமணம், மற்றும் குடும்பத்தின் இன்றியமையாத கிறிஸ்தவ விழுமியங்களை அறிவிக்கின்றது எனவும், கர்தினால் ஆசுவால்டு கிரேசியஸ் அவர்கள் கூறியுள்ளார்.

மும்பை குருத்துவக் கல்லூரியில் புதிய கல்வி ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் கலந்து-கொண்ட ஏறக்குறைய 300 அருள்பணியாளர்களுக்கு உரையாற்றிய கர்தினால் கிரேசியஸ் அவர்கள், வாழ்வுக்குத் திறந்த மனம் கொண்டிருக்கவும், தம்பதியரை, திருமண அருளடையாளத்திற்கு நன்றாகத் தயாரிக்கவும், அருள்பணியாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன், அதாவது 1968ம் ஆண்டு ஆடி 29ம் திகதி வெளியிடப்பட்ட திருத்தந்தையின் மனித வாழ்வு திருமடலின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டிய கர்தினால் கிரேசியஸ் அவர்கள், மும்பை கத்தோலிக்கத் திருஅவை, எல்லா நிலைகளிலும் வாழ்வைப் பேணிப் பாதுகாப்பதற்குரிய நிலைப்பாட்டில், தடுமாற்ற-மில்லாமல் உறுதியுடன் உள்ளது என்றும் தெரிவித்தார்.

# வெள்ளவத்தை, புனித லோரன்ஸ் ஆலயத்தின் இருவிதமான திருவிழாக்கள்.



வெள்ளவத்தை, புனித லோரன்ஸ் ஆலயத்தின் இருவிதமான திருவிழாக்கள். அவையாவன:- ஆலயத்தின் திருவிழா (2018 ஆவணி மாதம் 12ம் திகதியும், திருவழிபாட்டு ஆண்டின் ஆவணி 10ம் திகதி புனித லோரன்ஸின் திருவிழாவும் கொண்டாடப்படவுள்ளது.

முதலாவது திருவிழாவானது கொழும்பின் தென்புறப் பகுதியான வெள்ளவத்தையில் புனித லோரன்ஸ் ஆலயம் கட்டியெழுப்பப்பட்ட 80வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டமாகும். இதனை அருட்பணி. Dr.J.M. மாசன் (O.M.I), (கொழும்பு பேராயர், 1938 எபிபானியின் திருவிழா நாள்) கொண்டாட முடிவு செய்தார்.

அருட்பணி. F. ரொபட் பர்னாந்து (O.M.I) அவர்கள் இப்பங்கின் முதல் பங்குத்தந்தையாக விளங்கியதுடன், புனித லோரன்ஸ் வீதியில் பங்கு ஆலயமாகவும் அவரது மேய்ப்புப் பணியின் முதற் பணியாகவும் ஆலயத்தை கட்டியெழுப்பினார். போர்த்துக்கேயரின் காலத்தில் கொழும்பு நகருக்கு பாதுகாவல் புனிதராக புனித லோரன்ஸ் அர்ப்பணிக்கப்பட்டு இருந்தமையால், இப்பங்கும் புனித லோரன்ஸ்க்கு அர்ப்பணிக்கப்பட்டது. கொழும்பில் கட்டப்பட்ட முதல் ஆலயமாக இவ் ஆலயம் விளங்கியது. புனித லோரன்ஸ் வெள்ளவத்தையின் ஆதரவாளராகவும், ஆர்வமுடன் வணங்குதற்குரிய புனிதராகவும் விளங்குகின்றார்.

இதன் அடுத்த திருவிழாவானது, பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்ட புனித லோரன்ஸ் ஆலயத்தினை புனித லோரன்ஸ்க்கு அர்ப்பணித்து 50வது வருட நிறைவுக் கொண்டாட்டமாகும். இவ் ஆலயத்தின் இன்றைய நிலையானது அற்புதமான மாளிகையினை ஒத்த விதத்தில் வடிவமைத்தவர் அருட்பணி ரொபட் பர்னாந்து (காலஞ்சென்ற முஹென்டிரன் S.V. ரொட்ரிகோ, திரு I. லிகோரி மற்றும் திரு லம்பிரட் டீ சில்வா ஆகியோர்கள்) ஆவர். இவ் ஆலயத்தின் அர்ப்பண புனித விழாக் கொண்டாட்டமானது 1968ல் பங்குனி மாதம் 6ம் திகதி காலஞ்சென்ற தோமஸ் கர்தினால் குரே ஆண்டகையின் தலைமையிலும் கொண்டாடப்பட்டது.

“மனிதரைப் புழுதிக்குத் திரும்பிடச் செய்கின்றீர், மானிடரே! மீண்டும் புழுதியாகுங்கள்” (தி.பா 90:3) எனும் இறைவார்த்தைக்கு இணங்க இவ் 50 வருட காலத்தில் இவ் ஆலயத்தின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு காலமான குருக்கள் மற்றும் பொதுநிலை மக்கள், பெற்றோர்கள், பெரியோர் அனைவருக்கும் நித்திய இளைப்பாற்றி கிடைக்கவேண்டுமென பிராத்தித்துக் கொள்கின்றோம்.

அருட்பணி ரொபர் பர்னாந்து அவர்கள் 30 வருடங்களும் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கது. மேலும் அருட்பணி மெஸ்கர் மாணிக் முத்துகுமாரன் அடிகளார் 17 வருடங்கள் பங்குத்தந்தையாக பணியாற்றினார். அருட்பணி. ஹீகோ ஜேசுதாசா பர்னாந்து, அருட்பணி சிறில் பெரேரா (OMI), அருட்பணி ஜோசப் பெனடிக் பர்னாந்து, அருட்பணி பொப் ரொட்ரிகோ (OMI). இப்பங்கின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்களித்த குருவானவர்களின் பட்டியலில் குறிப்பிடத்தக்கவர்கள். அத்துடன் இப்பங்கின் நிகழ்கால பங்குத்தந்தையான அதிவண. அருட்பணி மனோகுமரன் நாகரட்ணம் அவர்களது அளப்பரிய சேவையும், பங்கின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பு அளித்தலும் குறிப்பிடத்தக்க விதமாக இருக்கின்றது.

மேலும் உதவிப்பங்குத்தந்தையாக இருந்த காலஞ்சென்ற அருட்பணி J. லீ. பெர்டன் (OMI) நீடிய காலம் பங்கின் சேவைகளில் ஈடுபட்டிருந்தார். அத்துடன் காலஞ்சென்ற அருட்பணி. ஜஸ்டின் பெரேரா அவர்களின் பணியானது 1968ல் விசேடவிதமாக அமைந்தது.

இவ்வாறான நல்லுள்ளங்களின் அளப்பரிய சேவையால் வளர்ச்சியுற்ற புனித லோறன்ஸ் ஆலயமும், இப்புனிதரின் மகிமையும், ஆசீரும் மென்மேலும் பெருகவும், அனைவருக்கும் ஆசீர்வாதம் கிடைக்கவேண்டுமெனவும் வேண்டிக்கொள்கின்றோம்.

***அனைவருக்கும் மரியன்னையின் துணையும் இறையாசீரும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.***

**அருட்பணி. றொபேட் அபேநாயக்க O'cist**


கொழும்பு மட்டக்குளியில் அமைந்திருக்கும் சிறுவர் இல்லத்தில் கத்தோலிக்கர், நல்ல உடல் நலத்துடன் இருக்கின்ற ஏழைக் குடும்பத்தில் உள்ள சிறுவர்கள் வயது 6-10க்குள் சேர்த்துக்கொள்ளப்படுவர். உணவு, கல்வி, தங்குமிடம் இலவசம். மேலதிக விபரங்களுக்கு பின்வரும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்.

**மவுசெவன (MAW SEVANA) சிறுவர் இல்லம்,**
**இல 12, மத்திய வீதி, கொழும்பு 15.**
**தொ.இல 0112529560 (காலை 9.30 – 4.30 வரை)**
(N 2308)

## வேலைவாய்ப்பு

கொழும்பு புறக்கோட்டை பகுதியில் அமைந்துள்ள கருவாட்டுக் கடை ஒன்றில் பொதிகள் வேலை செய்வதற்கு ஆண், பெண் இருபாலரும் தேவைப்படுகின்றனர்.

**மேலதிக விபரங்களுக்கு 0716661188.**
(N 2317)

## ஷாலோம் என்டபிரைசஸ்

**ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் உலர்ந்த கடல் உணவுகள்**

ஸ்பெல்மன் பர்னாந்து
spelman@sltnet.lk

**முகவரி: 270 1/1, 1ம் மாடி, 4ம் குறுக்குத் தெரு,**
**கொழும்பு – 11, இலங்கை.**
**தொ.பே: +94 11 2336041 /+94 777 359892**
**தொலை நகல்: +94 11 2540766**
shalomenterprise104@gmail.com
(N 2318)



## எல்டோ ரை fபிஷ் ஸ்டோர்

**ALDO DRY FISH STORES**

**ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் முகவர்**

**முகவரி: இல 32, ஐ.எக்ஸ்.பெரேரா வீதி,**
**கொழும்பு– 11, இலங்கை.**
**தொ.பே: 011 2344963, 011 2440601**
**தொலை நகல்:– 2393845**
Email:- aldo@sltnet.lk
(N 2319)



## மணமகன் தேவை

கொழும்பு, றோமன் கத்தோலிக்கம், 1988ல் பிறந்த 5' 2'', படித்த தனியார் துறையில் தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு 0768642646**
**Email : sasicruze@hotmail.com**
**Whats App : 0775497806**
(N 2157)

## வீடு விற்பனைக்கு

வத்தளை நாயக்ககந்தை 107, 260, 275 பிரதான பஸ் வீதிக்கு அருகில் உள்ள வீதியில் 4:10 நிலத்துடன் கூடிய வீடு ஒன்று விரைவாக விற்பனைக்கு உண்டு. நாயக்ககந்தை ஆலயம், நல்லாயன் பாடசாலை (Keels Superக்கு நடந்து போகும் பாதை) அருகில் அமைந்துள்ளது. வியாபாரம் மற்றும் வசிப்பிடம் ஒன்றும் அமைத்துக் கொள்ளும் நிலத்துடனான சகல வசதிகளுடனும் கூடிய இடமாகும்.

**தொடர்புகளுக்கு 0776929388**
(N 1945)

## சுகுமார் றிலிஜஸ் றிபொசிற்றரி





- **இங்கு அனைத்துவிதாமான திருச்சுரூபங்கள், புனிதர்களின் படங்கள், செபப்புத்தகங்கள், கத்தோலிக்கர்களுக்கு தேவையான அனைத்தும் எம்மிடம் உண்டு.**
- **மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**







**இல 16, ஸ்ரீ இராமநாதன் வீதி, கொழும்பு 13.**
**தொ. இல : 011 4332397, 011 2433197**
(N2205)

# "தூய வாழ்வினூடாக சீடத்துவத்திற்கு அழைப்பு"

சுதேச குருக்கள், துறவியர் தினம் 29.07.2018

## பாப்பிறை மறைபரப்புச் சபைகளின் தேசிய இயக்குனரின் செய்தி



தேசிய குருக்கள் தினத்தை முன்னிட்டு திருப்பாலத்துவ சபையின் தேசிய இயக்குனர் அருட்தந்தை பெசில் ரொகான் பர்னாந்து அடிகளாரின் செய்தி....

2018ம் ஆண்டின் தேசிய குருக்கள் தினத்தை சிறப்பித்து சீடர்களுக்கு அளிக்கும் அழைப்பிதழ் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வினூடாக இறைவனடி சேர்ந்த எமது மதிப்பிற்குரிய தோமஸ் கர்தினால் குரே ஆண்டகை புனிதராக உயர்த்தப்பட இறையருள் வேண்டி எங்களுடைய அன்றாட செபத்தில் மன்றாடுவோம்.

உண்மையின் புனிதத்தன்மை என்பது "பாவத்தை துறத்தல்" பாவத்திலிருந்து விலகுதலாகும். அது இலகுவான காரியமல்ல எனினும் இறையுறவை இழந்துவிடாது காத்துக்கொள்ள வேண்டும். நவீன உலகில் தன் குருத்துவ வாழ்க்கையை நல்முறையில் வாழ்ந்தவரான தோமஸ் கர்தினால் குரே ஆண்டகையை அடையாளப்படுத்தலாம். அவ்வாறான வாழ்க்கையை வாழ திருச்சபையானது கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுக்கின்றது.

பிறரை நாம் இறைவனிடம் கொண்டுசேர்ப்பதற்கு முதல் நாம் இறையுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். பிறரை பரிசுத்தமாக்க முயற்சி செய்வதற்கு முதல் நாம் பரிசுத்தமான வாழ்வு வாழ வேண்டும் என புனித கெகலி கூறுகின்றார். தன்னை முழுமையாக அர்ப்பணிப்பதே குருத்துவ வாழ்வின் சிறப்பாகும். எப்போதும் இறை விருப்பத்தை நாடுவதும், இறைவனின் குரலுக்கு செவிமடுப்பதும் இறை உறவை மேலும் வளப்படுத்துகின்றது. அதேபோன்று யோவான் நற்செய்தியில் கூறப்படுவது போன்று "நீ என்னை தெரிந்துக்கொள்ளவில்லை நான் தான் உன்னை தேர்ந்துக்கொண்டேன்" அவ்வாறு செய்தது பலன் கொடுக்கவும் அவை பலன் அளிக்கவுமே, நவீன உலகில் இளைஞர் யுவதிகள் வாழ்வில் ஏற்படும் சவால்களில் இறைவனூடாக அவற்றை வெற்றிக்கொண்டு, திராட்சை தோட்டத்திற்கான வேலையாட்கள் குறைந்து காணப்படும் இக்காலக்கட்டத்தில் இறை குடும்பத்தில் பிள்ளைகளைக் கொண்டு சேர்ப்பது எமது கடமையாகும். விசேடமாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறுவது போன்று எந்நேரமும் விடுதலையின் சிலுவையை பாவத்திலிருந்து விலக்கி, மகிழ்ச்சியின் அடையாளமாக கொண்டு செல்வது குருக்களுக்கு அழைப்பு விடுக்கின்றார். மண்ணுலகில் கிறிஸ்தவ மக்களாகிய நாம் கிறிஸ்துவின் திருவுடலை தூய ஆவியின் ஆலயமாக நிரந்தரமாக வளர்ச்சியடைய செய்வதில் கிறிஸ்துவின் பங்காளிகளாகின்றனர்.

**அருட்பணி. பெசில் ரொகான் பர்னாந்து**
**பாப்பிறை மறைபரப்பு சபை, தேசிய இயக்குனர்**




## அப்போஸ்தலரான புனித. பேதுரு சபை



1889ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் சென் நகரில் ஜான்பிகார் என்ற பெண்மணியால் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது.

இதன் முக்கிய நோக்கம் இறையரசைக் கட்டியெழுப்ப ஒளியாகத் திகழவேண்டிய குருக்களையும், துறவற சபையினரையும் பயிற்றுவித்து உருவாக்குதலே ஆகும். இவர்களின் வாழ்வை வளப்படுத்த தேவையான சகல உதவிகளையும், குருமடங்களுக்கும், துறவறசபை இல்லங்களுக்கும் வழங்கவும், தேவ அழைத்தலைப் பெருக்கவும், அதிவிசேடமாக சுதேச குருக்களை உருவாக்கவும், செபத்தாலும், பரித்தியாகத்தாலும் ஒத்துழைப்பை வழங்கி, திருச்சபைக்கு உதவிக்கரத்தை நீட்டுவதே அதன் பிரதான நோக்கமாகும்.

### நோக்கங்கள்.

- ✦ மறைப்பரப்பு நாடுகளில் குருக்களாகவும், துறவிகளாகவும் பயிற்சிப்பெறுவோரது தேவைகளுக்காகவும், பயிற்சிகளுக்காகவும் செபத்தாலும் நன்கொடையாலும் உதவி செய்தல்.
- ✦ அவ்வாறான இறையழைத்தல்கள் மேலும் அதிகரிக்கவும் எங்களிடையே இருந்து, பிற நாடுகளுக்கு மறைத்தூதுவர்களை அனுப்புவதற்கு தேவையான வலிமையை கிறிஸ்தவ திருச்சபை மறைத்தூது நாடுகளில் கட்டியெழுப்பப்படவும் உதவியாக இருத்தல்.
- ✦ இந்த நோக்கத்திற்காக கடந்த நூற்றாண்டில் இச்சங்கத்தின் உறுப்பினர்கள் தங்களது செபங்களாலும், தங்களது நன்கொடையினாலும் பாரிய ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்.
- ✦ ஆபிரிக்கா, ஆசியா மற்றும் தென் அமெரிக்கா மட்டுமல்லாமல் தீவு நாடுகளில் பணியாற்றிய வருகின்ற ஆயிரக்கணக்கான குருக்கள் மற்றும் துறவிகளின் மறைத்தூதுப் பயிற்சிகளை நடாத்த இச்சங்கத்தின் நன்கொடையால் இயலுமாகியுள்ளது...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## புனித பேதுருவின் குரு மாணவர்களுக்கான தேசிய பொக்கிஷ நிதி

கீழே கையொப்பமிட்டுள்ள நான், பாப்பிறையின் அப்போஸ்தலரான புனித. பேதுரு சபையில் வருடாந்த/சதாகால அங்கத்துவத்தை பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்னும் இறையழைத்தல்கள் வேண்டி மன்றாடவும், என்னால் முடிந்தவகையில் சமுதாயத்திற்கு உதவி செய்வதற்கு ஒத்துழைப்பேன். இறையரசின் மறைதூதர்களாவதற்கு அருள் வேண்டுவோம். நீங்கள் எவ்வகையில் பண உதவி செய்ய விரும்புகின்றீர்? காசோலை, காசுக்கட்டளை, பணம், சொத்துக்கள் வழியாக, காசோலையாய் இருப்பின் **Pontifical Mission Societies** என்னும் பெயருக்கும், காசுக்கட்டளையாயின் பொரள்ளை தபால் நிலையத்திற்கும் அனுப்புங்கள். சொத்துக்கள் மூலமாக செலுத்துவதாயின் நாம் உங்களை அதற்காக சந்திக்க வேண்டியிருப்பதால் இது பற்றிய மேலதிக தகவல்களை கடிதத்தின் வழியாய் அறியத்தருவோம். இந்நிதிக்காக என்னுடைய உதவி தொகை ரூபா .......... இச்சங்கத்தினால் அச்சிடப்படும் சஞ்சிகையை பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?

பெயர்: ......................................
முகவரி: ....................................
தொலைபேசி/தொலைநகல்/மின்னஞ்சல்:
........................................
கையொப்பம்: ................. திகதி: ..................

**அருட்தந்தை. பெசில் ரொகான் பர்னாந்து**
**தேசிய இயக்குனர்,**
**பாப்பிறை மறைபரப்பு சபைகள்,**
**இல 19, பல்கம் இடம், கொழும்பு – 08.**
**தொலைபேசி: 011-2685673**
**மின்னஞ்சல்:** ndpms@sltnet.lk

## "தூய வாழ்வினூடாக சீடத்துவத்திற்கு அழைப்பு..."

**அருட்சகோதரி தர்சினி** (P H), **தமிழ் பிரிவு, பாப்பிறை மறைபரப்பு சபை, தேசிய செயலகம்**

சுதேச குருக்கள் துறவியர் தினத்தினை ஒவ்வொரு வருடமும் நாம் நினைவு கூறுகின்றோம். அன்றைய தின ஞாயிறு குருக்கள், துறவிகளின் மேன்மையினை மிகைப்படுத்தும் ஒரு நாளாகவும் இந்நாள் சிறப்பிக்கப்படுகின்றது. இவ்வருட அன்றைய நாளுக்கான கருப்பொருளாக இருந்தது "தூய வாழ்வினூடாக சீடத்துவத்திற்கு அழைப்பு" தன் குருவுக்காக தன்னையே அர்ப்பணிப்பதை விட மேலானது எதுவும் இல்லை என்பதாகும். இந்த சீடத்துவ வாழ்வினை எல்லோரினாலும் ஏற்று வாழவும் முடியாது. எல்லோரும் இந்த சீடத்துவ வாழ்விற்கு தகுதி உள்ளவர்களா? என பார்க்கின்ற போது இறைவன் தன் பணிக்காக அழைத்த ஒவ்வொருவரும் தகுதியானவர்களும் அல்ல, எல்லோரும் பணியை விரும்பி ஏற்றவர்களும் அல்ல. "நீங்கள் என்னை தேர்ந்து கொள்ளவில்லை நானே உங்களை தேர்ந்து கொண்டேன்" என்ற வார்த்தைக்கு அமைய, இறைவன் தனக்கு தேவையானவர்களை தேர்ந்தெடுத்து, தனக்கு...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## இம்முறை பாப்பிறை மறைப்பரப்பு திருப்பாலத்துவ சபையின் தேசிய இயக்குனர் – அருட்தந்தையர்களுக்கான வருடாந்த சர்வதேச மாநாடு உரோமையில் இடம்பெற்றது.

2018 வைகாசி மாதம் 27ம் திகதி முதல் ஆனி மாதம் 2ம் திகதி வரை பாப்பிறை மறைப்பரப்பு திருப்பாலத்துவ சபை தேசிய இயக்குனர் அருட்பணியாளர்களுக்கான வருடாந்த சர்வதேச மாநாடு இம்முறை உரோமையில் இடம்பெற்றது.

பாப்பிறை மறைபரப்பு திருப்பாலத்துவ சபையின் பொறுப்பதிகாரி அதிமேதகு பிலோணி பர்னாந்து ஆண்டகையின் தலைமையிலும், தலைவர் அதிமேதகு ஜொன்னீ பியாத்ரோ தல்தோசொ பேராயர் மற்றும் பாப்பிறை மறைப்பரப்பு திருப்பாலத்துவ சபையின் சர்வதேச செயலாளர்களின் பங்கேற்பில் இம்மாநாடு இடம்பெற்றது. இதற்காக உலக நாடுகளிலிருந்து தேசிய இயக்குனர் அருட்பணியாளர்கள் 135 பேர் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பல நாடுகளில் இடம்பெறும் மறைத்தூது பணி செயற்பாடுகள் பற்றி, நீண்ட நேரமாக கலந்துரையாடப்பட்டதோடு,...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## 2017 ஆம் ஆண்டுக்கான சுதேச குருக்கள்/துறவியர் தின நிதிச் சேகரிப்பு

| மறைமாவட்டம் | தொகை |
|---|---|
| அநுராதபுரம் | 267,860.00 |
| பதுளை | 127,065.00 |
| சிலாபம் | 730,455.00 |
| கொழும்பு | 3,514,260.50 |
| காலி | 134,046.00 |
| யாழ்ப்பாணம் | 300,627.00 |
| கண்டி | 441,901.00 |
| குருநாகல் | 428,080.00 |
| மன்னார் | 265,111.00 |
| இரத்தினபுரி | 178,522.00 |
| மட்டக்களப்பு | 117,710.00 |
| திருகோணமலை | 70,000.00 |
| மொத்தம் | 6,575,637.50 |

# வரலாற்று சிறப்புமிக்க வஹாக்கோட்டை
# புனித அந்தோனியார் தேசிய திருத்தலம்
## புனித அந்தோனியாரின் பிறப்புத் திருவிழா – 2018



இரத்தினப்புரி ஆயர்
மேதகு கிளீட்டஸ் சந்திரசிறி (பு.ஆ.ச)
ஆண்டகையின் தலைமையில்

திருவிழா சிறப்புத் திருப்பலி – 2018.08.19
காலை 8.30 மணிக்கு

மாலை ஆராதனை 2018.08.18 – இரவு 7.00 மணிக்கு

ஏனையத் திருப்பலிகள் : நண்பகல் 12.00, மாலை 5.00

(Q18N3168)

- ✳ வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, திருத்தலத்தின் மதிப்பினை பாதுகாக்கும் வண்ணம் நடந்து கொள்ளவும்.
- ✳ இப்புனித பூமி அமைந்துள்ள இடத்திற்குள் மதுபானம், இசைக்கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், மற்றும் செல்லப்பிராணிகள் ஆகியவற்றை கொண்டு-வருவதை தவிர்க்கவும்.
- ✳ திருத்தலத்தின் உள்ளேயும், வெளியேயும் சாதாரண உடை அணியவும், உங்களது கூடாரங்களில் இருக்கும்போதும் ஒழுக்கமான உடைகளை அணிவது அத்தியாவசியமாகும்.
- ✳ தேவையற்ற விதமாக தங்க நகைகள், பணம், மற்றும் பெறுமதியான பொருட்களை கொண்டு வருவதை தவிர்க்கவும்.
- ✳ திருத்தல பூமியில் உள்ள வீடுகளை பெற்றுக்கொள்பவர்கள் அவற்றை துப்பரவாகவும் சேதம் விளைவிக்காத வண்ணமும் பாவிப்பது அவசியம் என்பதை கருத்திற் கொள்ளவும்.

அருட்பணி : டொம் சன்சன வசார (பு.ஆ.ச) திருத்தல பரிபாலகர்,
புனித அந்தோனியார் தேசிய திருத்தலம், வஹாக்கோட்டை 0775 – 515616 066–2289210



# மாபோல புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தின்
## 202வது வருடாந்த திருவிழா, – 2018



கொடியேற்றம் 10.08.2018 (வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு

நவநாட்கள் ஆவணி 10 முதல் 17ம் திகதி வரை தினமும் மாலை 7.00 மணிக்கு

12 ஆவணி காலை 7.00 மணிக்கு மரித்த ஆன்மாக்களுக்காக திருப்பலியானது சேமக்காலையில் நடைபெறும்.

மாலை ஆராதனை 2018.08.18
மாலை 7.00 மணிக்கு
அருட்பணி. மகேந்திர குணதிலக்க
இலங்கை "செடேக்" நிறுவன இயக்குனர்.

திருவிழாத் திருப்பலி 19.08. 2018
காலை 8.00 மணிக்கு
அருட்பணி. சுசித் சில்வா
பொரள்ளை அக்குவைனாஸ் கல்லூரியின் இயக்குனர்.
காலை 11.00 மணிக்கு – தமிழ் திருப்பலி
மாலை 5.00 மணிக்கு – ஆங்கில திருப்பலி
(திருப்பலியைத் தொடர்ந்து திருச்சுரூப பவனியும், ஆசீர்வாதமும் இடம்பெறும்).

ஆவணி 20ம் திகதி மாலை 7.00 மணிக்கு நன்றித் திருப்பலி – கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் 2018ம் ஆண்டில் குருத்துவ திருநிலைப்படுத்தப்பட்ட குருக்களால் ஒப்புக்கொடுக்கப்படும்.

பங்குத்தந்தை. அருட்பணி. எனஸ்ட் டி மெல்,
பங்குமேய்ப்புப்பணி மன்றம்


(Q18N3170)

# குவேஸ்ட் டெஸ்டினேஷன்ஸ் மூலம் 2018ம் ஆண்டின் சுற்றுலாப் பயணத்திற்காக உங்களுக்கு கிடைக்கப்பெறும் அரிய வாய்ப்புக்கள்.

2018 ஆவணி மாதம் 11ம் திகதிக்கு முன் உங்களுக்கான ஆசனத்தை பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பிட்ட ஆசனங்கள்

## இத்தாலி



- உரோமை
- வத்திக்கான்
- லங்சியானோ
- அசீசியா
- புனித பியோ அருட்தந்தையின் தேவாலயம்
- லொரெடோஹி புனித இல்லம்
- பொலிஹி புனித பெரிஷினு புனிதரின் தேவாலயம் (புற்றுநோய்களுக்காக வேண்டிக்கொள்ளும் புனிதர்)
- பாதுவா நகர் புனித அந்தோனியார் பேராலயம் (பெசிலிக்கா)
- மூன்று ரோஜாக்களின் மாதா தேவாலயம்

~~05 நாட்கள்~~ 07 நாட்கள்

~~Rs. 310,000/-~~
ரூபா. 250,000 /-
பயணம் :- 05 ஐப்பசி 2018

## மெஜகோரி



- பாதுவா நகரில் புனித அந்தோனியார் பேராலயம் (பெசிலிக்கா)
- ஒரு நபருக்காக ரூபா 10,000 விலைக் கழிவுடன் மேலும் விசேட சேவைகள்
- மெஜகோரியில் ஆன்மீக நிகழ்ச்சிகள் இடம்பெறும்.
- 5 Star (அதி நவீன) விமானப் பயண வசதிகள்

~~05 நாட்கள்~~ 06 நாட்கள்

~~Rs. 210,000/-~~
ரூபா. 185,000 /-
பயணம் :- 20 ஐப்பசி 2018

## பாத்திமா




- பாத்திமாவில் மேலதிகமாக ஒரு நாள் தங்குதல்
- புனித அந்தோனியாரின் பிறப்பிடம் மற்றும் லிஸ்பனில் பேராலயத்தை பார்வையிடல்
- ஸ்பானியாவில் சந்தியாகோ டீ கொம்பெஸ்டேலாவில் புனித ஜேம்ஸ் புனிதரின் பெசிலிக்கா (மேலதிகமாக)
- அதி நவீன விமானப் பயண வசதிகள்

~~05 நாட்கள்~~ 06 நாட்கள்

~~Rs. 240,000/~~
ரூபா. 190,000 /-
பயணம்:- 15 புரட்டாதி 2018

(Q18N3178)

Qwest Destinations.
குவேஸ்ட் டெஸ்டினேஷன்ஸ் பிரைவேட் லிமிட்டட்
119 A, காசல் வீதி, கொழும்பு - 08
தொ.பே 011 784 2525
மின்னஞ்சல் tours@qwestdestinations.com

தொடர்பு கொள்ள
077 649 0000
* Prices are strictly subjected to change due to exchange fluctuations

தெரிவு செய்யப்பட்ட வரவட்டைகளுக்கு 12 மாதங்கள் 0% பயணச் சலுகைகள்
HNB Nations Trust Bank American Express IATA
நிபந்தனைகளுக்கு உட்பட்டது.*



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்